1/31
2-76

உ

சிவமயம்.

மார்க்கண்டேயர் விலாசம்.

இயலிசைநாடகத்திற்சிறந்த
வல்லூர்.
வேங்கடராமவுபாத்தியாயரவர்கள்
முதலிய சிலர்கள் பாடியது,

இஃது,
புராணநடைக்கிசையும்படியாகப்
பலபிரதிகளைக்கொண்டு
சங்கீத சாயித்தியத்திற் சிறந்தவராகிய
கோகுலாபுரம்.
மலையானந்தசுவாமிகளின் மாணாக்கருளொருவராகிய
அருணாசலமுதலியாரால்
பார்வையிடப்பட்டு
மார்க்கபுரம்.
முத்துசெட்டியாரால்
தமது,
ஸ்ரீசவிராஞ்சனிமுத்திராக்ஷரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

தாது௵ சித்திரைமீ

கடவுள் துணை.

மார்க்கண்டேயர்விலாசத்தின்

கதையின்வரலாறு

அகவல்,

சீர்மலிந்தோங்கிச் செழிப்புற்றேங்கினும்
பேர்பெற்றிட மிகப் பிரபலமான
சத்தியபாகரந் தன்னையாண்டிடும்
அத்தனுமயமனும் அழகியகொலுவில்
இருந்திடுங்காலையி யிந்திராசனும்
அருந்தவவசிஷ்டரும் அழகியவியாசரும்
விசுவாமித்திரரும் வியமுறவந்தபின்
பசுபதிதன்னைப் பணிந்திருந்தாயேன்
மிருகண்டமுனியும் விருப்பமாய்வந்தார்
அக்காலையிலே அச்சபையுள்ளோர்
தற்காலத்தியைச் சாற்றிடும்வியாச[illegible]ப
பாத்துமேஐயா பாலகில்லார்க்கு
வர்த்திடக்கதியும் இல்லையோயுண்டோ
சொல்லுவீரென்னச் சுதனிலாதவர்க்கு
இல்லைநற்கதியும் மென்மியம்பிடவே.
கேட்டுமிருகண்டர் கிலேசத்தைக்கொண்டு

வாட்டமாயெழுந்து வரும்வீதியினிலே
சோலையைக்கண்டு சோகமாயிருக்க
வேலைசெய்சேஷரும் விடாய்தணித்திடவே
அவருக்குபகாரம் அன்புறச்செய்கையில்
தவறில்ஞானச் சதிராளைக்காண்க
சத்தரிஷிதேவியார் சந்நிதியில்வந்து
அம்மணியென்றே அழைத்திடச்சதிராள்
செம்மையாய்வந்து சோவேபந்தை
யாடுவோம்வாவென் றழைத்திடக்கூடி
யாடியேகளைத்த அம்மாதர்க்குச்
சலந்தாரேனுண்டு சீரவிடாயை
நலமுடன்றணிப்பீர் நங்கைகளென்னே
சுதனுண்டோவுனக்குச் சொல்லுவாயென்ன
விதனமாயில்லையென விளம்பினளவரும்
பாவிபாவியென்று பாராமலவர்கள்
கூடியேபோனபின் கோலமாமுனியும்
களைதெளிந்தெழுந்து கர்த்தனை நினைத்து
உளமிகவாடியே யுயர்மனை வந்து
ஞானச்சதிராளை நன்றுபழைத்துதான்
போனதும்நடந்ததும் புத்திரனில்லார்க்குக்
கதியில்லையென்று கனகவேதவியாசர்
விதிமுறைசொன்னதும் விளம்பவுமாது
தன்னிடமாதர் சார்ந்ததும்பந்தை
யுன்னிதமாகவே யுவந்தாடியதையும்
தாகநீருந்தத் தான்சொன்னதையும்
மாகமார்பின்னூர் மைந்தனுமுண்டோ
உனாயெனக்கேட்ட வுளமையுங்கண்டு
காவுடனில்லையெனக் [illegible]றினேனவரும்
திட்டியே[illegible]ஞர் [illegible]வகிவாவென்றே
கெட்டியாய்காதை [illegible]ட்டியேவாடி
யிருக்கிறகாலை[illegible]ரிமையாய்நீரும்
உருக்கமாய்வந்து [illegible]ாத்திடீரிரண்டும்
சரிப்பட்டதேயிச் சங்கைக்கென்செய்வோம்
திறமுளமுனியே செப்புவீரெனக்கு
என்னவேமுனியும் ஈசனைநோக்கித்
துன்னியதபத்தைத் துலக்கமாய்ச்செய்தால்

வள்ளலார்புத்திர வரமதுதருவார்
நள்ளிருட்குழலே ஞானச்சந்திரரே
வந்திடுவாயென் மகிழ்வுடனிருவருஞ்
சந்திரசேகரனைத் தவத்தியஞ்செய்து
பதினறுவயதுளப் பாலனைப்பெற்றெடுத்து
குதலைசொற்கேட்டு கூப்பிட்டழைத்து
முத்தமுமிட்டு முதிரைந்தாம்வயதில்
வித்தையையோதி வேடிக்கைபார்த்து
மனமதுமகிழ்ந்து மாமுனியிருக்க
புனிதரோமுனைக்குப் போதமார்வித்தைகள்
எல்லாங்கற்பித்து மென்னதாணுக்கும்
கல்லீலன்று கழறியவயதும்
ஆகுதேசரியாய் ஐயையோமனமும்
வேகுதேசிவனை வினவாதுவந்தோமே
தனையனும்வேண்டி தரையதுமெழுகி
அனமதுவுண்டு அருந்தவஞ்செய்து
பெற்றேனேமகனைப் பிஞ்ஞகாவுனக்கு
குற்றமதேனுங் குறைகளேதேனும்
செய்தனோபெரியோர் சித்தமும்நோக
வைதனோவென்ன வாறிதோவறியேன்
என்றுமேகலங்கி யேங்கியேவாடி
நின்றிடுந்தாய்க்கும் நேயதந்தைக்கும்
வந்தனஞ்செய்து மனக்குறையாற்றி
தந்தையேதாயே யெனக்கொருகுறைவும்
வாராதுநீங்கள் மனமதுமகிழ்ந்து
சீராகயிருங்கள் சிவனிடமியானும்
பூசனைபுரியப் போய்வாரோனென்று
வாசமாமலர்கள் வண்மையைப்பறித்து
கந்திரண்பனுக்குநலமுடன்சூடி
செந்திருகரத்தனைச் சென்னிமேற்கூப்பி
அரகரசிவசிவ அநாதியேபோற்றி
புரமெரிசெய்த புனிதனேபோற்றி
அடியேனையாளும் ஆண்டவர்போற்றி
படிமிசையெனக்கண் பார்ப்பவாபோற்றி
என்றுமேபணிந்தங் கிருந்திடுங்காலையிற்
றென்றிசையாளுந் திறமிகுமனும்

சித்திராபுத்திரனைச் சீக்கிரமழைத்து
பத்தியாய்க்கணக்கைப் பார்த்துசொல்லென்ன
நன்றெனப்பார்த்து நாயகநமனே
இன்றுமார்க்கண்ட னெழுதினதோலை
முடிவென்றுசொல்ல மூர்க்கமாய்க்கையிற்
றடிதனைக்கொண்ட தடமுறுங்கால
தூதரையனுப்பிச் சுருக்கினிற்கானில்
நாதனைப்பூசை நாடிடுஞ்சுதனை
கைப்பிடியாகக் கட்டிக்கொண்டிங்கு
இப்பவேவருவீ ரென்றிடத்தூதர்
சீக்கிறமாய்வந்து செல்வமார்க்கண்டனை
பார்க்கவும்பயந்து பலமொழியுரைத்து
மைந்தனேயுன்னை மரலியுமழைத்தார
வந்திடுவென்ன வாரதேயிலையேன்
தொந்தரைசெய்கிறீர் சுவாமிக்குப்பூசை
விந்தையாய்ச்செய்யும் வேளையிதாக்கும்
ஆதலால்நீங்க ளப்புறமோடிப்
போதலேநன்றெனப் புகன்றெழிற்கண்ணில்
அக்கினிப்பொறியும் அதிகமாய்வீச
நிற்கவுந்தூதர் நெருங்கவுங்கூடா
தோடியேநமன்பா லுரைத்தனன்வனும்
சாடுறேனென்று சடுதியிற்கிடாவி
லேறியேதூத ரிரஞ்சிடவந்து
தூரியேயவனைத் துவம்சமுஞ்செய்வேன்
பாரீரெந்தன் பராக்கிரமமிப்போ
வாரீர்தூதரே யவனையுமெனக்கு
காட்டுங்களவனைக் கட்டுறேன்சிவனை
ஓட்டுறேனென்றே யுறுமிக்கதும்பி
பாப்பாரப்பாரப்பயலே பயமில்லாமல்
தோர்ப்பானசொல்லைத் தொடுக்கிறாயென்னடா
வாடாவென்றுமே வழைத்திடநமனைப்
போடாமூடா புத்திகெட்டவனே
ஐயனார்பூசையை யானுமேநன்றாய்
செய்யுங்காலையிற் சிவபூசைவேளையிற்
சாடிவந்ததுபோற் கறேலெனவெதிரில்
நிறங்கெட்டமூடா நிற்காமலோடி

போவதேநல்லது போகாமல்விட்டால்
சாவதேயுனக்குச் சார்ந்திடும்வேறே
கண்டனுமைந்தன் சங்கரர்தயவால்
உண்டுபண்ணிட்டே னுண்மையாய்ச்சொன்னேன்
எல்லிடும்போது ஈசனுரைந்து
குண்டோதரனைக் கூப்பிட்டுநீயும்
சண்டனெதிர்த்துச் சண்டைகள்செய்து
வென்றுமேநமது மெய்யன்மார்க்கண்டனை
இன்றுமேகார்ப்பா யென்றனுப்பவும்
சரேலெனவந்து சண்டனையெதிர்த்து
ஓரேமொழிகேளா யுண்மையாயிப்போ
மைந்தனைபிடிக்க வாகாதுன்னாலே
சுந்தரசிவனைத் தோத்திரஞ்செய்யும்
காலமாதலினாற் காலனேநீயும்
சாலவனேயுனதூர் சார்ந்திடல்நன்றும்
போவெனச்சொன்னான் புகழ்குண்டோதரனும்
ஆவெனவாய்யக் அச்சண்டன்றிறந்து
உன்னையுமிவனையு முனையனுப்பிட்டவன்
றன்னையுமிப்போ சடுதியிர்கட்டுவேன்
பாரடாவென்று பாசமூவீச
ஆரடாவென்று ஆண்டவனெழுந்து
நடனஞ்செய்காலே நன்குடநீட்குத்
திடமுடனுதைக்க திட்டனமறலியும்
பூமியில்விழவே பூமாதேவியும்
சாமியென்று சஞ்சலப்பட்டு
பாரம்பொறுமற் பாதவித்திருக்கும்
நேரத்தில்நாரதர் நேர்ந்துதேறுதலைச்
சொல்லிவைகுந்த சுவாமியைக்கண்டாக்
மெல்லியேகாப்பார் விடைதாவெனவே
போன்பின்மாதும் புவியளந்தோனைத்
தானுமேநினைத்தால் சக்கரத்தோனும்
வந்துமேமாதை வாழ்த்தியுந்தேற்றியும்
புந்தியுமகிழ்வுறப் போதனைசெய்து
சிவன்பக்கல்நீயுஞ் செல்குவாய்நானும்
அவரிடம்வந்து அதற்குவேண்டியதோர்
யுத்தியைச்சொல்லி யுபாயமாய்வனை

இத்தினந்தானே யெழுப்பலாமெனவே
மாதுமப்படியே வருகவுமற்ற
தீதிலாத்தேவருஞ் சேர்ந்தங்குவந்து
மாலியையெழுப்பி வகைதனைச்சொல்லி
குறைவிலாப்பூசை குறித்திடுமதிக
யெழில்மார்க்கண்டருக் கென்றுபதினாராய்
பழுதிலாவயதைப் பசுபதிகொடுக்கப்
பெற்றுமேசென்றார் பின்பந்தனமனும்
நற்றிசைக்கேகி ஞாயமாய்த்தான்றன்
அரசினைசிரா யாண்டிடுங்காலை
வாமதுபெற்று மரவுரிதரித்து
சடைமுடிபூண்டு தவவனஞ்சென்று
கடவூரானைக் கருத்தினிலெண்ணி
சிரஞ்சீவியெனப்பேர் ஜெயமுடன்பெற்று
நிரந்தரம்வாழ்ந்த நிட்சயரான
மார்க்கண்டவிலாச மாமென்பதனை
தீர்க்கமாயச்சிற் றிருத்தியேபதிதெத்
தேசங்கள்தோருஞ் சிலாமணியாக
வாசமாய்ச்செய்தோம் மனமதுமகிழ்ந்தே
மார்க்கண்டன்சரிதை மகிழுடன்படிப்போர்
தீர்க்கமாய்க்கேட்டு சிந்திப்பவர்க்கும்
திருக்கடவூர்வாழ் சிவன்மனமகிழ்ந்து
பெருக்கமாய்வாழ்கப் போருள்புரிவார்
செல்வமும்புகழுஞ் சிறப்பையுந்தருவார்
கல்விசம்பத்துக் கடவுளுமீவார்
புத்திரசம்பத்தும் பொருந்தியஞானம்
அத்தனுமமூர்தலிங் கேசருமவற்கு
சித்தியதாகச் செய்வனென்னாளும்
நித்தியமங்களமாய் நிரந்தரம்வாழியே

அகவல் - முற்றியது

கடவுள்துணை.

மார்க்கண்டேயர்விலாசம்.

விநாயகர்தோத்திரம்.

காப்பு.

வெண்பா - இராகம் - சங்கராபரணம்.

மானிலமெல்லாம்போற்று மணிவயல்சூழ்திருக்கடவூ
ரானைநிதந்துதிசெய்யுநல்வேத - ஞானமுள்ள
மார்க்கண்டவிலாசமதை மகிழ்வுடனேபாடுதற்குக்
காக்கின்றகஜமுகன்றாள் காப்பு.

சுப்பிரமணியர்தோத்திரம்- விருத்தம்-இ-ம்-தோடி.

செந்திருவாழுஞானச் செயல்மிருகண்டருக்கு
வந்தமார்க்கண்டனார்தன் மகிமையைவிலாசஞ்செய்ய
அந்தமாமயிலிலேறு மறுமுகவேலர்தம்மைச்
சிந்தையில்மகிழ்கொண்டு திருவடிசரணஞ்செய்வாம்.

சிவன்தோத்திரம் - இ-ம்-காம்பகாம்போதி.

சடைமுடிதரித்தஞானத் தபோதனர்போற்றுகின்ற
கடவூரிலமர்ந்தவெங்கள் காலகண்டனைத்துதித்து
இடரினையொழித்தநல்ல வெழில்பெருமார்க்கண்டேயர்
நடைபெறுவிலாசஞ்சொல்ல நாதனைப்பணிகுவோமே

விஷ்ணுதோத்திரம்-இ-ம்-பைரவி.

அந்தமுமாழுமிக்க வறிவுடனேயுதித்த
விந்தசேர்மார்க்கண்டேயர் விலாசத்தைக்கூறுதற்கு
சந்ததமென்னையாளுஞ் சங்குசக்கரசோதண்ட
வுந்திபூத்தோன்பதத்தை யொருமையாய்ப்பணிகுவோமே

உமையவள்தோத்திரம்-இ-ம்-தோடி

காட்சியாய்மிருகண்டையர் களிப்புடனீன்றெடுத்த
மாட்சியாய்ப்பூசைசெய்யு மார்க்கண்டர்விலாசந்தன்னை
சூட்சியாய்ப்பாடுதற்குச் சுந்தரிகெவுரியஞ்ச
லாட்சிமீனாட்சிதன்னை யன்பொடுபணிகுவோமே

இலட்சுமிதோத்திரம்-இ-ம்- வசந்தா.

நித்தமுந்தவத்தைச்செய்த நிலைபெறுமிருகண்டையர்
புத்திரனாகவந்தபுகழ்பெறு மார்க்கண்டேயர்
சுத்தமாங்கதையைநாயேன் றுதியுடன்விலாசமாக
வித்தரைமீதிற்சொல்ல விறைஞ்சுவோந்திருவைத்தானே

சாஸ்வதிதோத்திரம்-விருத்தம்-இ-ம்-காம்போதி.

மாதவத்துயர்ந்தபொன்னின் வளர்தனுந்தன்னின்மிக்க
நீதமாங்கடவூரானை நினைவினிற்பூசைசெய்து
வாதையையொழித்தஞான மார்க்கண்டர்விலாசஞ்செய்ய
சீதளமுகத்தாள்வாணி திகழ்பதந்துதிசெய்வோமே

குருவணக்கம்-விருத்தம்-இ-ம்-தோடி.

நற்றவமிருகண்டையர் நாதனைப்பூசைசெய்து
பத்தியாயீன்றெடுத்தபாலன் மார்க்கண்டன்காதை
இத்தலமறியயானு மினிதுடன்விலாசஞ்செய்ய
உத்தமவேதஞான முடையசற்குருதாள்போற்றி

அவையடக்கம்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

சடையுடைக்கங்கையானைத் தவஞ்செய்மார்க்கண்டனாதந்
திடமுளவிலாசந்தன்னைச் செந்தமிழோர்கள்முன்னே
கடல்தனையெறும்புவென்ற காட்சியதாகும்போலே
அடைவுடனியானுஞ்செய்த வருமையையுட்கொள்வீரே.

போற்றுகவி.

மல்லாருமன்னர்மன்னன் வருத்தமில்லாதமாக்கள்
எல்லாருந்துதிக்கமிக்க வினிமைசேர்வனசப்பொய்கை
வல்லூர்வாழ்வேங்கடராமன் மார்க்கண்டனகாதைதன்னை
சல்லாபவிலாசமாகத் தமிழினாலுரைசெய்தானே.

6

திரு-நாட்டை-தாளம்-திரிபுடை
கண்ணிகள்.

ஆதிபரன்றனைவணங்கும் அன்பர்மிருகண்டரிட
சோதிதவத்தினிலுதித்த சுதன்புகழைப்பாட (ஆ-ஆ)
நீதியாயறம்வளர்க்கு நிமலிசுதனுகித்
தீதிலாதைங்கரனார் திகழ்பாதந்துணையே (ஜெயஜெயா)
கடவூரில்மிருகண்டர் கண்களிக்கவந்துதித்த
திடமுடையமார்க்கண்டன் சீராயான்பாட (ஆ-ஆ)
அடலவுணர்குலந்தனை வேரறுக்குமுருகேசர்வள்ளி
மடமயிலாள்தெய்வானை மலர்ப்பதங்கள்துணையே (ஜெயஜெயா)
அத்தர்பதம்நிதம்போற்று மன்பானமிருகண்டர்
புத்திரன்மார்க்கண்டனிட புகழையான்பாட (ஆ-ஆ)
சத்தியபார்வதியையிடந்தனில்வைத்தஆதிபுரி
நித்தம்வாழ்ந்திடுமீசனிரு சரணந்துணையே (ஜெயஜெயா)

மங்களம்.

ஓடி-தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி.

மங்களம் - ஜெய - மங்களம் - நித்தியசுப - மங்களம்

அநுபல்லவி.

மங்களமார்திருமருவுங்கடவூரில்
வாசஞ்செய்யும்விக்கினேஸ்வரர்க்குஞ்ஜெய (மங்களம்)

சரணங்கள்.

கலைமகளுக்குமங்களம்வள்ளிதெய்வானை
களுக்கும்வேலர்க்கு மங்களம்
கலமாய்நாதமணிந்தகாதருக்கு மங்களம்
மலையரசன்மகளானதேவிக்கு மங்களம்
வையகமளந்தநெடுமாலுக்கு மங்களம்
ஜெயகுச்சகர்க்குமங்களம்-தபமிகுந்த
ஜெயமிருகண்டருக்கு மங்களம்
நயனஞானச்சதிராள்நங்கையர்க்கு மங்களம்
அயன்விதியைவெல்லுமார்க்கண்டருக்கு மங்களம்
அன்போடிக்கதையைபின்பங்[illegible]வர்க்கு மங்களம்

மேளங்கூட்டுகிற - பொதுவிருத்தம்.

ஞாலமீதினிலேநின்றுநாள்தொறுந்தவத்தைச்செய்து
மேலுமுமறிந்துமெத்த முத்தியைத்தான்படைத்து

சீலர்கள்துதித்துப்போற்றுந்திகழ்விநாயகனாநம்பி
கோலமாமேளதாளங்கூட்டியேபாடுவோமே

தரு - இ-ம் - மத்தியமாவதி - தாளம் - திரிபுடை.

பல்லவி.

மதகரியின்முகவதனமிகுகணபதியிதோவாரார்
கணபதியிதோவாரார்

அனுபல்லவி

பதந்தனில்தண்டை,கலீல்கலீல்லென்ன
பார்வதிசுதன்பவளநிறமெய்யன்
அதிகதுதிபெறுமரன்மைந்தனும்
ஐங்கரன்மிகதுங்கமதாகிய (மதகரி)

சரணங்கள்

திக்கெல்லாம்புகழ்விக்கினேஸ்வரன்
சிந்தைதொழவருள்தந்தாஸ்வரன்
முக்கணருள்புத்திரனுமாறு
முகவர்க்குமுதலாய்விளங்கிய (மதகரி)

கெங்கையணிமுடிசங்கரன்சேயினர்
கேசவன்மருமகனுமென்னவே
திங்கள்பிறைமுகமங்கையுமைசுதன்
தீட்சணமுள்ளமூஷிகாரயன் (மதகரி)

முப்பழமொடுஅப்பமதிரிச
மொடுகற்கண்டுசீனியும்
எப்பவும்வருந்திவைப்பவும்பருந்
தொப்பையனுமெங்களப்பனுகிய (மதகரி)

விநாயகர்வருகிற- பொதுவிருத்தம்

அருமறையவர்கள்தாழஆனதோரிவிகள்சூழ
பருமமுந்நூலிலங்கப்பணிகள்மெய்பளபளென்ன
திருவெனுமொளிருஞ்சிந்தாத்பூரிவிநாயகருமிப்போ
வருமொருமூஷிகத்தில்வளம்பெறவருகின்றுரோ

விநாயகர்வருகிற - தரு-இ-ம்-பூரிகலியாணி-ஆதிதாளம்,

பல்லவி,

செல்வவிநாயகர்வந்தார் உச்சிதச்
செல்வவிநாயகர்வந்தார்

அனுபல்லவி

கல்விசெல்வமெல்லாங்களித்துத்
வல்லபையின்மனமகிழ்வு

தாதிடும்
கொண்டிடும்(செல்)

சரணங்கள்

அமரர்வணங்கும் நேசன் மகா
அழகுள்ள்பிர காசன்
உமைசுதவிக்கி னேசன் கன
உத்தமர்கள்மகிழ்சித்தர்களும்புகழ் (செல்வ)

கல் திருங்கிருபை யாளர் எழில்
கன [illegible] ரளர்
வல்வினைத்தீர்த்திடும் ஆளர் நல்ல
மதிதருகணபதிநல்குண (செல்வ)

காலில்வெண்டய மாட அதி
களித்துமாதர்கள் பாட
சீலமுனிவர்கள் கூட எழில்
தேகங்களித்திடநாகரீகத்துடன் (செல்வ)

கட்டியக்காரன்வருகிற - பொதுவிருத்தம்

கதிதபஞ்செய்யும்வேதக் காரணப்பெரியோர்போற்றும்
சதுர்முகபிர்மதேவன் சபைகொலுவலங்கரிக்க
அதிபலமுடையநல்ல வமரர்கள்புகழுமிக்க
விதியுள்ளகட்டியக்காரன் விரைவுடன்வருகின்றனே

கட்டியக்காரன்வருகிறதரு-இ-ம்-சங்கராபரணம்-மிசுரதாளம்

பல்லவி,

கட்டுங்கனத்துடனேயெச்சரிக்கை செய்
கட்டியக்காரன்வந்தான்யெச்சரிக்கைசெய் (கட்டு)

அனுபல்லவி,

அஷ்டதிக்குமதிர்ந்திடும்படி சிங்கக்
குட்டிகள்போலவேதட்டிகுதித்துபொங்கி (கட்டுங்)

சரணங்கள்

சிரசிற்பொன்னுருமாலேதிருத்தடனே கட்டி
திலர்தம்நுதலிலிட்டுப்பலித்சொல்ல அருட்டி (கட்டுங்)

வாகுவலயம்பால்வலதுதோளினில் மாட்டி
வச்ரகடகங்கையிலுச்சிதமாகப் பூட்டி (கட்டுங்)

இருபுசமுங்குலுங்கயெச்சரித்து [illegible] ன்னவே
இடிஇடித்ததுபோலேயடித்திடுதி டென்னவே (கட்டுங்)

பிரமதேவன்வருகிற-பொதுவிருத்தம்

அட்டதிக்கெங்கும்போற்றுந்திசயமாக்மெத்த
கட்டுங்காவலுமதானகனகரத்தினமிலழத்து

இட்டமாய்விளங்குஞ்சிங்காரகொலுவிருக்கச்
சிட்டிக்குங்கர்த்தனை திசைமுகப்பிரமன்வாரார்

பிர்மதேவன்வருகிற-தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்

பல்லவி.

திசைமுகதேவனும் வந்தார் மகா
வுசிதமாய்தெரிசனந் தந்தார்

அனுபல்லவி

வசிகாமுளதிருமறையவர் சூழவே
அசைவில்லாகுடைமன்னரருகினில் தாழவே (திசை)

சரணங்கள்.

இரத்னமகுடமுந் துலங்க வொரு
பித்தபூஜகிருதி யிலங்க
வித்தாரமாகமாலைவிடுவித்துவலங்கரித்து
சுற்றுச்சுற்றங்கள்காணக்கொலுவினிலிருந்திட (திசை)
விண்ணுமண்ணெங்கினும் புகழ நல்ல
புண்ணியபுருஷர்கள் மகிழ
வண்ணமேனிபடைத்தமாதைநாவினில்வைத்து
நண்ணுமன்னமீதேறிநாயகமாய்விளங்கும் (திசை)
கண்டவர்களுந்தெண்ட னிடவே எக்
காளபேரியுமடி படவே
மண்டலாதிபரெல்லாம் வந்துமிகத்துதித்து
தெண்டனிடும்படிசெப்திடும்முனிவர்களுடன் (திசை)

கட்டியக்காரன்-கூறல்-விருத்தம்

அருமறைமுனிவரடிபணிந்திடுமையனேமெய்யபராக்கு
காமஇற்கமலங்காணவேயேத்துங்கர்த்தனே சுத்தபராக்கு
மறையவரியாவரும்வந்தடிதாழுமாயனேநேயபராக்கு
இறமுடனெதுவுஞ்சிருஷ்டிக்குப்பிர்மதேவனேதேவபராக்கு

பிர்மதேவன் சப்தரிஷிகளுக்குச்சொலல்- விருத்தம்.

இல்லைமையாய்விளங்குஞ்சப்தரிஷிகளேசொல்லக்கேளீர்
இல்லைமையாம்நமதிடத்தில் நெடுங்காலம்வரப்பட்டோர்கள்
இல்லைமையாய்கொலுவில்வந்து நிற்[illegible]ரோநீர்பார்த்து
இல்லைமையாயுரைப்பீரெந்தனெஞ்சமுமகிழத்தானே

வசனம் - கேளுங்கள் சப்தரிஷிகளே நம்முடையகொலுவுக்கு நீடு
நிகாலம்வரப்பட்டபேர்கள் அனைவர்களும்வந்தார்களா இன்னம்வருக
இல்லையா அதனைநன்றாகப்பார்த்துச்சொல்லுங்கள்சப்தரிஷிகளே.

சப்தரிஷிகள்பிர்ம்மதேவனுக்குச்சொல்- விருத்தம்.

ஐயனேகேளீரையா அழகதாய்ச்சிரசைப்பெற்ற
ஐயனேயுமதிடத்தி லண்ணுடம்வரப்பட்டோர்கள்
ஐயனேவந்தாரந்த வமரர்கோன்வருகவில்லை
ஐயனேசபைமுற்றும்பார்த் தறிந்துபின்னுரைத்திட்டோமே

வசனம்.

கேளுந்திசைமுகப் பிரம்மாவே உம்முடைய சொலுவுக்கு ஏப் போதும் வரப்பட்டபேர் அனைவரும் வந்தார்கள் இந்தபொன்னுலகை யாளப்பட்ட அமரர்கோனாகிய தேவேந்திரமகாராஜன் இன்னமும் வரு கவில்லை நான்முகதேவனே.

தேவேந்திரன்வருகிற- பொதுவிருத்தம்.

ஞாலத்தைச்சிருஷ்டிக்கின்ற நான்முகன்சபையைக்காண
கோலமாமுனிவரோடுங் கோதிலாத்தேவரோடுஞ்
சீலமாமிந்த்ரராஜன் றினகரன்றன்னைப்போல
வாலமாய்ப்பணிகள்பூண்டு வகையுடன்வருகின்றானே

கட்டியக்காரன்- சொல்வசனம்.

அகோதெப்படியென்றால் பிரமதேவனுடைய சபைக்குத் தேவேந் திரமகாராஜன் வருகிறவிதங்காண்க.

தேவேந்திரன்வருகிற- தரு- இ-ம்-கலியாணி-ரூபகதாளம்.

பல்லவி.

இந்திரன் வந்தானே - பரிதிபோலே
இந்திரன் வந்தானே

அநுபல்லவி.

சுந்திரமான சமர்த்தருடன்கூடி (இந்திரன்)

சரணங்கள்.

தேவர்களெங்குஞ்செயங்கூறித் திரிகவே
சித்தர்கின்னரர்களுஞ்சேர்ந்து வருகவே (இந்திரன்)

முப்பத்துமுக்கோடிமுனிவர்கள் சூழவே
மூரசறைந்தேமன்னர்முற்றிலுந் தாழவே (இந்திரன்)

வேதியர்மந்திரவேதங்கள் கூறிட
விண்ணுமண்ணதிர்ந்திடவெடிகளார வாறிட (இந்திரன்)

அமரர்கள்தன்னுடனழகாகக் கூடியே
ஆர்ப்பாரத்துடனயன்கொலு தேடியே (இந்திரன்)

கட்டியக்காரன் - பிர்ம்மதேவருக்குச்சொல்- விருத்தம்.

திசைமுகத்தயனேபோற்றி செபதபமுடிக்கப்பட்ட
வசிகரமுடையவேத மாதவசனமேபோற்றி

இசையும்வெள்ளானையேறி யிருபுறமமரர்சூழ
ரசியமதானவிந்திர ராஜனுமிதோவந்தாரே

பிர்ம்மதேவன்சொல்-வசனம்.

ஆ! ஆ! மகாசந்தோஷம் மகாசந்தோஷமாயிற்று.

தேவேந்திரன்- பிர்ம்மதேவனுக்குச்சொல்-விருத்தம்.

பிர்ம்மரேசபையில்மெத்த பெருக்கமாய்வீற்றிருக்கும்
மர்ம்மிகளானபேரே வந்தனந்திசைமுகர்க்கு
தர்மமேசெயமதாகுந் தானென்னயிருங்கள்வந்த
கர்ம்மதீவினையொழித்து கடவுளைக்கண்டபேரே

வசனம்.

என்னிலு மிகுதியாயிருக்கப்பட்ட பெரியோர்களே யிருங்கள் திசைமுகதேவர்க்கு வந்தனம் மகாதீவினைகளை பொழித்து கர்த்தவ்வியத்தைக்கண்ட பெரியோர்களே தர்மமேசெயமென்றிருங்கள்.

சப்தரிஷிகள்-தேவேந்திரனுக்குச்சொல்-விருத்தம்.

அமரருக்கதிபனான அரசதேவேந்திராகேள்
சமரினிற்பெலவானிந்த சனத்தினிலிருந்தாற்பின்பு
நிலைமையிலவரவர்தம் நிலையினிலிருப்பர்சொன்னே
முமதிடமிருப்பீர்நான்கு முகவனுமகிழத்தானே

வசனம்-கேளும் தேவேந்திர மகாராசனே நீரும் உம்மிட ஆசனத்திலிரும் அனைவரும் அவரவர்களுடைய ஆசனத்திலிருக்கிறோம் தேவேந்திரமகாராசனே.

பிரமதேவன் - சப்தரிஷிகளுக்குச்சொல்-கொச்சகம்.

சட்டமுடனென்கொலுவில் தானிருக்குமுனிவர்களே
எட்டுத்திக்கினுந்தபங்க ளின்பமுடனேபுரியும்
கட்டுசடையுடையமுனி களுமிகசுபேக்ஷமதோ
பொட்டெனவேநானறிய புகலுந்தபத்தபர்களே

வசனம் - கேளுங்கள் சப்தரிஷிகளே இந்த எட்டுத்திக்கினுந் தபத்தைச்செய்யாநின்ற தபசிகளுக்குச் சுபமோசுபமில்லையோ சொல்லுங்கள் சப்தரிஷிகளே.

சப்தரிஷிகள்பிரமதேவனுக்குச்சொல்-கொச்சகம்.

பொட்டென்வேபுகலுமென்ன புண்ணியனே திசைமுகனே
எட்டுத்திக்குந்தபம்புரியு மிருடிகளெல்லாஞ்சுபமே
கட்டழகுதானுடைய கலைமகளைத்தான்படைத்த
வட்டவிழிநான்முகனே மனமகிழச்சொன்னோமே

வசனம்.

கேளும் பிரமதேவரே இந்த அஷ்டதிசையினு மிருந்து தபஞ்செய்யப்பட்ட தபசிகளுக்குச்சுகமே மேலும் அவர்கள் நினைத்தபடிக்கு முடிந்துவருகின்றது நான்முகதேவனே.

பிரமதேவன்-தேவேந்திரனுக்குச்சொல்- கொச்சகம்.

தேவர்களுக்கதிபனென்று செங்கோற்படைத்தவனே
பூவுலகிலுள்ளமன்னர் புண்ணியங்கள்செய்துமிக
ஆவலுடன்வந்தவரை யாதரிப்பாரோவதனை
இவரமாயெனக்குரையுந் தேவேந்திரமன்னவனே

வசனம்.

கேளுந் தேவேந்திரமகாராஜனே பூலோகராஜாக்களில் புண்ணியமுண்டா அடுத்தவரை யாதரிப்பதுண்டா நீதிவழுவாமல் அரசுசெய்துவருகிறார்களா சொல்லுந் தேவேந்திரமகாராஜனே.

தேவேந்திரன்-பிர்மாவுக்குச்சொல்-கொச்சகம்.

உலகமெல்லாந்திசைமுகனே யொருகுடையிலாளுகின்ற
நிலைமையுள்ளமன்னரெல்லாம் நீதியுடனேநடப்பார்
பலபலவிதங்களுள்ள பாராளும்வேந்தரைநாம்
சொலுவதற்குநிலையிலைதான் சோதிதரும்நான்முகனே

வசனம்.

கேளும் பிர்மதேவரே ஏகசக்காரத்தினால் உலகையாளப்பட்ட மன்னர் நீதியுடனே நடப்பார்கள் மற்ற இராஜாக்களுக்கெல்லாம் நீதிதெரியுமா தெரியாது குறிப்புமிராது அரசுசெலுத்தவுந் தெரியாது பலபலவிதமாயிருக்கும் நான்முகத்தேவரே.

விஸ்வாமித்திரன்-பிர்மதேவன்சபைக்குவருகிற-பொதுவிருத்தம்.

மண்டலமகிழப்பெற்ற வான்வர்மிகத்துதிக்க
தண்டுச்சக்கரத்திலேந்தி இகசமுகனருகினுக்கு
அண்டங்கள்நடுநடுங்க ஆக்கிரமித்ததட்டிக்கொண்டு
மிண்டர்க்குமிண்டனான விஸ்வாமித்திரர்வருகின்றாரே

கட்டியக்காரன்சொல்- வசனம்

அகோ தெப்படியென்றால் உலகத்தைச் சிஷ்டிக்கும்படியாகிய பிர்மதேவன்சபைக்கு தபோநிதியாகிய சாபாநுக்கிரக சாமார்த்திய விஸ்வாமித்திரமகாரிஷி வருகிறவிதங்காண்க.

விஸ்வாமித்திரர்வருகிற-ஓரடி-தரு-இ-ம்-மோகனம்- ஆதிதாளம்.

பல்லவி.

மிகுத்ததபமகத்வபிரதாபவிஸ்வாமித்திரனுனே

அனுபல்லவி

சகத்துக்கதிபதிகெஜபதிநானிதை
சதுர்மாமுகவனுமறிகுவானின்னமென்ன
தபசிமார்களெனைச்சரணெனப்பணிகுவார்
சட்டதிட்டஅட்டதிசையினும் (மிகுத்த)

சரணங்கள்

அண்டாண்டநவகண்டத்தைக் காட்டுவேன்
அரைநொடிதனிற்றிசைமுகனையு மோட்டுவேன்
தெண்டுகையினிற்பிடித்தோரையு மாட்டுவேன்
செகதலம்போலேயொருசெகதலங் கூட்டுவேன்
மிண்டர்தங்களைநான்முடுக்குடன் வாட்டுவேன்
வீரமானதொருவேடமும் பூட்டுவேன்
கண்டபேர்களடிமிசைவிழ மீட்டுவேன்
கதிதபத்தினில்மிகக்கனம்பா ராட்டுவேன்
கனத்தநெஞ்சில்நினைத்ததெல்லாங்
கடுகமுடிப்பேன்துசந்தொடுகவெடுப்பென்வச (மிகுத்த)

சட்டியக்காரன்-பிர்மாவுக்குச்சொல்- விருத்தம்.

நன்னயவாணிதன்னை நாவினிலமைத்துத்துய்ய
அன்னவர்கனத்திலேறு மையனேநின்றுள்போற்றி
இந்நிலந்தனிலுமற்று மிருக்கின்றநிலத்திலுஞ்சீர்
மன்னியவிஸ்வாமித்திர மாமுனிவந்திட்டாரே

பிர்மா-கட்டியனுக்குச்சொல்- வசனம்.

ஆ! ஆ! சந்தோஷம் சந்தோஷமப்பா கட்டியக்காரா

விஸ்வாமித்திரர்- பிர்மாவுக்குச்சொல்- விருத்தம்.

சட்டதிட்டமதாய்வாழுஞ் சதுர்திசைமுகவல்லோனே
திட்டமதாய்விளங்குந் தேவேந்திராசனேகேள்
கட்டுதிட்டங்களாகக் கனசபையிருப்பதேது
பொ[illegible]னப்புகலுமிந்தப் புதுமையையெனக்குத்தானே

வசனம்.

கேளும்-பிர்மதேவனே ஓய் தேவேந்திர மகாராஜனே எக்காலத்திலும் இவ்விதமாகச் சபைகூடினதில்லையே இன்றையதினம் மகாகட்டுங்காவலுமாக யிருக்கவேண்டியதென்ன அதையெனக்குத் தெரியச்சொல்லுந் தேவேந்திரமகாராஜனே.

தேவேந்திரன்-விஸ்வாமித்திரனுக்குச்சொல்- விருத்தம்,

திசைமுகன்சபையிலார்தான் சிறப்புடன்வந்தபோதும்
உசிதமாநீரும்வந்தா லொன்றுடனென்றுபேசும்

கசிந்தையக்கொடுப்பீரப்போ களரிகள்நடுநடுங்கும்
விசிதமீதறிவீரிங்கு வீற்றிருந்திடுவீரோ

வசனம்.

சேஷம் விஸ்வாமித்திரரே இந்தபிர்மசபைக்கு யார்வந்தபோதிலும் பேசாமல்தானிருப்பார்கள் நீர்வந்துவிட்டால் ஒன்றுடனே யொன்று பேசத்தலைப்படும் ஆகையால் இந்த ஆசனத்திலிரும் விஸ்வாமித்திரரே.

விஸ்வாமித்திரர்சொல்-வசனம்.

அப்படியே யிருக்கிறேன் தேவேந்திரமகாராஜனே.

பிர்மதேவர்சபைக்கு- வதிஷ்டமகாமுனி வருகிற

பொது- விருத்தம்.

வீரியவிஸ்வாமித்திரர் வீற்றிருந்திட்டபோது
சூரியனொளிவுபோலத் துலங்குநான்முகன்சபைக்கு
பாரியசடையுடைத்தாய் பழுத்ததோர்மேனிபெற்ற
ஆரியவதிஷ்டர்வாரா ரணைவருமகிழத்தானே

வதிஷ்டர்வருகிற-தரு-இ-ம்- புன்னாகவராளி- அடதாளம்.

பல்லவி.

மாமுனிவந்தார் வதிஷ்ட - மாமுனிவந்தார்

அநுபல்லவி.

நேமகமாகவேநிஷ்டையில் நிற்பவர்
நேத்தியதாய்மகா ருத்திராங்கறவா (மாமுனி)

சரணங்கள்.

வேதமுணர்ந்தஞானி விரிதபத்தின்மெஞ்ஞானி
மாதவத்தோரெல்லாம் வந்துபணிந்திடும்
வண்மையதானநற் றண்மைபடைத்திடும் (மாமுனி)

சகலகலைக்கியானி சிவசெப தபத்திற்குமுக்கியன்
அகிலமெல்லாம்புக ழானந்தமாகிய
அதி[illegible]கிமன்னர்க்கு மதிகதிகொடுத்[illegible] (மாமுனி)

வேதியர்நேசன் தேவ[illegible]நித்தம் வேண்டும்விசுவாசன்
ஆதிப்பிராபர மானவருக்கன்பன்
ஆகித்திடமன தாகிக்களித்திடும் (மாமுனி)

கட்டியக்காரன்-பிர்மாவுக்குச்சொல்-விருத்தம்.

மணிகள்பற்பலவாய்மின்னு மாமுடிசிரசிற்பூண்ட
பணிகொள்மேனியனேநல்ல பலன்றரவெம்மையாளுந்
திணிகொளுமம்புயனேநன்கார் திசைமுகதேவேபோற்றி
மணிகாங்கொள்வதிஷ்ட மகாமுனிவந்திட்டாரோ

பிர்மா-கட்டியனுக்குச்சொல்- வசனம்.

ஆ! ஆ! அவரும் வந்தாரா மிகவுஞ் சந்தோஷமாயிற்று

வஷிஷ்டர்- பிர்மாவுக்குச்சொல் - வாழிவிருத்தம்.

நாடோங்கும்படிசிருஷ்டிக்கு நான்முகனே நீவாழி
ஈடேறிவிளங்குகின்ற விந்திரனே நீவாழி
காடேறிதவத்தைச்செய்யுங் கௌசிகனே நீவாழி
நீடூழிகாலமற்ற நீங்களெல்லோரும்வாழி

வசனம்.

நான்முகதேவனேவாழி இந்திரமகாராசனே வாழி மற்றுமிருக்கப்பட்டயாவரும்வாழிவாழி.

தேவேந்திரன் - வஷிஷ்டருக்குச்சொல்-விருத்தம்.

வாழ்வீரொன்றெனவேவந்த வஷிஷ்டமாமுனிவரோகேள்.
ஆழ்கடலின்னமிந்த அண்டரண்டங்களெல்லாம்
சூழ்கின்றபிரமலோகத் தோருமாமுனிவரோடும்
தாழ்விலலாமன்னரோடுஞ் சபையில்வீற்றிருந்திடீரோ

வசனம்.

வாரும்வாரும் வஷிஷ்டமகாமுனிவரே பிரமலோகத்தாரோடுங்கூடியமற்ற தபசிகளோடும் இந்தராஜாக்களோடுங்கூட விஸ்வாமித்திரருக்கருகே இந்த ஆசனத்தில் வீற்றிருஞ்சுவாமி.

வஷிஷ்டர்சொல்-வசனம்.

மஹாபாக்கியம் மஹாபாக்கியம் இந்திரபூபதியே

பிர்மா-சப்தரிஷிகளுக்குச்சொல்-கவி.

மாதவத்தோரே மகாசபைதனிலே
வேதங்கற்ற வியாசர்வந்தனரா

வசனம்.

கேளும் சப்தரிஷிகளே இவடம்வரப்பட்ட பேரணைவரும் வந்ததும் வராததும் பார்த்தீர்களா வேதவியாசரும் வந்தாரா பாருங்கள்.

சப்தரிஷிகள்-பிர்மாவுக்குச்சொல்- கவி.

மூர்த்திநான்முகனே மூறைவேதமோதி
வந்திடும்வியாசர் வரயில்லையையா

பிர்மா-சப்தரிஷிகளுக்குச்சொல்-மோச்சகம்.

சப்தரிஷிமார்களேயென் சபையில்நிற்குங்கட்டியரோ
அத்துமரியாதையோடு மருகினிலன்பாய்ச்சென்று
வித்தைபுத்தியுளாவேத வியாசர்தனைக்கண்டழைத்து
இத்தடத்தில்வருவீரொன் மனதுமகிழ்ந்திடவே

வசனம்.

கேளுங்கள்சப்தரிஷிகளே நீங்களாவது ஒருவர் அல்லது ஆரடா அடா கட்டியக்காரா நீயாவதுபோய்சீக்கிரமாக வேதவியாசரை அழைத்து வாரும் பிள்ளாய்

கட்டியக்காரன்பிர்மாவுக்குச்சொல்-விருத்தம்

தேவரெங்களையழைத்து சேதிகளுரைத்தபின்பு
தீவரமாகச்சென்று செபதபநிலையிற்சார்ந்த
காவியவியாசர்தன்னைக் கண்டழைத்தோடியிங்கு
வாவென்றபோதேயிதோ வருகிறார்வியாசர்தானே

வசனம்.

கேளும்சுவாமி தாங்கள்வேதங்களைசிக்கறுத்த வேதவியாசரை அழைத்துவாவென்று சொன்னபோதே இதோவருகிறார் வேதவியாசர்சுவாமி.

வேதவியாசர்வருகிற-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-அட-தாளம்

பல்லவி.

வந்தார் வந்தாரே வேதவியாசர்
வந்தார் வந்தாரே

அனுபல்லவி.

தந்திராதிகளையெல்லாஞ் சபிக்குமெஞ்ஞானகுரு
தொந்தொந்தொந்தோமெனத்துலங்கும்பிர்மசபைக்கு (வந்தார்)

சரணங்கள்.

மெய்யில்வெண்ணீறுமணிந்திட்ட
வேடிக்கைபாரும்
ஐயன்நான்முகன்கொலுவினில்வீற்றிருந்திட
கையிற்றுவடமேந்திபையநடைநடந்து (வந்தார்)

சாத்திரமேந்திபூமியில்நல்ல
சாஸ்திரக்காந்தி
தோற்றும்பாவனைபோலத்துலங்குஞ்சடைவிரித்து
நேத்தியதாய்சபைகார்த்தபிர்ம்மாமுன்னில் (வந்தார்)

நிலையினில் யோக்கியர் குறைவில்லாத
...மன சிலாக்கியர்
பலபலசாஸ்திரம்படித்துத்தெளிந்தவர்
...ள்ள மதிநிறைகலைமகள் நேசர்பால் (வந்தார்)

வே... பிர்ம்மாவுக்குசொல்-விருத்தம்.

வித்துவஜனங்களோடுமெய்யில்வெண்ணீறுபூசும்
தத்துவங்கற்றயோகதபசிகளோடுகூடி
இத்தன்மைசபையில்வாழுமெழில்சதுர்முகவனோ
பத்தியாயெனையழைத்தபாக்கியஞ்சொல்லுவீரே

வசனம்.

கேளும்பிர்ம்மதேவரோ சப்தரிஷிகளோடும் வித்துவஜனங்களோடுங்கூடியழகாயிருக்கபட்டசபைக்குளென்னை யழைப்பித்தகாரியந் தெரியச் சொல்லும்பிர்ம்மதேவரோ

பிர்ம்மா-வேதவியாசருக்குச்சொல்-விருத்தம்

வேதத்தையமுதாய்கொள்ளும் வேதவியாசரோகேள்
மாதவத்தினிலுயர்ந்தமாமுனிவர்கள்தன்பக்கல்
நீதியாயுமையழைத்த நிலைதனைச்சொல்வேனிந்த
நீதிலாசனத்திலேவீற்றிருந்திடீரிருந்திடீரோ

வசனம்.

கேளும்வியாசரோஉம்மையிந்தசபைக்கு அழைப்பித்தகாரியஞ் சொல்லுகிறேன்யிந்தஆசனத்திலிருந்திடும்வேதவியாசரோ

பொதுவிருத்தம்.

வேதவியாசர்வந்துவேடிக்கையாய்விளங்கும்
நாதனுன்முகவன்பக்கல் நலமுடனிருக்கும்போது
பூதலந்தன்னில்வாழும்புண்ணியமிருகண்டையர்
ஓதியசிஷர்வாரா ருலகெலாமகிழத்தானே

கட்டியக்காரன்சொல்வசனம்.

அகோதெப்படியென்றால்பிர்ம்மதேவர்சபையில் வசிஷ்டர்விஸ்வாமித்திரர் வேதவியாசர்முதலிய சப்தரிஷிகள் வந்திருக்கும்போது மிருகண்டமகாரிஷிசிஷர்கள் வருகிறவிதங்காண்க

சிஷர்கள்வருகிற-தரு-இ-ம்-கல்யாணி-ரூபகதாளம்.

பல்லவி.

மாமுனிசிஷர்நாங்களே-திகழுஞ்ஜெய
மாமுனிசிஷர்நாங்களே

அநுபல்லவி.

சாமியைசிந்தித்திப்போம்-நேமநிஷ்டையாயிருப்போம்
தாணிமாமிருகண்டாவாழும்-ஆரண்ம[illegible]வாயலிருக்கும் (மாமு)

சரணங்கள்.

அருணனுதிப்பதற்குள்ளே புனலிலாடி
அரியஜபதபஞ்செய்தே
கருணைசுரந்தெமையீக்-காசினிமேலடிமை
காதலுடன்படைத்த-வேதியர்மணியாகும் (மாமுனி)

சுரமண்டலியாழ்மீட்டியே மாதவற்குற்ற
துயிலகலவேயோட்டியே
பாவியன்னவர்தம்மை-பளிப்புனற்கனுப்பியே
பரமன்பூசைக்குறிய-பண்பாமலர்க்கேகுவோம் (மாமுனி)

அலகிலாப்புகழ்நாட்டுவோம் அண்டமனைத்தும்
அகங்கைதனிலேகாட்டுவோம்
உலகில்வரும்வினைகளொழிய-நீறெடுத்திடுவோம்
உம்பருலகமெங்குமொரு-நொடிதனிற்போவோம் (மாமுனி)

சிஷர்கள்-சபைக்குச்சொல்-விருத்தம்

இதுயென்னசெனனீங்க ளிப்படிப்படுகிறீர்கள்
பதிவிட்டுவேஷம்பார்க்கப் பட்சமாய்த்தானேவந்தீர்
மதமுற்றுகூச்சலிட்டு மல்லுபோர்செய்யலாமோ
குதிகுதித்தேசபிப்போங் கூப்பிடாதிருந்திடீரோ

வசனம்.

கேளுங்கள் சனங்களே நீங்கள்வேஷம் பார்க்கத்தானே வந்தீர்கள் அதைப்பாரமல் இப்படிக்கெல்லாம்படுகிற சன்னம் என்னசன்னம்மதமுற்றுக்கூச்சலிட்டுப்போர்செய்யலாமாசபிக்கப்போறேங்கூப்பிடாதிருங்கள் அடாதம்பி ஞானசிரோன்மணி வெள்ளைப்போரில்லே எண்ணையே கொள்ளை கொளளையாயிருக்குதுபார் ஆம்மெய்தான் மெய்தான் பல்லைப்பல்லைத்திறந்துகாட்டுதடா அடாதம்பி மணிகெண்டாமணி காட்டவில்லை எண்ணையே கூட்டங்கூட்டமாய் காட்டயில்லை காட்டயில்லை எண்ணையே கூட்டங்கூட்டமாய்க் காட்டுதுபார் டிங் டிங் அடாதம்பி மணிகெண்டாமணி எனேயிவர்களிப்படிகூச்சலிடுகிறார்கள்பேபேபேசினபேருக்கு ஆப்படிக்கிறது ஆப்படித்தால் சரியா சரியில்லாவிட்டால் விரியப்பொத்துகிறது அதுவுஞ்சரியல்லகேளும்-ஜனங்களே

சிஷர்சொல்-தரு-இ-ம்-சங்காபரணம்-ரூபகதாளம்,

பல்லவி.

கூப்பிடாதிருங்கள் ஜனங்களே சபையோரே [illegible]கோம்
கூப்பிடாதிருங்கள் ஜனங்களே

அநுபல்லவி.

கூ[illegible]ாதிருங்கள[illegible]ன்குளறவோவந்தீர்கள்
[illegible]ஷ்ட[illegible]கிற[illegible] நாட்டுக்கிடாக்களே (கூப்பிடா)

சரணங்கள்

சாப்பாடுவுண்டீரோ தாம்பூலங்கொண்டீரோ
சட்டமாயுட்கார்ந்து இட்டமாய்ப்பாருங்கள் (கூப்பிடா)
தபசிவருகிறார் சந்தடியாகாது
சாணென்றுகைகூப்பிதருணம்பார்த்துசேவிப்பீர் (கூப்பிடா)

சள்சளவென்றுலே சமர்த்தனென்பார்களோ
சபித்திடுவோம்நாங்கள் அபத்தஞ்சொல்லோம்நீங்கள் (கூப்)

சீஷர்கள்சொல்-விருத்தம்

மருகுலமெய்ருத்திராட்சவடத்துடன்மார்பிற்பூணூல்
பரிவுடன்விபூதிபூசிபலகல்விஞானமோதி
திருவெனுமுமையாளான தேவியைமனதிலெண்ணி
அரகரசம்போ சம்போவெனமிருகண்டர்வாரார்

வசனம்.

கேளுங்கள் சனங்களேஎங்கள் குச்சகமகாமுனியினுடைய குமாரரானமிருகண்டர் வருகிறார்சந்தடிபண்ணு திருங்கள்சனங்களே.

மிருகண்டர்வருகிற - தரு - இ - ம் - தோடி - சாப்புதாளம்

பல்லவி

திருமண்டலப்புகழ் நிறைகண்டசெபதப
மிருகண்டமுனிநானே

அநுபல்லவி

சர்வசிவசெந்துக்கள் முதலாயெங்கும்படைத்த
சம்புசதாசிவனை அன்பாய்மனதில்நம்பி (திரு

சரணங்கள்

பஞ்சாட்சரத்தையும் நெஞ்சாங்கருத்தினில்
பதித்துதுதித்ததை விதித்துத்தியானஞ்செய்யும் (திரு)

எண்சாணுடம்பையும் நஞ்சாகவேயறுத்து
எழில்பெறநற்கதிகாண வழிவகைத்தெரிந்திட (திரு)

செகமீதில்வருமாய்கை மலைகைப்பங்தோட
சித்திவித்திவழி முத்திதனையறிந்த (திரு)

மிருகண்டர்சீஷர்களுக்குச்-சொல்-விருத்தம்.

எவல்சீஷர்களேகேளீர் மனுமேமாலீருடும்
பாவையாளிடத்திற்சென்று பத்தியாய்வணங்கிநின்று
கூவியேமிருகண்டையர் குணமுடனழைத்தாரென்று
தேவினையெனதுபக்கல் சீக்கிரமழைத்துவாரீர்

வசனம்.

அடாமனோன்மணி அடாஞானச்சிரோன்மணி அடாமணி கண்டாமணி அடாமவுனசிந்தாமணி நீங்கள்எனதுதேவியான ஞானச்சதிராளின் ஆசிர்மத்துக்குப்போய் மகாபத்தியுடனேவணங்கி நான் அழைத்துவரச்சொன்னதாக அழைத்துவாருங்களப்பாசீஷர்களே.

முதல்சிஷன்-மற்றசிஷருக்குச்சொல்- வசனம்

அடாதம்பி ஞானசிரோன்மணி தம்பி மணிகெண்டமணி அடாம் வுனசிந்தாமணி ஐயர்நமதுஅம்மாளை அழைத்துவரச்சொன்னார் ஆதலால் நாம்போய் அழைத்துவருவோம் வாருங்களப்பா

சிஷர்கள் ஞானச்சதிராளுக்குச் சொல்-கவி

அம்மாவம்மாயெங்களைப்பெற்
றுதரித்தவருந்நீயே
அம்மாசரணமிகசரணம்
அனையேயம்மாவம்மணியே

ஞானச்சதிராள் சிஷர் களுக்குச்சொல் கவி.

ஆரப்பாநீங்களாரப்பா ஆசிர்மந்தேடியேவந்தோர்
ஆரப்பாயேன்கைதட்டி அழைக்கிறீர்சோரப்பா

சிஷர்கள் ஞானச்சதிராளுக்குச்சொல் கவி

மாதாவேநீர்தான்பெற்ற மக்கள்ம்மாமிருகண்டர்
ஆதாரம்செய்சிஷரம்மா அம்மாவுன்பால்வந்தோமே

ஞானச்சதிராள் சிஷர்களுக்குச்சொல் கவி.

அன்னையுன்பால்வந்தோமென் றறிக்கையிட்டபாலகரே
என்னகாரியம்தாய்வந்திர் இயம்பும்மாமுனிசிஷர்களே

சிஷர்கள் ஞானச்சதிராளுக்குச்சொல் விருத்தம்

சின்னநேரிடையினாரே தெரிவையர்களுக்குயர்ந்த
அன்னமேமயிலேதேனே அரம்பையூர்வசியோர்போற்றும்
கன்னியேயுன்னையையர் கூட இனிலழைத்துக்கொண்டு
இங்நிமிஷத்தில்வாவென் றியம்பினார்வருவாயம்மா

வசனம்.

கேளும் எங்களைப்பெற்றதாயாகியஞானச்சதிரோஐயர்உம்மைஅழை த்துக்கொண்டு வரச்சொன்னார் ஆசிர்மம்விட்டுசீக்கிரமாகவாருமம்மா

ஞானச்சதிராள்சிஷர்களுக்குச்சொல் விருத்தம்

மெய்யினில்நீறுபூசி விளங்குஞ்சிஷர்களேகேளீர்
கையினில்செபமாலேந்தி கமனத்திலிருக்குமெந்தன்
ஐயரழைத்தபோதே ஆசிர்மத்திருககொணுது
வையவேபோ[illegible]ீர் பாலரோவினாவிற்றுனே

வசனம்.

கேளும்மைந்தர்களே எந்தனையாராகியமிருகண்டர் அழைத்துவரச் சொன்னபோதே நானிவ்விடமிருக்கப் போகாதுஇதோவருகிறேன் வா ருங்களப்பா சிஷர்களே

சீஷர்கள் மிருகண்டருக்குச்சொல் கவி

தையலார்ஞானச் சதிரொனுந்தாயை
ஐயரோகொடியிலழைத்தோடிவந்தோம்

மிருகண்டர் சீஷர்களுக்குச்சொல் கவி

வந்தசீஷர்களே மாபாக்கியந்தான்
எந்தன்பக்கலிலே யிருந்திடுவீரோ

ஞானச்சதிராள் மிருகண்டருக்குச்சொல் விருத்தம்

அந்தணனேரோவேத மறிந்திடுஞானியாரோ
மந்திரநூலுணர்ந்த வள்ளலேசரணமையா
அந்தமதாகவிப்போ ஆசிர்மந்தனிலிருந்த
எந்தனையழைத்தசேதியென்னதென்றருளுவீரோ

வசனம்.

சரணஞ்சரணம் மந்திரநூலுணர்ந்த என்பிராணநாதா ஆசிர்மத்தி லிருந்த என்னையழைப்பித்தகாரியம் அருளிச்செய்யவேணுஞ் சுவாமி

மிருகண்டர் ஞானச்சதிராளுக்குச் சொல் விருத்தம்

மனைவியேயுனையழைத்தவா றினைச்சொல்வேனல்ல
நினைவொடுமாசிர்மத்தில் நீபதலமதாய்ப்பெண்ணே
உனதடிபார்த்திருப்பா யுயர்திசைமுகன்சபைக்கு
அனைவரும்போறார்பெண்ணே யானும்போய்வருகுவேனே

வசனம்.

வாராய்பெண்ணே ஞானச்சதிரே நம்மைப்போன்ற தபசிகளாயி ருக்கப்பட்டவர்களனைவரும்பிரமசபையில் காரணவிசேஷமறியப்போ கிறார்கள் ஆகையால்நானும்போய் வருகிறேன் நீ ஆசிர்மத்தில் உனதுதி ருவடியைப்பார்த்துக்கொண்டுவெகு ப[illegible]மாயிரும் பெண்ணே

ஞானச்சதிராள்மிருகண்டருக்குச்சொல்விருத்தம்

நான்முகன்சபையிலேதான் நடந்திடும்வாறுகேழ்க்க
மாணியாயெனையழைத்து மதியுரைத்திட்டநாதா
நானுமேயாசிர்மத்தில் நற்புத்திகொண்டிருப்பேன்
கானமாய்நீருஞ்சென்று [illegible]தினில்வருகுவீரோ

வசனம்.

கேளும்என்பிராணநாதரோதேவரீர் பிரமசபைக்குப்போ[illegible]ய் அவிடத் தில்நடக்கப்பட்டவிசேஷங்களையெல்லாம் அறிந்துவாரும்அ[illegible]யாளாசிர் மத்தில்பதலமாக யிருக்கிறேன் சுவாமி

மிருகண்டர் சீஷர்களுக்குச்சொல் விருத்தம்

சீஷரோகேளீரிந்ததிசைமுகன்சபைக்கிப்போது
பாசமாய்ப்போகவேணும் பாவைதன்பக்கல்தானே

ஆசிரமத்திரண்டுபேர்க ளடிபணிந்தேயிருங்க
நேசமுற்றிரண்டுபேர்தா னென்னுடன்வருகுவீரோ

வசனம்.

ஆரடா அடமநோன்மணி அடாஞானச் சிரோன்மணி அடாமணி கெண்டாமணி அடாமவுன சிந்தாமணி நான் பிர்மசபைக்குப் போகவேணும் ஆதலால் நீங்களிரண்டுபேர் நம்முடைய ஆசிரமத்திலிருங்கள் மற்றிரண்டுபேர் என்னுடனேகூட வாருங்களப்பா.

சிஷர்கள்சொல்- வசனம்.

அப்படியே வருகிறேஞ்சுவாமி.

மிருகண்டர். பிர்மசபைக்குவருகிற

தரு-இ௰ம்- ஆனந்தபைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

நான்முகன்சபைநாடியேநடப்போம்வாரும்வாருஞ்சீஷரே
நான்முகன்சபைநாடியேநடப்போம்

அநுபல்லவி.

மான்விழிமடமாதினைவிட்டு
வானமெங்கினுந்தான்புகழ்ந்திட (நான்)

சரணங்கள்.

வாய்பொத்திபயமாகவாருங்கள்
மாமுனிவர்கண்டாலெனச்சொல்வார் (நான்)

அரஹரஹரவென்றேதுதி
அடிக்கடிசொல்லிமுடுக்குடன்வாரும் (நான்)

இத்தலமெல்லாமிதுவதிசயம்
என்னுடனேவெரு[illegible]வன்னிதத்துடன் (நான்)

மிருகண்டர்- பிர்மாமுதலி[illegible]மற்றவர்களுக்குச்சொல்வந்தன

விருத்தம்.

சகலசம்பத்தாலிந்த சபைதனிற்பெரியோர்சூழ
அகிலமெல்லாந்துதிக்கு ஐயநான்வந்தனஞ்செய்
த[illegible]மிகமகிழ்ந்தேன்மிக்க சம்[illegible]மாயிருக்கும்
ம[illegible]மைமாமுனிஇந்திரர்க்கும் வந்தனமாட்கொள்வீரே

வசனம்.

சரண[illegible]ஞ்சரணம் பிர்மதேவரே யுமக்குவந்தனம் தேவேந்திர பூபதியே யும[illegible]குவந்தனம் வேதவியாசரே மற்றபெரியோர்களாகிய தபத்தோர்க்[illegible]லாம வந்தனம் வந்த[illegible].

தேவேந்திரன்-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்.

வந்தனஞ்செய்துவந்த மாமிருகண்டனாரே
தொந்தமாய்வீற்றிருக்குஞ் சபமுள்ளமுனிவரோடு

விந்தையாய்நீருமிங்கே வேடிக்கையாகச்செய்த
இந்தவாசனத்திலேதா னிருந்திடீரிருந்திடீரோ

வசனம்.

வாரும் வாரு மிருகண்டரோ இந்த தபசிகளோடுங்கூடி ஆசனத்தி லிருந்திடுவீர்மிருகண்டரே.

மிருகண்டர்-வசனம்-அப்படியே இருக்கிறேன் இந்திரபூபதி.

வதிஷ்டர்- பிர்மாவுக்குச்சொல்-விருத்தம்.

திசைமுகத்தயனேகேளீர் செகந்தனிலேயென்நேரம்
உசிதமதானநீதி யுரைக்கிறருமஇடத்தில்
வசையுள்ளமாதவத்தோர் மன்னவர்வந்திருந்தும்
இசைமொழியுரைப்பார்காணே னிப்படியுரைக்கலாமோ

வசனம்.

கேளும்பிர்மதேவனே உலகத்தில் எந்ததிருச்சபையிலும் நீதிசார ங்களை என்னேரமும் பேசிக்கொண்டே யிருப்பார்கள் உம்முடையகொ லுவில் வெகுதபசிகளிருந்தும் இராசாக்களிருந்தும் ஒரு சாரமாகிலும் பேசவில்லையே இப்படிக்கிருக்கலாமோ பிர்மதேவனே.

விஸ்வாமித்திரன்-வதிஷ்டருக்குச்சொல் விருத்தம்.

இப்படியிருக்கலாமோ வென்றுமேவதிஷ்டாநீதான்
ஒப்புடன்சொல்லவந்தா யுனக்கென்னதெரியுமத்தை
செப்படாபார்ப்போமிந்த திசைமுகனிங்குள்ளோர்கள்
எப்படியானாலுமெச்ச யிடந்தேடிக்கொள்ளுவாயே

வசனம்.

அடாவதிஷ்டா இந்தசபையிலே நானிருப்பதையும் பாராமல் எங் களைப்பார்த்து நகைத்து இப்படியிரு[illegible]மாவென்று நீகேழ்க்கலாமா னல்லது உலகத்திலே என்னசாரம்வழங்குகின்றது இங்கே என்னவழங்கா மற்போனது நீதானறிந்த நீதிசாரங்களை இந்தசபையில் இவர்களெல்லா மெச்சும்படியாய் விளம்படாபார்ப்போம்.

வதிஷ்டர்-விஸ்வாமித்திரனுக்குச்சொல்-விருத்தம்.

நீயெனைக்கேழ்க்கலாமோ நில்லடாவிஸ்வாமித்திரா
பேயனைப்போலெழுந்து பின்த்துராயுந்தனுக்கு
ஞாயமுந்தெரியுமோடா நான்முகன்கொலுவிலுந்தன்
சாயமுமெடுத்துப்போகுஞ் சபைவிட்டுநடந்திடாயே

வசனம்.

அடாவாடா விஸ்வாமித்திரா நீயென்னைக்கேழ்க்கத்தகுமா உன்னு டனே நான்பேசவில்லை நீயேன்பேயனைப் போலேபினத்தி வழியுராய்உ னக்கு ஞானவுசிதந் தெரியுமா யோக்கியா யோக்கியந் தெரியுமா வீண்

வேலைவைத்துக் கொள்ளாதே இந்தபிர்ம்மசபையிலே உன்னுடைய சாய மெடுபட்டுப்போகக் காலமாச்சுது பேசாமல் இந்தசபையைவிட்டு எழுந் துபோடா விஸ்வாமித்திரா.

விஸ்வாமித்திரருக்கும்-வதிஷ்டருக்கும்- தர்க்கம் கண்ணிகள்.

இராகம்- புன்னாகவராளி - அடதாளம்.

சட்டஞ்சட்டமெந்தன் கட்டுக்குளப்பட்டாய்
கெட்டமதியுடையவதிஷ்ட்டா - மெத்த
துஷ்டத்தனமுடையவதிஷ்ட்டா

வதிஷ்டர் - சொல்லல்.

துஷ்டப்புத்தியினாலேகெட்டுப்போகக்காலமோ
சட்டமாய்வரலாச்சேகோசிகா - வுன்
பெட்டுங்குலையலாச்சேகோசிகா

விஸ்வாமித்திரர்-சொல்லல்.

இத்தண்டசபையினிற்கற்றவன்போலவந்து
மெத்தப்பேசாதடாவதிஷ்டா - மெத்த
தத்திவீசாதடாவதிஷ்டா

வதிஷ்டர் - சொல்லல்.

கெத்திதத்திடாதேசெத்தநாயைப்போலே
ஒத்தியிருந்திடடாகோசிகா - எந்தன்
வித்தைதெரிந்திடடாகோசிகா

விஸ்வாமித்திரர் - சொல்லல்.

வெள்ளையாய்நரைத்துநீதள்ளாடுங்கிழமாகி
துள்ளலேக்காட்டாதேவதிஷ்டா - மெத்த
சள்ளலேக்கூட்டாதேவதிஷ்டா

வதிஷ்டர் - சொல்லல்.

சள்ளலெனக்கேண்டாகொள்ளிபிசாசைப்போல்
துள்ளலேத்துள்ளுகாய்கோசிகா - என்னைத்
தள்ளித்தள்ளிவாராய்கோசிகா

விஸ்வாமித்திரர் - சொல்லல்.

எந்தனுக்கெதிர்நின்றுவந்தமட்டும்பேசாதே
சந்தம்விழவடிப்பேன்வதிஷ்டா - வேசி
மைந்தாநினைக்கெடுப்பேன்வதிஷ்டா

வதிஷ்டர் - சொல்லல்.

மைந்தனுக்குச்சிஷனெந்தவிதமாமென்று
இந்தசபையிற்கேளுங்கோசிகா - அது
எந்தவழியில்மீளுங்கோசிகா

விஸ்வாமித்திரர்வஷிஷ்டருக்குச்சொல்-விருத்தம்.

என்பார்த்துப்பயந்திடாம லென்னுடனெதிர்த்துயெர்தன்
மனதினையறிந்திடாமல் மடையனேவஷிஷ்டாநீதான்
இனியாகிலும்புத்தியுண்டா யிருந்திட்டாலெனதுகோபம்
தனைநீக்கியுன்னையிந்தசபையினில் வைப்பேன்கண்டாய்.

வசனம்.

அடாவடாவஷிஷ்டா என்னுடைய சோபத்தைப்பார்த்து பயப்படாமலெதிர்த்து உத்தரவுக்கு எதிருத்தரவுகொடுத்தாயல்லவா நல்லது இன்னேரம் இந்தகோபத்தை நிறுத்தினேன் இனியாகிலும் நீயடங்கியிருந்தால் இந்தச்சபையிலுன்னை வைப்பேன் இல்லாவிட்டால் உனக்கு கெதி வேறேநடக்கும் பாரடாவஷிஷ்டா.

வஷிஷ்டர்-விஸ்வாமித்திரனுக்குச்சொல்-விருத்தம்.

என்னடாவிஸ்வாமித்திரா யிந்திரராசன்முன்னில்
சொன்னசொல்சபையோர்கேட்டு சேர்ந்துமேநகைநகைத்து
உன்னிடபவுஷையெல்லா முள்ளத்தில்வைத்தாரிந்தச்
சின்னமேன்பெற்றுக்கொண்டாய் செவையுடனிருக்கொணுதோ

வசனம்.

சபாசடா விஸ்வாமித்திரா இந்திரராசன் முன்னிலும் இன்னம் இந்தசபையோர் முன்னிலும் நீ சொன்னதைக்கேட்டு குலுங்கநகைத்து அங்ஙனேசேர்ந்து உன்பவுஷை உள்ளத்தில் வைத்துக்கொண்டார்கள் அதுவேபோதும் இந்தச்சின்னமேன் பெற்றுக்கொள்ள வேணுங்கோசிகா.

தேவேந்திரன்-விஸ்வாமித்திரருக்குச்சொல்- விருத்தம்.

வேதத்தின்பயனுணர்ந்த விஸ்வாமித்திரரே கேளீர்
மாதவத்தினிலுணர்ந்த வஷிஷ்டமாமுனிவரே கேள்
எதுகாலமுமுங்கட் குபிந்த போராட்டந்தானே
வுதலாலினிபோராட்ட மாகாதுபொறுத்திடீரே

வசனம்.

வாரும் விஸ்வாமித்திரரேகேளும் வஷிஷ்டமாமுனிவரே எந்தகாலமும் உங்களுக்கு இந்தபோராட்டந்தான் மற்றொன்றுமில்லை ஆனதால் இப்போது என்னைப்பற்றி பொறுத்திருங்கள் காரணவிசேஷம் பேசவேணும் விசுவாமித்திரரே வஷிஷ்டமகாமுனிவரே.

பிர்ம்மா-தேவேந்திரனுக்குச்சொல்- விருத்தம்.

இந்திரராஜனேகேளி ருடிகளிருவருக்கும்
வாதபொல்லாங்குக்கேற்ற வழிதேடிசொற்கொடுத்தீர்

மூந்திபோர்செய்தோருந்தன் மொழிதள்ளாதிருந்திட்டார்கள்
சந்தோஷமிந்தனாயஞ் சகலர்க்குமழகதாச்சே

வசனம்.

கேளும் இந்திராஜனே நல்லவுபாயமெடுத்து இவர்களுக்கேற்றநி யாயஞ்சொல்லி சண்டையை நிறுத்திவிட்டீர் அவர்களும் உமதுசொல்த ள்ளாமல் நின்றுவிட்டார்கள் அதுவேசகலபேருக்கும் அழகாச்சுது என் மனமுமகிழ்வாச்சுது இந்திராஜனே

தேவேந்திரன் பிர்மாவுக்குச்சொல் விருத்தம்

சிஷ்டிக்குஞ்சர்த்தனை திசைமுகத்தயனேகேண்மோ
சட்டமாய்க்கொலுவிருக்குந் தபசிகள்பெரியோரெல்லாம்
பொட்டெனவெழுந்திருந்து புகலிடம்போகாமுன்னம்
சட்டுகாரணவிசேஷங் களைக்கேட்டேயனுப்புவீரே

வசனம்.

கேளும் பிர்மதேவரே இந்த வசிஷ்டர் விஸ்வாமித்திரராலே இன் னைக்கிந்நோமாயிற்று மேலும்தமதுகொலுவில் வந்திருக்கும் பெரியோ ர்களெல்லாம் அவர்களிருப்பிடம் எழுந்துநடவாமுன்னம் இன்னமேதா கிலுங்காரணவிசேஷமறியவேண்டியதாயிருந்தால் அறிந்துகொண்டு யா வருக்குஞ்செலவுதாரும்பிர்மதேவரே

பிர்மா வேதவியாசருக்குச் சொல் விருத்தம்,

வேதவேதியர்கள்சூழும் வியாசரேபூமிதன்னில்
ஆதினத்துக்கோர்பிள்ளை யாகிலுமில்லாதார்க்கு
நீதியாய்ச்சொர்க்கபாக்கியம் நேரிடுமோவறிந்து
தீதிலாமலேயெனக்குத் திறமுடன்தெரிவிப்பீரே

வசனம்.

கேளும்வேதவியாசரே பூமியிலாருக்காகிலும் பிள்ளையில்லா திரு ந்தால் அப்பேர்க்கொற்றவர்களுக்குச் சொர்க்கமுண்டோஇல்லையோசொ ல்லும்வேதவியாசரே

வேதவியாசர் பிர்ம்மாவுக்குச்சொல் விருத்தம்

தெரிவதுமென்னபிர்ம்ம தேவனேசொல்லக்கேளீர்
அறிகுவீரொன்றுபிள்ளை யாகிலுமில்லாதார்க்கு
இருபிறப்பினிலுஞ்சொர்க்க மில்லாதானெனவேதத்தில்
முறையமதிடுதுவேத முற்றிலுஞ்சோதித்தேனே

வசனம்,

கேளும்பிர்ம்மதேவனே உலகத்தில் பிள்ளையில்லாத வர்களுக்குச் சொர்க்கமில்லையென்று சட்டமாய் வேதத்திற் சொல்லுகின்றது முற்றி லு நன்றாய்ப்பரிசோதித்தேன் பிர்ம்மதேவனே

மிருகண்டர் வேதவியாசருக்குச்சொல் விருத்தம்

உள்ளமுங்கலங்கவேதா னுரைத்திடும்வியாசரேகேள்
பிள்ளைதானில்லாவிட்டாற் பிள்ளையுண்டாவதற்கு
கள்ளமில்லாமலெந்தன் கருத்தினுக்கறியத்தானே
மெள்ளனவுபாயமொன்று விளம்பிடவேணுமையா

வசனம்.

கேளும்வேதவியாசரே பிர்மாமொழிக்குச்சரியாய் அத்தாட்சி நீர் சொன்னதுஞ்சரியேபூமியில் பிள்ளை இல்லாதபேருககுப் பிள்ளைவேண்டுமென்கிற ஆசையுமிருந்து பிள்ளையில்லாமலிருந்தால் அவர்களுக்குப்பிள்ளையுண்டாகிறதற்கு உபாயமுண்டாயில்லையா அதைவிளங்கச்சொல்ல வேண்டுமையா வேதவியாசரே

வேதவியாசர் மிருகண்டருக்குச்சொல் விருத்தம்

உபாயமுமென்னவேத முறைதெரிமிருகண்டாகேள்
தபோபலத்தாலேபிள்ளை தான்வரச்செய்யவேணும்
சபாபதிதன்னைநோக்கித் தபநிலைகொண்டாலீசன்
குபேரனைப்போலேபிள்ளை கொடுத்தூட்சிக்கின்றாரே

வசனம்.

கேளும் மிருகண்டரே பிள்ளையில்லாதபேர் அடர்ந்தவனத்திலே சென்றுபரமசிவத்தைநோக்கி ஒரேமனதாகஸ்திரீகளுடன் கூடதபத்தைச் செய்தால் புத்திரபாக்கியங் கொடுத்துரட்சிப்பார் மிருகண்டரே

பிர்மசபையிலுள்ள யாவருக்குஞ்சொல் விருத்தம்

இந்திராசனேநல் லெழில்வேதவியாசரேகேள்
சுந்தரச்சபையில்வந்து துலங்குமற்றவரேகேளீர்
மந்திரவேதசாஸ்திர மறிந்ததுபோதும்போதும்
அந்தரங்கமதாய்வாழு மாசிரமம்நடந்திடீரோ

வசனம்.

கேளும் தேவேந்திரமகாராஜசனே வேதவியாசரே மற்றுமிருக்கப்பட்டதபசிகளே நீதிசாஸ்திரங்கள்கேட்டது போதும்தேசகால மாச்சுது அவரவர்களாசிர்மம் போய்வாருங்கள் சபையிலுள்ளவர்களே

சபையோர் சொல் வசனம்.

அப்படியே போய்வருகிறோம் பிர்மதேவரே

பொதுவிருத்தம்.

மதிதினசமுகவனூர்தன் மகாசபைதான்கலைந்து
பதிதனக்கெழுந்தாணிந்திரன் பரிவுடனடந்தான்பின்பு

அதிநரிதமதாய்வாழு மாசிர்மம் நடந்தார்யாரும்
சுதனிலாமிருகண்டையர் துயரமாய்ப்புலம்புலும்ரூர்

பொது-வசனம்.

அஃதெப்படியென்றுல் இந்தப்பிரமசபை கலைந்தபிறகு தேவேந்திரன் முதலியரிஷிகணங்களியர்வரும் அவரவர்களாசிர்மத்திற்குச் சென்றபின்பு மிருகண்டமுனிவர் புத்திரனில்லாத சோகத்தினுல் பிரலாபிக்கிறவிதங்காண்க.

மிருகண்டர்சொல் கொச்சகம்

பிர்ம்மசபையடுத்ததற்குப்பிரிய முடன்வியாசர்சொன்ன
கர்மவிதிக்கென்னசெய்வேன் கயிலையனேயானுமென்ன
துர்மதிகள்செய்தேனே, துலையாதோசங்கரனே
மர்ம்மம்வைத்திருந்துமென்ன வஞ்சனைகள்செய்திரோ

வசனம்.

அரஹராகர்த்தனே பிர்மசபையிலே வேதவியாசர்சொன்ன்மொழிக்குச்சரியாகவெனக்குபுத்திரனில்லையே அதுதானேனக்குங்கதி நானென்னதுர்புத்தினைத்தேனே அல்லதுஉமதுசெயலோ இனிசொர்க்கங்காணுத சடலமிருந்தென்னகார்த்தனே

மிருகண்டர்சொல் புலம்பல்

இ - ம் - கண்டா - அடதாளம்.

கண்ணிகள்.

கர்த்தனேநானென்னசெய்வேன் அத்திமாமுகனைப்பெற்ற
ஈஸ்வரா மயேஸ்வரா
புத்திரனில்லாதவர்கள் மெத்தபாவியென்றுரைத்தார்
ஆதியே பரஞ்சோதியே
பிள்ளையில்லாதவர்க்குச்சொர்க்கமில்லையென்றுவியாசர்சொன்னூர்
ஈஸ்வரா மயேஸ்வரா
உள்ளமுங்கலங்கியுடல் துள்ளியேவிழுந்தேனையா
ஆதியே பரஞ்சோதியே
இருசெவியில்நாராசங்கள் சொருகினாற்போலுருகினேனே
ஈஸ்வரா மயேஸ்வரா
உரிமையானவுடலெனக்கு வுற்றதினுலென்னபலன்
ஆதியே பரஞ்சோதியே
இச்சடலமிப்புவியில் வைத்திருந்துமாவதென்ன
ஈஸ்வரா மயேஸ்வரா
தக்ஷணமேவிட்டுவிட்டால் மெச்சிடுமேலோகமெங்கும்
ஆதியே பரஞ்சோதியே
நான்முகன்சபையிலென்னை யேளனக்கவிதிவிதித்தாய்
ஈஸ்வரா மயேஸ்வரா

மான்மழுவணிந்தோனே நீதான்கபடமாயிருந்தால்
ஆதியே பரஞ்சோதியே
பதியிருந்தும்நிதியிருந்தும் பலன்றானாலேயென்றார்
ஈஸ்வரா மயேஸ்வரா
கதியினைத்தந்திடுவதற்கோர் காதல்சுதன்வேணுமென்றார்
ஆதியேபரஞ்சோதியே
இந்தசேதியறிந்திடாம லிருந்திட்டோமேபலடாக
ஈஸ்வரா மயேஸ்வரா
எந்தனாலேயாவதொன்று மில்லையெல்லாமுன்செயலே
ஆதியே பரஞ்சோதியே
இப்பவாகிலுஞ்சுதனை யெப்படியாகிலுந்தருவாய்
ஈஸ்வரா மயேஸ்வரா
தற்பராநீயேகதி யென்னப்பனேரட்சித்தருள்வாய்
ஆதியே பரஞ்சோதியே

மிருகண்டர்-சீஷர்களுக்குச்சொல்-விருத்தம்

அன்னையும்பிதாவென்றென்னை யடுத்தசீஷர்களேகேளீர்
சொன்னசொற்கேட்டமாத்திரந் துயரமுமதிகமானால்
என்னமாய்நடப்பதப்பா யிளைப்புமேமிகவுமாச்சு
இந்நிலந்தனிலிருந்து இளைப்பாறிநடப்போம்வாரீர்

வசனம்.

கேளுங்களப்பா சீஷர்களே அந்தப்பிர்ம சபையிலே வேதவியாசர் சொன்னசொல்லைக்கேட்டு நெஞ்சங்கலங்கித் துயரமும் அதிகமாயிளைப்புகொண்டு நடக்கப்போனால் நடைகொடுக்கவில்லை ஆதலால் இந்தசோலை நிழலில் சற்றுநேரமிருந்து இளைப்பாறி அதன்பின்பு நடப்போம் இருங்களப்பா சீஷர்களே.

சீஷர்கள் மிருகண்டருக்குச் சொல் வசனம்

தேவரீர் சொற்பிரகாரம் அப்படியேயிருக்கிறோஞ்சுவாமி

பொது- விருத்தம்.

சதுர்முகன்சபைக்குவந்த தபசிமாமிருகண்டையர்
சுதனிலாதாற்றயங்கித் துயரமாய்வருகும்போது
சதியறிந்துதவுஞான சதிராளைக்காணவேண்டி
மதியுள்ளரிஷிகள்பத்தினிமார்களுமிதேவந்தாரே

வசனம்.

அகோதெப்படியென்றால் பிரம்மசபைக்குவந்த மிருகண்டமகாமுனிசுதனில்லாததுயரத்தால்மிகவும் வாடிசோலையிலிருக்கும்போது அவருடையபத்தினியான ஞானச்சதிராளைக் காணும்படியாகரிஷிபத்தினிகள் வருகிறவிதங்காண்க.

ரிஷிபத்தினிகள்வருகிற-தரு-இ-ம்-ஆநந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

நிலமையுடன்றவத்தைவலுமையுடன்புரியும்
ரிஷிபத்தினிமார்கள்வந்தார்

சரணங்கள்.

உலகிலுள்ளபெண்களுமோடிவந்திடி தாழ
ஒருமையானமாதர்களருமையுடனே சூழ
உத்தமியான போதர் - ரிஷி
பத்தினிமாதர்கள் நீதர்
உண்டென்றுலுண்டுஇந்தஅண்டமதிக்கப்பெற்றோர்
ஓதுதற்கொருஆதிமெய்பொரு
ளாதீனத்துதித்தேதும்விட்டவர்
ஒருமையாகமனமுறுதியாகதினங்
கருதிவைத்தசிவனுறுதிபெற்றருளும் (நிலமை)

முதற்பத்தினி- மற்றபத்தினிகளுக்குச்சொல்-கொச்சகம்.

என்னுயிருக்குயிரான யிருடியர்தன்றேவியரே
இங்காசிர்மம்விட்டு யெல்லவருந்தானடந்து
வன்னமலரிருக்கும் வனந்தேடிமலரெடுத்து
துன்னிடநாம்கொண்டையினிற் சூடிவருவோம்வாரீர்

வசனம்.

கேளுங்களம்மாரி ஷிபத்தினிமார்களே நாமெல்லோரும் ஆசிர்மம் விட்டு ஒன்றாய்க்கூடிக்கொண்டு கேளிவிலாசமாய் வனங்கள்தோறும் போய் அவ்விடத்திலிருக்கப்பட்ட நந்தவனங்களிற்புகுந்து நல்லசாதியான மலரெடுத்து கொண்டையில்முடித்துக்கொண்டு மகாவேடிக்கையாய்ப் போகையிலும் வருகையிலும் பந்தெடுத்து விளையாடிவருவோம் வாருங்களடியம்மா.

மற்றப்பத்தினிகள்- முதற்பத்தினிக்குச்சொல்- கவி.

யெல்லியேநீயும்வினவியவாறு
மல்லிகைமுல்லைநல்மலர்சூடிவருவோம்

வசனம்.

அப்படியே உன்சொற்பிரகாரம் வருகிறோம் போவோம்வாருமம்மா.

பத்தினிகள்-சொல்-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-மிசுரதாளம்.

பல்லவி

பத்தினிமாதே - நந்தவனம் - பாரடியிதே

அநுபல்லவி

சுத்திலுமவாவர்சோதித்தம்லெல்லாம்
வைத்திடாமற்பறித்து மடியிலேகட்டுங்கள் (பத்தினி)

சரணங்கள்

பெண்ணேயிக்குறிபார் - செந்தாமரை
யொண்ணேமிற்குதுபார்
கண்ணேநீயுன்னிடகைதொட்டுப்பறிக்காதே
இன்னுநானதின்மேலேயிச்சைக்கொண்டேனடி. (பெண்)

சுந்தரமாதே - சந்தனச்சோலை
தோன்றுவதிதே
வந்திருமெதிராகவருகுதுபந்திதோ
முந்தினபிறகுநீமோசஞ்செய்யாதடி. (சுந்தர)

மங்கையேயோடி பந்தையெடுத்து
இங்கேநீ வாடி
சங்கையில்லாமலேசாலேயிலாடுவோம்
பங்கமாய்த்தோர்த்தோரைப்பத்துகுட்டுகுட்டுவோம் (மங்கை)

ரிஷிபத்தினிகள்சொல்- விருத்தம்.

வேலைப்போல்விழிகள்வாய்த்த மென்கொடிமாதேகேள்நன்
நூலைப்போலிடைகொள்நல்ல நோன்புசெய்மாதேகேளீர்
காலமாய்நாமெல்லாம்பந் தாடினததுவும்போதும்
கோலமாய்ப்பகடைக்கயிற் கொண்டுசற்றுவோமே

வசனம்.

கேளுங்களம்மா ரிஷிபத்தினிகளே நாம்பந்தாடினதுபோதும் இப்போது சற்றுநேரம் நாம் உட்கார்ந்து பகடையாடுவோம் வாருங்களம்மமார்களே.

மற்றரிஷிபத்தினிகள்சொல்-வசனம்.

ஆனால் அப்படியே ஆடுவோம் வாராயம்மா.

ரிஷிபத்தினிகள் பக்டையாடுகிற.

தரு- இ-ம் - கௌளிபந்து - ரூபகதாளம்.

முதல்ரிஷிபத்தினி - சொல்லல்.

சந்திரகாந்திமிகுந்த சுந்தரமாதேநான்
முந்தவிநாயகனைச் சிந்தையிற்றுதித்தேன்
தந்திரப்பாச்சிகையெடுத்தெந்தன்கையிலுணிதோ
தொந்தமாய்விடுத்தேனிந்தவின்னையைப்பாராய்

உ- வது - ரிஷிபத்தினிசொல்லல்.

விந்தையைப்பாராய்நீயென்றுசொன்ன அன்னமேயென்
மந்திரத்திலகப்பட்டயெந்தநல்விதாணியே

உந்தனைக்கெலித்துவாவென் றிந்தவேளையில்நான்
பந்தமாய்விடுத்துவிட்ட அரதத்தைப்பாராய்

௩ - வது - ரிஷிபத்நினிசொல்லல்

ஒன்பதும்பத்தும்பகடைஒன்றாய்கூட விழநான்
தென்புடன்பாச்சிகையெடுத்தேவிட்டேனிதோ

௨ - வது - ரிஷிபத்நினிசொல்லல்

அன்புடன்பனிரண்டுஅழகாய்த்தேடிவிழநான
இன்னமும்பாச்சிகையைத்தொட்டேவிட்டேனிதோ

முதலாவது - ரிஷிபத்நினிசொல்லல்

குங்குமங்கருப்புசோடுகொண்டுகட்டினேனிந்த
சிங்காரம்பாரடியம்மாதெய்வீகமாதே

௨- வது- ரிஷிபத்நினிசொல்லல்

துங்கபஞ்சளும்பச்சையுஞ்சோடுகட்டினேனடி
சங்கையில்லாமலேபாரடிதையலேமாதே

முதலாவதுரிஷிபத்நினிசொல்லல்

எட்டிஇருக்கால்துங்கபாலேயெண்ணிநான்மெள்ளவுன்
இஷ்டமஞ்சள்பச்சைசோடெடுத்தெறிந்தேனே

௨- வது - ரிஷிபத்நினிசொல்லல்

வெட்டுபகையுள்ளதுங்கமெள்ளவேபோட்டுநீ
கட்டுங்குங்குமக்கருப்பைக்கண்டெறிந்தேனே

முதலாவது- ரிஷிபத்நினிசொல்லல்

கட்டினசோட்டைக்கலைத்தகன்னியரோநானிதோ
பொட்டெனக்கெலித்துனையிப்போதுவந்தேனே

௨-வது- ரிஷிபத்நினிசொல்லல்

சட்டமாயுனாத்திடுஞ்சமர்த்தையறியயென்
இஷ்டதேவதையாலுன்னையிதோகெலித்தேனே

முதலாவது- ரிஷிபத்நினிசொல்ல-கொச்சகம்

வந்துவெகுநேரமாச்சுதடியம்மையரே
எந்தன்கணவனுக்குயென்னென்றுசொல்லுவனுன்
முந்தியவர்கோபிப்பார்மொய்குழலாளேநாமும்
இந்தவனம்விட்டுயிருப்பிடம்போய்ச்சேர்வோமே

வசனம்.

அடியம்மா ரிஷிபத்நினிமார்களே நாம்வந்து வெகுநேரமாச்சுது எனது பத்தாவாகிய கணவன்கோபிப்பார் இந்தவனம்விட்டு ஆசிரமம்போவோம் வாருங்களடி யம்மமார்களே.

மற்றரிஷிபத்தினிகள்முதல்ரிஷிபத்தினிக்குச்சொல்

கொச்சகம்.

எத்தனைநாளாச்சுதடி யிப்படியுல்லாசமதாய்
பத்துபேருங்கூடி பரிவுடனேவந்ததுவும்
தத்தைஞானச்சதிராள் தானிருக்குமிடமிதுவே
சற்றவளைப்போய்பார்த்து தாம்நடப்போம்வாருமம்மா

வசனம்.

கேளுமம்மா ரிஷிபத்தினியே இப்படி நாமெல்லோரும் ஒன்றாய்க் கூடிவந்து வெகுநாளாச்சுது அதோமிருகண்டமகா முனியினிட தேவியான ஞானச்சதிராளுடைய ஆசிரமமாகையால் நாமெல்லோரும்போய் ஞானச்சதிராளைக்கண்டுபேசி பிறகு நமது ஆசிரமம் போய்சேருவோம் வாருங்களம்மா,

முதல்ரிஷிபத்தினிசொல்-வசனம்.

ஆனால் அபடியே செய்வோமம்மா.

ரிஷிபத்தினிகள் ஞானச்சதிராளுக்குச்சொல்-கவி

ஆரம்மாஜெயமிருகண்டையர்தன்றேவியரோ
ஆசிரமத்திலருள்ஞானச்சதிரோவாமாய்

ஞானச்சதிராள்-ரிஷிபத்தினிக்குச்சொல்-கவி

சதிரோவாவென்றெந்தன்றலைவாயிற்படியினின்று
மதியாலழைப்பதாரோ வருகுவீர்வளவிற்றனே

ரிஷிபத்தினிகள்-ஞானச்சதிராளுக்குச்சொல்-கவி.

வளவினிலழைத்தமாதே வந்துன்முகத்தைக்கண்டோம்
இளமயிலாளேநீதா னெங்களையறிவாயோடி

ஞானச்சதிராள்ரிஷிபத்தினிகளுச்சொல்-விருத்தம்

ஆகமும்பரிவுமுள்ள அரிவையரோகேளீர்கள்
நாகமங்கையரோசேடன்ரத்தினமணிவிளக்கோ
தேகமுமகிழ்ந்துயென்னைத்தேடியேவரப்பெற்றேனே
வாகைசேர்நீங்கள்வந்தவாறதுவுரைசெய்வீரோ

வசனம்.

வாருங்களம்மாநீங்களார் நாகமங்கையரோ முனிவர்தருடைய தேவிகளோ அல்லது ஆதிசேஷனுடையசிரசில் விளங்கப் பட்டரத்தினமோ நீங்கள் என்னிடத்திற்குவந்த காரியத்தைச்சொல்லுங்களம்மா

ரிஷிபத்தினிகள் ஞானச்சதிராளுக்குச்சொல் விருத்தம்

மாமுனிதேவியான மயிலேமெய்ஞ்ஞானப்பெண்ணே
நாமுமேரிஷிகள்பத்தினிநங்கையே யுன்னைப்பார்த்து
சேஷமமாய்ப்போவோமென்று சிறந்தவாசிர்மந்தன்னில்
நேமகமாகவந்தோம் நிலையெங்கள்வாறுதானே

வசனம்.

கேளாயம்மா ஞானச்சதிரோ நாங்களோரிஷி பத்தினிமார்கள் இன்றையத்தினம் வேடிக்கையாய்ப்புரப்பட்டோம் புறப்பட்ட விடத்திலுனையுங் கண்டுபேசிப்போகலாமென்று உனதுஆசிர்மம்தேடிவந்தோம் இதுதான் எங்கள்வரலாறுஅம்மா,

ஞானச்சதிராள் ரிஷிபத்தினிகளுக்குச்சொல் விருத்தம்,

வந்ததேபாக்கியம்பெற்றேன் மாமுனிதேவிமாரோ
சந்தோஷமாகயிந்த தழைத்தவாசிர்மந்தன்னில்
எந்தனுடனிதாம்நீங்க ளியாவருங்கூடிக்கொண்டு
பந்தாடவேணுமம்மா பரிவுடன்வருகுவீரோ

வசனம்.

அம்மாரிஷிபத்தினிமார்களேநீங்கள் ரிஷிபத்தினிமார்களென்று என்னுடைய ஆசிர்மந்தேடிவந்தபோதே நான்முன்செய்தபாக்கியந்தான்இப்பவும் ஆசிர்மத்தில் நீங்கள்சந்தோஷமாய் என்னுடனே கூடிசற்றுநேரம் பந்துவிளையாடவேணும் வாருங்களம்மா ரிஷிபத்தினி மார்களே.

ரிஷிபத்தினிகள் ஞானச்சதிராளுக்குச் சொல் விருத்தம்

மண்டலமெங்குமல்ல மாமுனியென்றநற்பேர்
கொண்டவேதத்தில்ஞானக் குச்சகபாலனுமிரு
கண்டர்தன்றேவியாரோ கதித்தசெங்கரத்திலேதான்
அண்டொணுப்பந்தையேந்தி யாடுவோம்வருகுவாயே

வசனம்.

கேளுமம்மாஞானச்சதிரோ அப்படியேகைக்கு அண்டாதபந்துகளெடுத்து ஆடுவோம்வாருமம்மா

ரிஷிபத்தினிகளும் ஞானச்சதிராளும் பந்தாடுகிற

தரு-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

ஞானச்சதிராள் சொல்லல்,

பந்தெடுத்தே னிதோ பாரடி
பார்த்துப்பிடித்துநீ சேரடி
அந்தரந்தன்னிலேசுழன்றுவருகுது
தந்திரத்தாலதைமூர்த்திப்பிடியடி (பந்தெடுத்)

ரிஷிபத்தினிகள் சொல்லல்,

இதோ அதோ பந்தென்று ருட்டுறாய் நீ
யென்னடி யெனமெ த்தமிரட்டுறாய்
பதித்தகொண்டைய விழ்ந்துபாரினிற்புரண்டாலும்
குதித்ததைப்பிடிப்பேனே கோதையரேயடி (இதோ)

ஞான்ச்சதிராள் சொல்லல்.

வேகமாய்வருகுதுபந்தடி அதின்
முன்னேயுன் பந்தைநீமுந்தடி
மோகத்தினாற்பந்தை முடுக்காமெறிந்தேனே
முன்பின்பாராதேநீ யென்முன்னேநில்லடி. (வேக)

ரிஷிபத்தினிகள் சொல்லல்

அப்படிநான்மோசம்போவேனோ போனால்
அருந்தவரிஷிபத்தினியாவேனோ
எப்படியாகிலுஞ்செலிப்போமேயல்லாமல்
வனிதத்திற்கிடங்கோலிவைக்கிறதில்லை. (அப்படி)

ஞான்ச்சதிராள்ரிஷிபத்தினிகளுக்குச் சொல் கொச்சகம்

நாகரீகமுள்ளதிரு நங்கையரேநீங்களெல்லாம்
வேகமதாயென்னுடனே மேல்விழுந்துவிளையாடி
ஆகமெத்தமெல்லியரே அலுத்துக்காதடைத்தீரே
தாகவிடாய்தீருங்கள் சத்தரிஷிதேவிகளே

வசனம்.

வாருங்களம்மா ரிஷிபத்தினிமார்களே நீங்களெல்லோரும் என்னுடனே கூடஇந்நேரம் பந்துவிளையாடி மெத்தவுங்காதுவிடாய் கொண்டிருக்குறீர்கள் ஆகையால் நமது ஆசிரமத்தில் தாகசாந்தி செய்யுங்களம்மா ரிஷிபத்தினிகளே

ரிஷிபத்தினிகள் ஞானசதிராளுக்குச் சொல் கொச்சகம்

மெள்ளவந்துரைத்தபெண்ணே விளம்புவோங்கேளுமுந்தன்
வள்ளல்தானெங்கேயடி மைந்தனுண்டோ சொல்லடிநீ
பிள்ளையில்லாரண்மனையில் பெண்ணேதாகமுமருந்தோம்
உள்ளதிதுமாமயிலே யுண்மைதனைச்சொல்வாயே

வசனம்.

கேளும்மா ஞான்ச்சதிரே நாங்கள் உன்வீட்டில் தாகசாந்தி செய்வது இருக்கட்டும் உன்பத்தாவான மிருகண்டரிஷியெங்கே உங்களுக்குப் புத்திரசந்தான மிருக்குதா நாங்கள்கேட்டவார்த்தைக்கு உண்மையாகச் சொல்லுவாயம்மா

ஞானச்சதிராள் ரிஷிபத்தினிகளுக்குச்சொல்-கொச்சகம்,

கள்ளமதுசொல்வதில்லைக் கதித்தமுனிதேவியரே
வள்ளல்நைமிசாரண்ய மாதவத்தோரிடஞ்சென்ருர்
தெள்ளியதோர்பிள்ளையில்லை சிவன்செயலோநானறியேன்
உள்ளங்கலங்கிமெத்தவுருகுதுநானென்னசெய்வேன்

வசனம்.

கேளுங்களம்மா ரிஷிபத்தினிமார்களே உங்களுக்குப் பொய்சொல்வதில்லை என்பத்தாவாகிய மிருகண்டர் நைமிசாரண்யவனம் போயிருக்கிருர் எங்களுக்குப் பிள்ளையில்லை நீங்கள்சொன்னவிசேஷத்தைக்கேட்டு எனதுள்ளமுருகிப் போகின்றது என்னசெய்வேன் எப்படியாகிலுந்தாகம் அருந்தவேணுமம்மா

ரிஷிபத்தினிகளுக்கும்ஞானச்சதிராளுக்கும்-தர்க்கம்-தரு

இ - ம் - புந்நாகத்தோடி - ஆதிதாளம்

ரிஷிபத்தினிகள் சொல்லல்

புத்திரனில்லாதவீட்டில்போஜனம்பொசியோமே
புகழ்பெற்றரிஷிசாதியெங்கள்சாதி அம்மா

ஞானச்சதிராள் சொல்லல்

எங்கள்ஜாதியீதென்று மென்ஜாதியீனமென்றும்
இயம்பலாமோவுங்கட்குவெறுப்பாச்சோ அம்மா

ரிஷிப, வெறுப்பாகநாங்களிப்போ வேருகச்சொல்லவில்லை
விளங்கப்பிள்ளையில்லாத சஞ்சலந்தான் அம்மா

ஞான், சஞ்சலமாவதேதுசதுர்முகன்றலைவிதியைத்
தடுக்கவும்நீதியுண்டோ அம்மமாரே அம்மா

ரிஷிப, அம்மையைப்பாகம்வைத்தஆண்டவனைத்தொழுதால்
ஆதிநாளிற் செய்தவினைதீரும் அம்மா

ஞான, வினைதீர்ந்தபின்பாகிலுமிருகண்டமாமுனிபேர்
விளங்கவெங்களுக்கொரு பாலனுண்டோ அம்மா

ரிஷிப, பாலனிடபாக்கியமும்பதவியுந்தான்பெறுவீர்
பாருநான்சொன்னபடி செய்யுமம்மா அம்மா

ஞான. செய்வேனைமிசாரண்ணியஞ் சென்றமுனிவர்வந்தால்
சேதியுரைத்துதபஞ்செய்வேனே அம்மா,

ரிஷிபத்தினிகள் ஞானச்சதிராளுக்குச்சொல் கவி

அப்படியேசெய்வா யருள்ஞானச்சதிரே
மெய்ப்புடனும்செல விடையதுதருவாய்

ஞானச்சதிராள் ரிஷிபத்தினிகளுக்குச்சொல்கவி

பொற்புடனெனக்குபுத்திகளுரைத்த
கற்பினிலுயர்ந்த கன்னிகளேசெல்வீர்

ஞானச்சதிராள்-புலம்பல்-தரு-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்

தெய்வமேயிதுவென்ன தீவினைவார்த்தையென்
செவியிற்கேட்கலானேன் தெய்வமே

மெய்யானமாதர்க ளென்வீடுவந்துசொன்ன
விபரீதமென்னசொல்வேன் தெய்வமே

சின்னசொல்லைக்கேட்டுத்தியங்கிடவெந்தனைச்
சென்மித்ததென்னமோ தெய்வமே

என்னுடன்சம்மதாயயிருந்திடும்பெண்கள்வந்து
யேளிதஞ்செய்திட்டாரே தெய்வமே

வாளாலேதானறுத்து வதைசெய்திடுகின்ற
வாறுபோலிருந்துதே தெய்வமே

கேளாதவார்த்தையைகேட்டுதானெப்படிக்
கிருப்பதுஞாயமோதான் தெய்வமே

இனிமேலுலகினி லென்போலொத்தபெண்கள்
என்னைநகைப்பாரே தெய்வமே

மனதாசைகொண்டயென் மகிழ்நனுமிந்நேரம்
வந்திடக்காணேனே தெய்வமே

பாலனில்லாப்பாடு பாவிநானாகினேன்
பாடுதானென்னமோ தெய்வமே

சிலமெனும்ரிஷிதேவியர்களுந்தாகஞ்
செயயாமற்போனாரோ தெய்வமே

ஏனேசுதனெனக்கில்லாமற்போனது
ஈசாமயேசாஓ தெய்வமே

மானேபாகத்தில்வைத்தவாயெனக்கொரு
மைந்தனுதவிசெய்வாய் தெய்வமே

பொது-. விருத்தம்.

சித்திமுத்திகளைக்கண்ட சீருள்ளவிருடிமார்கள்
பத்தினியோர்களெல்லாம் பரிவுடன்சென்றபின்பு
புத்திரனில்லையென்ற பெருஞ்சோபத்தாலுறங்கும்
சித்தனுமிருகண்டர்க்குச் சிஷருஞ்சொல்லுவாரோ

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் ஞானச்சதிராளைக்கண்டுபேசி ரிஷிபத்தினிமார்கள் போனபின்பு புத்திரனில்லையென்ற சோபத்தினால் சோலைநிழலில் நித்திரைசெய்திருக்கும் மிருகண்டமகாமுனிவருக்குச் சிஷர்கள் சொல்லுகிற விதங்காண்க.

சிஷர்கள்-மிருகண்டருக்குச்சொல்- விருத்தம்.

தந்தையேகேளீரெங்கள் தாய்தனையாசிரமத்தில்
விந்தையாய்விட்டுவந்து வெகுநேரமாச்சுதையா
இந்தமாநிழலிலேவீற் றிருந்ததாலினிப்புத்திர்ந்தோம்
செந்திருவாசிரமம்போய்ச் சேருவோமெழுந்திடீரோ

வசனம்.

சுவாமிசுவாமி எங்கள்தாயாராகிய ஞானச்சதிராளம்மாளை ஆசிரமத்தில் விட்டுவந்து வெகுநேரமாயிற்று நாமேன் இவ்விடத்தி லிருக்கவேணும் இந்நேரம்போவோம் வாருஞ்சுவாமி.

மிருகண்டர்சிஷர்களுக்குச்சொல்-தரு-

இ-ஞ்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

பல்லவி.

வாராய்மநோன்மணியே - ஆசிரமம்போவோம்
வாராய்சிரோன்மணியே

அநுபல்லவி

பூராயமொழிசேட்ட தாராகிருக்குதே
நிராதோஆராலும் ஆராதடாகூட (வாராய்)

சரணங்கள்.

தத்தைமொழியாளெனும் பெண்சித் தமுங்களித்திட
சுத்திலுமகத்துவமிகுத்துடன்வருகுவீர் (வாராய்)

எந்தன்மனதுங்களிக்க முந்தியேநடந்திடீரோ
அந்தமுள்ளமைந்தர்களே சுந்தரமதாகவே (வாராய்)

கண்டவர திசயிக்க மண்டலம்புகழவே
அண்டபகிரண்டநவகண்டமும்நடுங்கவே (வாராய்)

மிருகண்டர்-சீஷர்களுக்குச்சொல்- கவி.

மணியேமரோன்மணியேவாராய்
மணியேசிரோன்மணியேகேளாய்
மணியேதிகழ்ஞானச்சதிராளை
மணியேயழைத்தோடியேவாரீர்

சீஷர்கள்-மிருகண்டருக்குச்சொல்-கவி.

தேவரீர்சொன்னதிருமொழிப்படியே
ஆவலாயம்மையையழைத்தோடிவருவோம்

சீஷர்கள்சொல்-கவி.

தம்பியையர்சொற்படியேதம்பியிப்போதம்மாளை
தம்பியழைத்தோடியேவருகதம்பிநீவாடாவாடா

சீஷர்-ஞானச்சதிராளுக்குச்சொல்-பரணி.

அம்மாஅம்மாபிர்ம்மசபைக்கையர்போனார்வந்துடனே
நம்மாலழையுமென்றுரைத்தார்நங்கைக்கரசேவாராயே

ஞானச்சதிராள்-சீஷருக்குச்சொல்- பரணி.

தேடிவந்தசீஷர்களேதிசைசமாமுகன்பால்நடந்து
வாடிவந்தமாமுனிபால்வருவேனுனும்வருவீரோ

சீஷர்மிருகண்டருக்குச்சொல்- பரணி.

ஐயரேநின்சொற்படியே ஆசிர்மத்துள்ளாகப்போய்
வையம்புகழெங்களைப்பெற்றமாதாவைத்தானழைத்துவந்தோம்

மிருகண்டர்-சீஷருக்குச்சொல்-பரணி.

பாக்கியம்பாக்கியஞ்சீஷர்களேபரிவாயெந்தனிடர்தனிலே
யோக்கியாயோக்கியமாயிருந்(த)நமக்கோர்குறைவுமில்லைத்தானே

ஞானச்சதிராள்-மிருகண்டருக்குச்சொல்- பரணி.

பிர்மசபைக்குப்போயிருந்தபிராணேசாநீரெனையழைத்த
மர்ம்மமேதாகிலுமுண்டோவழங்குங்குறைவிலாவென்சாமி

மிருகண்டர்-ஞானச்சதிராளுக்குச்சொல்- கொச்சகம்.

எந்தன்பட்சமானபெண்ணே யான்போனசபையிலொரு
விந்தையாய்த்திசைமுகனும் வியாசரைக்கேட்டாரவரும்
மைந்தனில்லாதார்க்குசொர்க்க வழியில்லையென்றுரைத்தார்
அந்தமொழிகேட்டெழுந்து அலறிவந்தேனென்னசெய்வேன்

வசனம்.

கேளும்பெண்ணே ஞானச்சதிரே நான் பிர்ம்மசபைக்குப் போன யிடத்தில் பிர்ம்மா காரண விசேஷங்களைப் பேசும்போது வியாசர்சொ

ன்னது என்னவெனில் பிள்ளையில்லாத பேர்களுக்குச்சொர்க்கமில்லையெ னகிறதாய்சொன்னார் அந்தமொழியைப நானுங்கேட்டேன் கேட்டமாத்தி ரத்தில் எனக்குச்செவியில் நாராசமேற்றினைப்போலிருந்தது அந்தட்சண மேபிள்ளையில்லாதவர்க்குஎப்படியுபாயமென்றுகேட்டேன் அதற்குஈச னைநோக்கித் தபதனைச்செய்யச்சொன்னார் அதைக்கேட்டு மனங்கலங்கி யோடிவந்தேன்பெண்ணே ஞானச்சதிரே.

ஞானச்சதிராள்-மிருகண்டருக்குச்சொல் - கொச்சகம்.

பிரமசபைதன்னில்வந்த பேச்சதுவுமல்லாமல்
பரமனருள்பெற்ற ரிஷிபத்தினிமாரிவடம்வந்து
அருமதலையுண்டோவென் றவர்கேட்டாரில்லையென்றேன்
திருமயிலேபாவியென்று செப்பியவர்போனரே

வசனம்.

கேளும் என்பிராணநாதரே நீரல்லவோ பிர்ம்மசபையில் அப்படிக்குக்கேட்டுவந்தீர் இவ்விடத்தில் யாரோசில ரிஷிபத்தினிகள்வந்து என்னுடன் பந்தாடினார் பந்தாடினபேருக்கு இளைப்புதீரத் தாகத்திற்குச் சலங்கொண்டுபோய்க் கொடுத்தேன் அதைவாங்காமல் உங்களுக்குப் பிள்ளையிருக்கிறதாவென்று கேட்டார்கள் நான்பிள்ளையில்லையென்று உண்மையைசொன்னேன் என்முகம்பாராமல் அடிபாவிபாவியெனறு சொல்லிப்போனார்கள்சுவாமி.

மிருகண்டர்-ஞானச்சதிராளுக்குச்சொல்-வசனம்.

அப்படியா ஆனால் அவர்கள்வந்ததும் உன்னுடனே பேசினதும் எனக்கு விபரமாகச் சொல்லுவாய்பெண்ணே.

ஞானச்சதிராள்- மிருகண்டருக்குச்சொல்- புலம்பல்

கண்ணி-இ டு-கண்டா.

சட்டமாய்பிர்ம்மசபையில்
சங்கையறிந்துவந்த ரிஷிநாதா - இங்கு
தானடந்தசங்கதியை
நானுரைப்பேன்கேளுமெந்தன ரிஷிநாதா

வட்டவிழியானரிஷி
மாதொனருசீர்யம்வந்து ரிஷிநாதா - என்னை

வண்மையுடனேயழைத்து
வள்ளலெங்கேயென்றுகேட்டார் ரிஷிநாதா - நான்

வந்தவரைப்பந்தாடுவோம்
வாருமென்றுடனழைத்தேன் ரிஷிநாதா - எந்தன்

வார்த்தைக்கிசைந்தென்னோடு
வந்தாடினார்பந்தெடுத்து ரிஷிநாதா

தொந்தமாய்ப்பந்தாடினர்
சோர்ந்துமிகக்களைத்தார் ரிஷிநாதா - நான்

தொத்தியடிவணங்கி
தொழுதுசலங்கொடுத்தேன் ரிஷிநாதா

உங்களுக்கேதேனும்பிள்ளை
உண்டோவென்றென்னைக்கேட்டார் ரிஷிநாதா - நான்

உள்ளதாய்ப்பிள்ளையில்லையென்
றுரைத்தேனப்போதவர்க்கு ரிஷிநாதா

தங்காமற்பாவியென்று
தாகஞ்செய்யாமற்போனார் ரிஷிநாதா - அதற்குத்

தருத்தினியென்செய்குவ
தம்மணியுரையுமென்றேன் ரிஷிநாதா

புத்திரனும்வேணுமென்றால்
புருஷனும்நீயுமாக ரிஷிநாதா - வனம்

புகுந்தெழிற்சங்கரனைப்
போற்றித்தவத்தைச்செய்தால் ரிஷிநாதா

கர்த்தனும்வந்துங்களைக்
காத்திரட்சிப்பாரென்றார் ரிஷிநாதா - எந்தன்

கண்ணீர்துடைத்துவிட்டுக்
கடுகெனநடந்திட்டார்காண் ரிஷிநாதா

மிருகண்டர்-ஞானச்சதிராளுக்குச்சொல்-கொச்சகம்.

சந்திரனைப்போல்விளங்குந் தையலரோனான திந்து
வந்துரைத்தவாறேநீ மாதர்சொன்னதொன்றுரைத்தாய்
சுந்தரமேமொழியிரண்டுந் [illegible]தகமதாயிதற்கு
அந்தரங்கமானதெனக் கறிய[illegible]ரைப்பாயே.

வசனம்.

வாராய்பெண்ணே ஞானச்சதிரே நான் பிரம்மசபைக்குப்போய் அறிந்துவந்தசொல்லுக்குச் சரியாகத்தானே நீயும்ரிஷிபத்தினிகள் சொன்னதைச்சொன்னாய் நமக்கும் பிள்ளையில்லாதபடியினாலல்லவோ இவ்விரண்டுசொல்லும் நமக்குத்தொடர்ந்தது இதற்குன்கருத்தில் என்னநினைத்தாய்சொல்லும்பெண்ணே.

ஞானச்சதிராள் - மிருகண்டருக்குச்சொல்- கொச்சகம்.

அகமகிழவெனைக்கேட்ட அருமுனியேநீர்கேளீர்
மகிணன்சொல்லைத்தடுத்து மறுவார்த்தைசொல்வதுண்டோ
செகமதனிலெங்கினும்போய்த்திரிகுவாப்பட்டவர்நீர்
வகையெனக்கீதெனவுரைத்தால் மனமகிழ்ந்துசெய்வேனே

வசனம்.

கேளும்என்பிராணநாதா அடியாளைக்கேட்டால்எனக்கென்னதெரியும் நான்என்சிந்தையில் நினைப்பதென்ன தேவரீர் எந்தசபைக்கும்போய வரப்பட்டவர் உமக்கல்லவோதெரியும்நீரென்னசொன்னபோதைக்கும் அந்தப்படியேநடந்துவருவேன்இதற்குத்தேவரீரோசொல்லவேணுஞ்சுவாமி

மிருகண்டர்ஞானச்சதிரர்ளுக்குச்சொல் விருத்தம்

மாதருக்கரசேவியாசர் வழங்கினபடிநமக்கு
ஆதின்த்தோர்க்குபிள்ளையாகிலுமிலாததாலே
எதுபோனாலும்பெண்ணே ஈசனார்பாதந்தேடி
போதுநாந்தபத்தைச்செய்து பிதல்வனைப்பெறுகலாமே

வசனம்.

கேளாய் பெண்ணேஞானச்சதிரே நமக்குவெகு காலமாய்ப் புத்திர சந்தானமில்லாதிருப்பது நமக்குத் தெரியுமே ஆகையாலந்தவேதவியாசர் சொன்னபடிக்கு நாமிருவருங்கூடி கானகத்திற்சென்று ஈசனைநோக்கித் தவத்தைச்செய்து அதிகபாக்கியம்பெற்றுவருவோம் வாரும்பெண்ணே

ஞானச்சதிராள் மிருகண்டருக்குச் சொல் விருத்தம்

வல்லமையுடையவேத மாமிருகண்டரேகேள்
செல்வனில்லாததென்ன சென்னமேசெனனங்கண்டீர்
அல்லலைத்தீர்க்கநாமு மறிவையொன்றாகச்செய்து
எல்லையில்தவத்தைச்செய்வ தெனக்கதுநன்றுதானே

வசனம்.

கேளும் என்பிராணநாதா புத்திரனில்லாத சென்னம் என்னசெனனம் தேவரீர்மனதின்படி அல்லலைத்தீர்க்க ஈசனைநோக்கித் தவத்தைச்செய்து புத்திரபாக்கியம் பெறுவோம் புறப்படும் என்பிராணநாதா

மிருகண்டர் சீஷர்களுக்குச் சொல் விருத்தம்

ஆடாசீஷரோயென் அடியாளுநானுமிப்போ
சீருடன்தபத்தைச்செய்து செல்வனைப்பெறுவதற்கு
பாரடாயிடந்தானுதி பரமனைக்காணவேணும்
ஓடையாளமாக வோடிவந்துரைசெய்வீரோ

வசனம்

ஆடா சீஷர்களே நானும்எனதுதேவியுமாக ஆரணியத்தில்தபஞ்செய்து ஈசனைக்கண்டு புத்திரபாக்கியம்பெற்று வரவேணும் ஆகையால் தபஞ்செய்ய நல்ல யோக்கியமான யிடமாய்ப்பார்த்து வாருங்களப்பா சீஷர்களே.

சீஷர்கள் சொல் பாணி.

நம்மையாளையரும் நமதம்மாளும்
செம்மையாய்த்தவத்தைச் செய்யநினைத்தார்
நம்மைப்போயிடத்தை நாடிப்பாரென்றார்
வண்மையாய்ப்பார்த்து வந்துரைப்போமே

பொது விருத்தம்

மாசிலாமிருகண்டையர் வந்தினிற்றவத்தைச்செய்து
ஈசனைக்காண்பதற்கு யிடமதைப்பார்க்கச்சொல்ல
ஆசையாய்சீஷர்கூடி யடர்வனம்வருகும்போது
நேசமாயவ்வனத்து ரிஷிகளும்வருகின்றாரோ

கட்டியக்காரன் சொல் வசனம்

அகோதெப்படியென்றால் இவ்விதமாகமிருகண்டர் தபத்தைச் செய்ய இடம்பார்க்கும்படியாய் தம்முடைய சீஷர்களை யனுப்ப அவர்களிடத்தைத் தேடிக்கொண்டுவருகிற தருணத்தில் அவ்வனத்தில் தபஞ்செய்யப்பட்ட ரிஷிகள் யாவருங்கூடிக்கொண்டு அவ்வழியாய்வருகிற விதங்காண்க

வனத்துரிஷிகள்வருகிற-தரு-இ-ம்-சங்கராபரணம்- அடதாளம்

பல்லவி,

நினைத்தபடிமுடிக்கவே-சிவத்தைக்காண
வனத்துரிஷிகள்வந்தாரோ

அநுபல்லவி

கனத்தமுனிவர்களைக் கணத்திலடைக்க
காரணமறிவா ருதாரணமாகிய
சீரணிவன்மதி ...ரணமாகிய (நினைத்த)

சரணங்கள்

தவத்துக்குமிக யோக்கியர்-பஞ்சாட்சரந்
தனைத்துதிக்குஞ் சிலாக்கியர்
பவத்தைப்பறக்கடிக்கப் பண்ணும்வலுமையுள்ளோர்
பரமனும்நிமையினி லருகினில்வரும்விதம்
தெரிகுவர்சிவசிவ ஹரஹரவெனநிதம் (நினைத்த)

மதத்தபேர்களைச் சபிப்போர் உலகிலுள்ள
மர்ம்மத்தையெல்லாஞ் செபிப்போர்
மிகுத்தவயனவிதியை வெல்லமுறைதெரிந்தோர்
விண்ணவராசர்க ளெண்ணினுமிவர்களைப்
புண்ணியர்களென வெண்ணிடமனதினில் (நினைத்த)

கண்டவர்மனங் கலங்கநீறணிமலர்
காத்தினில்தெண்டு துலங்க
மண்டலம்புகழவே மணிசடையாடவே
யமரர்களெவர்களுமுவமையீதென்னவே
உமையவர்தான்மகிழநிமையினில்வனமதில் (நினைத்த)

வனத்துரிஷிகள்சொல்கொச்சகம்

காட்டிலுள்ளமிருகங்களே காக்கையெங்கள்வாக்கினைக்கேள்
நாஷ்டிகமதாயுவனத்தில் தனித்துவந்தோர்தவத்தைசெய்ய
ஓட்டிவிடாதேயிருங்க ளுங்களுக்கோர்புண்ணியந்தான்
நீட்டுடனேகாலூன்றி நிலத்தில்நின்றோந்தவத்தினிற்கே

வ-ம், கேளுமிவ்வனத்தில் வாழுமிருகங்களே பறவைபட்சிகளே நாங்கள் ஈசனைநோக்கித் தவத்தைச் செய்யக்காலூன்றி நிலத்தில்நின்று விட்டோம் எங்கள்தவத்திற்குப் பின்னம்வாராமல் பார்த்திருங்கள் தவஞ்செய்தால்உங்களுக்குப் புண்ணியமுண்டு

வனத்துரிஷிகள்தோத்திரஞ்செய்கிற-கண்ணிகள்-எச்சரிக்கை

ஐயனேமலர்க்கையனேயுமை
யடுத்தோம்துதிதொடுத்தோம்
மெய்யனேயெங்கள்துய்யனேவந்து
விடுவாய்பின்புநடவாய்
மூத்தனேபரிசுத்தனேயாதி
மூலமேன்யின்னஞ்சாலமேன்
அத்தனேயெங்கள்கர்த்தனேயிங்கு
அடுப்பாய்வரங்கொடுப்பாய்
ஈசனேபூமயேசனேயுன்னை
யெண்ணினோமிகநண்ணினோம்
வாசனேபிரகாசனேமுன்பு
வருவாய்வரந்தருவாய்

சிஷர்கள் வனத்துரிஷிகளுக்குச்சொல்-வசனம்.

ஆனாயா பிவ்வனத்திலே பாரம்பரியமாய்க்காலாகாலமாய்த்தபஞ்செய்து காதுங்கண்ணும்மூக்கும்வாயும் அடைபட்டுபோனபெரியோர்களே பொச்சுபொச்சாயிருக்கும் தாடியும்மீசையும் சிகையும்வளர்ந்த சிறியோர்களே சந்நியாசிகளேதபசிகளே எங்கள் குச்சகமகாமுனிவருடைய குமாரரான மிருகண்டமகாரிஷியும் அவர்தேவியுமாகத் தவஞ்செய்யவருகிறார் அத்தவத்துக்கு கொஞ்சம் இடமகப்படுமா அகப்பட்டுத் தவஞ்செய்தால் ஈசனைக்காணுவாராகில்இருமாபாகதியடைவாரா சொல்லும்

கள்ரிஷிகளே தபசிகளேசந்நியாசிகளே அடாதம்பிஞானச்சிரோன்மணி இவ்விடத்திலிருக்கும் ரிஷிகள்பேசப் போகிறதில்லை நாமேன்வீணைகத் தொண்டைக்குக்கேடாய் கத்தவேணும் அண்ணே அதுவா நியாயம் அதோ ஒருவர் இப்போதுதான் கண்ணைத்திறக்கிறார்பார் அவர்தான்சொல்லுவார் சற்றுபொறு ஆக்கப்பொறுத்தது ஆறப்பொறுக்க வேண்டியதில்லையா அண்ணே.

வனத்துரிஷிகள் சீஷர்களுக்குச்சொல்விருத்தம்,

ஆரடாயிவ்வனத்திலருகையாயோடிவந்து
ஓரிடங்கேட்பதாரோ வங்களூர்பேர்தானன்றாய்
வீருடனெங்களுக்கு விவரமாயுரைப்பீராகில்
சீருடனிடமிருக்குஞ் செய்தியைச்சொல்லுவோமே

வ-ம், ஆரப்பா இந்தஅடர்ந்தவனத்தில்சுனையருகில்வந்து இடங்கேட்கப்பட்டபேர்நீங்களார் தபசியார் ஊர்பேரென்ன இன்னமொருதரந்தெரியச்சொல்லுங்கள் கேட்கவந்ததற்கு இடஞ்சொல்லுகிறோம்

சீஷர்-ரிஷிக்குச்சொல்-கவி,

திருக்கடவூரில்வாழ்கின்ற
செபமாமிருகண்டையர்வந்து
உருக்கமதாகத்தவஞ்செய்ய
வோடியிடம்பாரென்றாரே

வ-ம், கேளுங்கள்சுவாமி வனத்துரிஷிகளே திருக்கட வூரில்வாழும்மிருகண்டரிஷியும் அவருடையதேவியுமாய் தபஞ்செய்யஎங்களையிடம்பார்த்து வரச்சொன்னார் நாங்களோர் அவருடைய சீஷர்கள் இடந்தரவேண்டுஞ் சுவாமி

வனத்துரிஷிகள் சீஷர்களுக்குச்சொல் விருத்த

சுபமதியுடையவேத சுந்தரமிருகண்டர்க்கு
அபத்தநாம்சொல்வதில்லை அவர்மனமகிழ்வதாக
தபமதுசெய்யச்சாலை சந்தனச்சோலையுண்டு
செபமிகுசீஷரோநீர் க்ஷணத்தினிலழைத்துவாரீர்

வ-ம், வாருங்களப்பா மிருகண்டருடைய சீஷர்களே அவர்மகாயோக்கியர் அவருக்குநாங்கள் அபத்தஞ்சொல்லக்கூடாது அவர்தபஞ்செய்ய சந்தனச்சோலையும் தடாகங்களுமிருக்கின்றது அவருக்கிது மகாயோக்கியமானயிடந்தான் சீக்கிரமாகஅழைத்துக் கொண்டுவாருங்களப்பா சீஷர்

சிஷர்மி-ருகண்டருக்குச்சொல்-கவி.

ஐயாஐயாதாம்சொன்ன
அடர்ந்தவனத்திற்குள்ளேபோய்
மெய்யாய்தபத்திற்கிடம்பார்த்து
வேடிக்கையாகவந்தோமே

மிருகண்டர் - சிஷருக்குச்சொல் - பரணி.

வேடிக்கையாகநீபார்த்து
விட்டதானெங்கேசிஷர்களே
பாடிக்கயிலேவாசகனைப்
பணிவேநடக்கத்துணிவேனே

சிஷர் - மிருகண்டருக்குச்சொல் - விருத்தம்.

சந்தனமரத்திநீழல் சாக்குகள்படர்ந்துமெத்த
விந்தையாயிருக்குதங்கேவிளங்கியபிடந்தானையா
மைந்தனைப்பெறவீணையா வள்ளல்மந்தருளேசெய்ய
செந்திருசதிராளோடுசிவபதஞ்செய்யவாரீர்.

வசனம். சுவாமி சுவாமி நாங்கள்போய் பார்த்துவந்தவிடத்திலேச ந்தனச்சோலை நெருங்கியிருக்கின்றது தடாகமு மிருக்கின்றது வெகுரிஷிகள்தபமீ புரிகிறார்கள் தாமும்வந்து தபஞ்செய்தால் உடனேயீசனைக்க ண்டு புத்திரபாக்கியம் பெறுவீர்வாருஞ்சுவாமி.

மிருகண்டர்- ஞானச்சதிராளுக்குச்சொல்-பரணி.

பெண்ணேஞானச்சதிரேகேள்
பிள்ளைகளெல்லாந்தானடந்து
கண்ணேதவத்திற்கிடம்பார்த்து
கடிதில்வந்தார்வருவாயே

மிருகண்டர்சொல்- தரு-இ-ம்-தோடி-ரூபகதாளம்.

பல்லவி.

நல்லகானகமிதுவோ மனோன்மணி சிரோன்மணி
கண்டாமணி-சிந்தாமணி-நீங்கள்வந்து-சொல்லும்வனமிதுவோ

அநுபல்லவி.

மல்லிகைவாசனை முல்லையணிந்திடும்
இல்லைமயேசனை-மெல்லப்பணிந்திட (நல்ல)

சரணங்கள்.

சந்தனசோலையின் விந்தைகளேயிது
நந்தவனங்கள் மிகுந்தகானகமிது (நல்ல)

சோலைநெருங்கியஆலயந்தோணுது
நீலகண்டரிருந்தசோலைபோற்காணுது (நல்ல)

சிங்காரந்தன்னைநாம்பொங்கமாய்ப்பணிந்திட
இவ்வனமேதயந்தங்கியிருந்திட (நல்ல)

சிஷர்-மிருகண்டருக்குச்சொல்-பாணி.

ஓங்கிநடந்துதான்வந்தவுறுதியுள்ளஐயாவே
நாங்கள்பார்த்தயிடமிதுவேயன்றல்லோவுலாப்பீர்

மிருகண்டர்-சிஷர்களுக்குச்சொல்-விருத்தம்.

மாணிக்கப்பொருளேதிவ்யமநோன்மணிசிஷியாநீகேள்
ஆணிப்பொன்முத்தேஞான அதிசிரோன்மணியேநீங்கள்
பூணிப்பார்த்ததினாலிந்தப் புண்ணியவிடங்கண்டோர்நாம்
ஊனிட்டசிவனையிந்த வுடனுக்குள்காணலாமே.

வசனம்- ஆசடா சிஷர்களே நீங்களெனக்காக வெகுதூரம்வந்துபார்த்தபடியினாலே உங்களுக்கு இப்போக்கொத்த யிடமகப்பட்டது இவ்விடமேயிருக்கட்டும் உடனேயீசனைக்காணலாம்.

சிஷர்-மிருகண்டருக்குச்சொல்- விருத்தம்.

ஐயரேகேளீரையா யாவருந்தலைகீழாக
மெய்யனைநோக்கியிங்கு வெகுகாலந்தவஞ்செய்கின்றார்
செய்கினுஞ்சிவனைக்காணார் தேவரீர்செய்தபத்தால்
வையவேயிவர்களெல்லாம் பரமனைக்காணுவாரோ

வசனம்-சுவாமிசுவாமி இவ்விடத்திலிதோ தவஞ்செய்யப்பட்ட தபசிகளெல்லாம் தலைகீழாக நட்டுக்கொண்டு வெகுகாலமாய்த் தவஞ்செய்கிறார்கள் இதுவரையிலும் பரமசிவனைக் கண்டபேர்களில்லை தேவரீர்செய்யவந்ததபோபலத்தினாலே இவர்களெல்லாம் யீசனைக்காணலாயிற்று நாங்களும் அந்தசந்திலே காணுவோம்சுவாமி.

மிருகண்டர்- ஞானச்சதிராளுக்குச்சொல்-விருத்தம்.

மதியுள்ளமாதேகேளாய் வனத்தினில்வந்துவிட்டோம்
மதியுடனென்னைப்போலுன் மதியையொன்றாகச்செய்து
மதியுற்றபாலன்வேண்டி வள்ளலைமனதிலெண்ணி
மதியுமேகலங்கிடாமல் மாதபத்திருந்திடாயே

வசனம்- வாராய் மிகுந்தமதியுள்ள ஞானச்சதிரே புத்திரவாஞ்சையினாலே நமது ஆசிரமம்விட்டு ஆரணியமான மலையடிசாரலிலே வந்துவிட்டோம் தபத்துக்கு யோக்கியமான யிடந்தான் ஆனதாலெனது மதியைப்போலவே யுனதுமதியையும் ஒன்றாக்கிப் பரமசிவத்தை மனதிலெண்ணி தவம்புரிவாய்பெண்ணே.

மிருகண்டரும் - ஞானச்சதிராளும் -புத்திரனில்லாமையால்
ஈசனைநோக்கித் - தவஞ்செய்தல்.

ஞானச்சதிராள்- மிருகண்டருக்குச்சொல்-பாணி.

கெதிபெருமுனையேமதியையெ[illegible]ருக்கி
சுதன்றனைவேண்டிகதிதபஞ்செய்வேன்

சிஷ்ர்கள்சொல்-பாணி.

அம்மாளும்அய்யாவுங்கூடியருமையாய்தவத்தைச்செய்தால்
நம்மாலானபடியிட்க்கை நாடித்தவம்நாம்செய்வோமே

மிருகண்டரும்-ஞானச்சதிராளும்- தபஞ்செய்கிற-தரு-

இ-ம்- ஆனந்தபைரவி.

ஆத்திமலரையணிந்தேனேயுனைப்
போற்றிவந்துதவம்புரிந்தோம் (அரகர)

கூத்துவனேயாதிமூலமேயெங்கள்முன்
தோற்றிவந்துவரந்தருவாய் (அரகர)

சீஷர்சொல்-தரு

தோற்றுங்கடல்மீனைத் தோணக்கொண்டுவந்து
ஆத்தின்சலத்திலலைத்தேயெடுத்து
தூற்றியெண்ணையைவிட்டுச் சொய்யுஞ்சொய்யெனவறுத்து
பார்த்துபடைக்கிறேன் பகலிரிஷியே

மிருகண்டரும்-ஞானச்சதிராளுஞ்சொல்-தரு.

ஆற்றுங்கரைதேடிவந்துயிருவரும்
நேற்றியுடனேதவம்புரிந்தோம்   அரகர

வேற்றுமையாசயிராமலேயெங்களைப்
பார்த்துவந்துவரந்தருவாய்   அரகர

சீஷர்சொல்-தரு

பார்த்துப்பார்த்துமகிழ்ந்துபாவையைவிட்டிங்கு
ஆத்திரமாய்வந்துஅலைவானேன்
காற்றுமழையில்நிற்கக்காறணமேனொரு
கூத்தியாரைக்கொடுங்கொன்றையனே

மிருகண்டரும்- ஞானச்சதிராளும்சொல்-தரு.

சங்கரனேசுதன்வேணுமென்றேயெண்ணி
இங்குவந்துதவம்புரிந்தோம்   அரகர

பொங்கமுடன்விடையேறியேவந்தெங்கள்
சங்கைகள்தீரவரந்தருள்வாய்   அரகர

சீஷர்சொல்-தரு

சங்கையாயிருந்திடத்தாளாதேயெப்படி
வங்கைப்பிசாசேநீவாவா
இங்கிதகருப்பண்[illegible]யேவாடி
உங்களைக்கொல்லுவோம்ஓடிவாவா

மிருகண்டரும்- ஞானச்சதிராளும்சொல்-தரு.

மங்கையிடபாகம் வைத்தவனேவனம்
தங்கியிருந்துதவம்புரிந்தோம்   அரகர

கங்கையுடன்கூடவந்துஎங்களிட
அங்கங்குளிரவரந்தருவாய்   அரகர

சீஷர்கள்சொல்-தரு

அங்கம்பசிக்குதுஅடிவயர்பெருக்குது
எங்கேதாம்போவோம்அப்பாலே
பொங்கலிடுகிரோம்பொலிகெடாவெட்டுரோம்
இங்கேநீயோடிவாயீஸ்பரனே

28

திருக்கடவூர் - ஈசன்,

மிருகண்டர்சொல்-தபங்கழிநெடில்விருத்தம்-இ-ம் நீலாம்புரி

விடைமீதேரியசங்கரனே விண்ணோர்துதிக்குமெய்யோனே
விமலாநீவரமேதருவாய்
வடிவேவடிவேநற்றிருவேமதியேமதியேமெய்யுருவே
வருவாய்நீவரமேதருவாய்
எந்தாயுமையேமநோகரியேயெங்கள்குறையுந்தீர்ப்பாயே
இனிதாய்வரமேதருவாய்
சந்தானம்வேண்டித்துதித்தோஞ்சாஷ்டாங்கமதாகப்பணிந்தோம்
சாமிநீவரமேதருவாய்

வேடர்வருகிற-பொதுவிருத்தம்,

புத்திரவாஞ்சையாலே புண்ணியமிருகண்டையர்
கர்த்தனைத்துதித்துநிற்குங் காலத்திற்யுதுணையாக
எத்திசைநடுநடுங்க யிருளிடியிடித்தாற்போல
மெத்தவெற்றிகள்கொள் காட்டுவில்லியர்வருகின்றாரோ

கட்டியக்காரன்சொல்-வசனம்,

அகோதெப்படியென்றால் இப்படியாக மிருகண்டரும் அவர்தேவியாகிய ஞானச்சதிராளும் புத்திர பாக்கியத்திற்காகத் தபஞ்செய்திருக்குங் காலத்தில் அந்த வனத்திலிருக்கும் வேடர் வேட்டையாட வருகிற விதங்காண்க

வேடர்வருகிற-தரு-இ-ம்- புந்நாகவராளி-ஆதிதாளம்,

பல்லவி.

வனத்துவில்லியர்வருகிறார்-வெகு
வலுமையுடையகுட்டிப்புலியைமிரட்டித்தட்டி (வனத்து)

அநுபல்லவி

நினைத்தப்படியேகாளி நேரிட்டமிருகத்தைப்
போரிட்டுமடித்திட நேரிசங்கைப்பிடித்திதோ (வனத்து)

சரணங்கள்

காட்டெருமைகளையெல்லாம் கூட்டைவிட்டேகலைத்து
ஆட்டுக்குட்டிகள்போல ஓட்டிவிட்டடிக்கயிதோ (வனத்து)
சிங்கக்குட்டிகளெல்லாம் வங்கைப்பசாசைப்போல்
எங்கெங்கொளிப்பபென்று அங்குநின்றுதிகைக்க (வனத்து)
வெள்ளைமுசல்களெல்லாம் பள்ளத்திலேபதுங்கி
மெள்ளமெள்ளவொதுங்கித் தள்ளித்துள்ளிக்கொண்டோட (வனத்து)

முதல்வேடன்சொல்-கவி,

கானகக்கடம்பா ஏனகத்துடும்பா
மானுகள்படும்வலை தானெதோகொடுதா

வ-ம், இதாங்கானக்கடம்பாங் என்னடாங்வனகத்துடும்பாங் இதாங்மான்வலை யெடுத்துவாடாங் எண்டாங்வலைகட்டி வேட்டையாடுவம் எடுத்துவாங்கடாங் இதோஎடுத்துவந்தேன் பாரடாங் பாரடாங்

வேடர்வேட்டையாடுகிற-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி

பரும்வலையையெடடாஐயேஐயேயிந்தப்
பள்ளத்தில்விடடாஐயே

அநுபல்லவி

பருவம்வலையெடுத்திந்தப்பள்ளத்தில்விடுத்தந்த
கருங்கன்னியைப்[illegible]சுக்காட்டைகலத்திடுவோம்

சரணங்கள்

வருப்புலிகாடிகள்மதமுற்றயானைகள்
பெருந்தலைசிவிங்கிநாய்பிரண்டுவிழுகுமிதில் (பரும்)

ஓடுங்கவுரிமான்ஒருபுள்ளிமான்பன்றி
கூடிக்கூடிபலைந்துகுருடர்போல்விழுகுமிதில் (பரும்)

வானம்பாடிபறவைவகையுள்ளகுயில்மயில்
கானகத்தில்மயங்கிக்கடுகவிழுகுமிதில் (பரும்)

வாணருக்கீயாதமடையனைப்போற்காக்கும்
வீணருக்கெதிர்வந்துமிரண்டுவிழுகுமிதில் (பரும்)

உ-வது-வேடன்சொல்-கவி,

பரும்வலையெடுத்தும் பள்ளத்தருகினிற்கட்டிவந்து
பெருமிருகங்கள்துரத்தித் துரிதவேட்டைகள்செய்வீரோ

வ-ம், இதோங்கானகக்கடப்பாங் எனடாங் எனைத்துடும்பாங்இதோ ங் பள்ளத்தில்வலைகட்டிமிருகங்களைக் கலைத்துவிட்டோம் கலைத்தமிருக ம் ஓடிப்போகாமுன்னம்பிடித்து இங்க வேட்டையாடுங்கள்.

முதல்வேடன்சொல்-கந்தார்த்தம்.

௧ சுத்திலுங்கடம்பைமான் தூரத்தில்மேயுதாயே
பத்தியாய்முசல்கூட்டங்கள் பள்ளத்திலிருக்குதாயே
வெற்றிசெய்யாளியொன்று விடுபட்டுதேயுதாயே
உத்தமத்துடையமான்களெல்லாமிரோ

ஓடுருடையே-ஒன்றோடொன்று கூடுறுடையே
ஓடுறு கூடுறு-தேடுறு பொறு பொறு
நாடுறு மனந்தட மாடுறு அரோடையே

உ-வது-வேடனசொல் கந்தார்த்தம்

உள்ளமுமகிழ்ந்துயானை வுருப்புறுபாரடையே
துள்ளியேயாளியொன்று சொகுசுடன்பார்க்குதாயே
கொள்ளையாய்மயில்வர்க்கங்கள் கொக்சரித்திடுகுதாயே
பள்ளத்திலிருந்தமுசல்களெல்லாமிரோ

பரிக்குருடையே நம்மைக்கொண்டு சிருக்குறுடையே
பறக்குறு சிறக்குறு இருக்குறு பொறு பொறு
அரிக்கலா மரிக்கலாம் பொரிக்கலாம் அரோடையே (பரி)

ஈ-வது-வேடன்சொல்-கந்தார்த்தம்.

வில்லியர்தலைவர்யிந்த வேடிக்கைபாரடையே
துல்லிபகடம்பைகானில் தூங்குருபதுங்குதாயே
மல்லியேயோடுமானல் மடங்கிபோர்செய்யுதாயே
சொல்லிக்கொண்டோடிவருகா[illegible]னந்தலை

தூக்குறுடையே கொம்பைமண்ணில்தாக்குறுடையே
தூக்குறு-தாக்குறு-பார்க்குறு பொறு பொறு
எக்குறு நோக்குறு வாக்குறு அரோடையே (தூக்குற)

சு-வது-வேடன்சொல்-கந்தார்த்தம்.

பக்கத்திற்பதுங்கிவாங்கள் பாக்கியம்பலிக்குதாயே
கொக்குகள்கூட்டமிட்டு குருடர்போல்தவிக்குதாயே
சக்களத்திக்குவந்த சண்டைபோலுழலுதாயே
முக்கிகக்கிகிக்கி யென்றுகொசகு

முளிக்குருடையேபள்ளத்தினில்ஒளிக்குருடையே
முளிக்குறு-வொளிக்குறு-மிளிக்குறு-பொறு-பொறு
விளைக்கலாம்களைக்கலாம்துளைக்கலாம் அரோடையே (முளித்)

முதல்வேடன்சொல்-விருத்தம்

இந்தாலமரத்தின்மீதி லிளைச்சலேதோன்றுதே
குந்தியேயிருந்துபார்க்க கூடொன்றுதோற்றுதே
பந்தமாயிதிலிருந்த பரிங்குயில்முளிக்குதே
எந்தன்கையம்பாலத்தை பெய்யுரோன்பாரடையே

வ-ம். இதிராங் காணக்கடர்பாங் எடாங் எனகத்துடும்பாங்இதிராங்இந்த ரிஷியிருக்கிற ஆலமரத்திலே கூடுகட்டிக்கொண்டு ஏதோ ஒரு பெட்டைக்கருங்குயில் முளிக்குதுராங(ஆமடங்)இதிராங் இதைப்பிஞ்சுபோடுறேன் பாரடாங் (இதிராங் பிஞ்சுராங்பாரபோமடங்)

உ-வது-வேடன்சொல்-விருத்தம்,

அடிக்கவேகுயிலலேந்து அருமுனிகையில்வீழ்ந்து
துடிக்குதுபாரடைய தூயமாமுனிவர்கண்டால்
சடுக்கெனநம்மையெல்லாஞ் சபித்திடப்போரானாலே
மிடிக்குடனோடிக்கானில் மேன்மையாய்ப்பிழைப்போம்வாரீர்

வ-ம். இதிராங் காகைக்கடம்பாங் எண்டா எனகத்துடுப்பாங் இதிராங் இந்தக்குயிலே அடிக்கவே அடிபட்டு அடிதுடித்து இந்தஐயர்கையில்விழுந்துபதைக்குதுராங் ஆமடாங்ஐயர்கண்ணைத்திறந்துபார்த்தால்நம்மைச்சபித்துப்போடுவார் ஓடிப்போவோம் வாங்கடாங்

மிருகண்டர்சீஷருக்குச்சொல்பாணி,

மனதொன்றுக்குமனேன்மணியே
வளருமெய்ஞ்ஞானச்சிரோன்மணியே
எனதுகையிற்றுடிப்பதென்ன
இதையானறியச்செயவீரோ

சீஷர்-மிருகண்டருக்குச்சொல்-பாணி

ஐயா அரகரா யிவ்வாலமரத்திருந்தகுயில்
மெய்யாய்வில்லிய[illegible]வடித்தார்விழுந்துகையிறுற்டிக்குதையா

மிருகண்டர்சீஷருக்குச்சொல்-பாணி,

அடடா அரகரா அவ்வில்லியர்கள் அடங்கலுமிங்கிருக்கின்றுரோ
கொடடாதாடயிலவர்களைத்தான்கொலையேன்செய்தாய் கேட்ட

சீஷர்-மிருகண்டருக்குச்சொல்-பாணி, [றிவீரோ

குயிலேயடித்தவில்லியரிங்கொருவரில்லையிக்கானில்
பயில்போட்டோடியேயொளித்தார் பார்த்தேமெங்குயில்லையை

மிருகண்டர்-சீஷருக்குச்சொல்-பாணி, [யா

புத்திகெட்டவில்லியர்கள்போனார்போகட்டுநீங்கள்
இத்தையெடுத்துநீர்பூசியெழுப்பிக்கூண்டில்விடுவீரோ

சீஷர்கள்சொல்-பாணி,

உபாயமாகமிருகண்டாருரைத்தபடியேகுயில்மீதில் [மே
விபூதிதன்னைப்போட்டெழுப்பிவிடுவோங் கூண்டில்விடுவோ

சீஷர்கள் குயிலுக்கு உயிர்கொடுக்கிற மந்திரம் வசனம்

மொண மொண மொண மொண கிண கிண கிண கிண டிங் டிங் டிங் டிங் பே பே பே பே வா வா உயிர்வா கூ கூ குயிலே கூவு

சீஷர்கள்சொல்-பாணி,

அடாதம்பிரம்மையாலும் ஐயர்கொடுத்தவிபூதிதனைத்
தொடவேகுயிலெழுந்துடனே சுகமாயோடிமுழிக்குதடா

சீஷர்களே-மிருகண்டருக்குச்சொல்பாணி

வேதர்வெண்ணீர்தான்கொடுத்த மெய்யாய்குயில்மேல்தீரன்போட்
போதேயெழுந்துதன் கூண்டிற் புகுந்துவிளையாடுதையா [ட

மிருகண்டர்-சீஷருக்குச்சொல்-பாணி,

விளையாடினதேபாக்கியந்தான் மெய்யரினசொல்சீஷர்களே
சளசளென்றதேயிருங்கள் தபத்தைச்செய்யும்வேளையிதே

சீஷர்மிருகண்டருக்குச்சொல்-பாணி

புத்திபுத்தியையாநீர் புகன்றபடியேமுன்பின்னம்
பத்தியாகவேயிருப்போம் பண்ணுந்தபத்தைச்செய்வீரே

மிருகண்டரும்-ஞானச்சதிராளும்சொல்-தோத்திரம்,

மிருகண்டர்-சொல்லல்,

சோதியேசொரூபமே ஆர்தியேயுனைநம்பினேம்
நீதியாயிந்நேரமிவ்வந்து நின்றுவரமருளீஸ்வரா

ஞானச்சதிராள்-சொல்லல்,

சூதில்லாமலேசுதனுக்காகவே மாதவங்களைச்செய்கிறோம்
மாதுவேபரமேஸ்வரியிங்கு வந்துவரமருளீஸ்வரி

மிருகண்டர்-சொல்லல்,

பாம்பணிந்தகங்காதராசிவ சாம்புவேயுனைநம்பினேம்
தேம்புதேநெஞ்சந்தேம்புதேதுயர்தீரவரமருளீஸ்வரா

ஞானச்சதிராள்-சொல்லல்,

சாம்பலாண்டிதன்சடையிலிருந்திருஞ் சங்கரிமனமிரங்கியே
காப்பரிசுதன்கண்ணிறைக்காண வந்துவரமருளீஸ்வரி

பொது-விருத்தம்,

புத்திரசோபத்தினாலே புண்ணியமிருகண்டையர்
இத்திசைவனத்தில்வந்து யெழிலுடன்தபத்தைச்செய்ய
அத்திமாமுகனைப்பெற்ற ஐயரும்விடைமீதேறிப்
பத்தியாய்வரமளிக்கப் பாங்குடன்வருகின்றாரே

கட்டயக்காரன்சொல்-வசனம்

அகோதெப்படியென்றால் புத்திரசோபத்தினாலே மிருகண்டரும் ஞானச்சதிராளும் வனத்தில்வந்துஈசனைநோக்கித் தபஞ்செய்யும்போது மிருகண்டருக்குப் புத்திரவரமளிக்கப் பரமசிவனவர்பார்வதிசமேதராய் ரிஷபவாகனரூடராய் வருகிறவிதங்காண்க

ஈஸ்வரர்வருகிறதரு-இ-ம்-சௌராஷ்டிரம்-அடதாளம்,

பல்லவி

சங்கரர் வந்தார் - விடைமீதேறிச்
சங்கரர் வந்தார்

அநுபல்லவி,

பொங்கும்கதிர்மதி புனைந்தசடையாளர்
பொறிகொள்வெம்புலித்தோற் பொருந்துமிடையாளர் (சங்)

சரணங்கள்

துதிக்குமான்மழுவுந் துலங்கிடுங்கையாளர்
துல்லியவிபூதித் துன்னிடுமெய்யாளர் (சங்)
நாதகிதவே தாந்தர்கள்போற்றிடும்
நாடுங்கலைகளேங் நாளுந்துதிசாற்றிடும் (சங்)
கானிற்றபஞ்செமிரு கண்டர்க்குப்புத்திரவரங்
களித்துத்தந்திடுதற்குக் கடினவேதத்தோடு (சங்)

மிருகண்டரும்-ஞானச்சதிராளும்-சுவாமிக்குச்சொல்,

போற்றி-விருத்தம்,

அத்தனேபோற்றிபோற்றி அருமறைப்பொருளேபோற்றி
முத்தனேபோற்றிமூவர் முதல்வனேபோற்றிபோற்றி
எத்திசையோரும்போற்று மெங்களாண்டவனேபோற்றி
கர்த்தனேசிலம்பணிந்த கமலத்தாள்போற்றிபோற்றி

ஈஸ்வரர்மிருகண்டருக்கும்-ஞானச்சதிராளுக்கும்சொல்,

வாழிவிருத்தம்,

அந்தணர்குலத்தில்வந்த அருமறைதன்னிற்சேர்ந்த
விந்தைசேர்மிருகண்டாநீ விழைவுடன்வனத்திற்றனும்
எந்தனைநோக்கிநீயு மெழிற்றபஞ்செய்தத்தாலே
புந்தியில்மிகமகிழ்ந்தோம் புகலுவீர்வாழிவாழி

வ-ம், வாழிவாழி மிருகண்டரோவாழிவாழி ஞானச்சதிரேநீங்கள் நம்மைத்துதித்து தபஞ்செய்யவந்தகாரியமென்ன சொல்லுமிருகண்டரே

மிருகண்டர்-சுவாமிக்குச்சொல்-உலா,

கானகத்தில்வந்துமிகக் காரணத்தாற்றவம்புரிந்தோம்
மானுமழுவேந்துகின்ற வள்ளலே ஆனதினுல்
பாராநீயிவ்வேளை பாலனளித்திடவேயெங்கள்
நேராகவொருமொழிசொல்-நின்று

வ-ம், அரகரா ஆதியே ஐயனேசோதியே சுடரே சாம்பவி சங்கரிலோ காட்சகி புத்திரவாஞ்சையினுலே கானகத்தில்வந்துதேவரீரைநோக்கித்தவம்புரிந்தோம் எங்கள்குறைதீர ஒருமொழியுரைக்கவேணும் இவ்விடம் நின்றுகர்த்தனே



சுவாமி-மிருகண்டருக்குச்சொல்-உலா,

தினறுங்கைமேநோக்கிநெடுநாளாய்ச்சுதன்வேண்டு
மென்றுதவஞ்செய்கின்றவிருடிகளே ஒன்றேகேள்
நீங்கள்முன்புசெய்திருந்த தீவ்ரோவினையிருகக
நாங்களென்னசெய்வோமுனிநாதனே

வ-ம், கேளுங்கள்இருடிகளே நீங்கள்செய்ததபமோ மகாஅருமையா ணதபந்தான் என்னதபஞ்செய்தும் நீங்கள்செய்தபாவவினை இன்னங்கொ ஞ்சமிருக்கின்றது ஆகையால்நாம்தா னென்ன செய்யலாம்இருடிகளே

மிருகண்டரும்-ஞானச்சதிராளும்-சுவாமியும் அம்மனுஞ்சொல்

கண்ணிகள்-இ-ம்-பூபாளம்-ஆதிதாளம்

மிருகண்டர்-சொல்லல்,

சோதியென்னசொல்வனென்றுனெங்கட்கினி
துணைவேறுண்டோயென்சுவாமி

சுவாமி-சொல்லல்,

துணைவேறுண்டோவென்றுஞ்-சோதிசொரூபமென்றுந்
தொழுதாற்றீருமோ முனியே

ஞானச்சதிராள்-சொல்லல்,

எதுபாலஞ்செய்திருந்தா லுமனம்வைத்து
ஈடேறப்பாருந்தேவி

ஈஸ்வரிசொல்லல்,

ஈடேறப்பாருமென்று மிருவர்வந்தாக்காணி
லேன்றுதிக்கீர்மாதே

மிருகண்டர்-சொல்லல்,

நிதியர்யுனைநம்பினேனெமக்கட்கொரு
நிலைசொல்லவேணுஞ்சுவாமி

சுவாமிசொல்லல்

நிலைசொல்லவேணுமென்று நிஷ்டேமாகநம்மை
நினைந்ததைச்சொல்முனியே

ஞானச்சதிராள்-சொல்லல்,

மாதப்ஞ்செய்தேமைந்தனுக்காகயிப்போ
வரந்தரவேணுந்தேவி

ஈஸ்வரி-சொல்லல்,

வரந்தாவேணுமென்றுவமுத்தியேகைகூப்பி
வணங்குவதேனோமாதே

மிருகண்டர்சொல்லல்

அன்னபூரணியம்மையைப்பாகம்வைத்த
ஐயாரட்சியுஞ்சுவாமி

சுவாமி-சொல்லல்

ஐயாரட்யுமென்று அனுதினம்துதித்தாலும்
ஆவதுண்டோசொல்முனியே

ஞானச்சதிராள்-சொல்லல்,

என்னபிழைகள்செய்திருந்தாலும்மனம்வைத்து
ஈடேறப்பாருந்தேவி

ஈஸ்வரி-சொல்லல்,

ஈடேறப்பாருமென்றுவேணேயிக்கானகத்தி
லிருக்கிறீர்போம்போம்மாதே

மிருகண்டர்-சொல்லல்.

முன்னந்தெய்வமுண்டென்று யெண்ணிவந்தோம்
முத்தியருளுஞ்சுவாமி

சுவாமி-சொல்லல்

முத்தியருளுமென்றமுனியேநம்மைத்தொழுதால்
முயற்சியாவதோசொல்முனியே

ஞானச்சதிராள்-சொல்லல்,

உன்னைவிடதெய்வமுண்டோசந்தானந்தர
உத்தரவுதாருந்தேவி



சுவாமி மிருகண்டருக்குச்சொல்-உலா

உத்தரவுதாருமென் வுறுதியாய்ப்மைவேண்டி
பத்துவிதத்திலும் துதித்தபடியினால் இத்தினமே
மதியிலாச்சுதனூறுவயதினிற்தரவோபிள்ளை
பதினறிற்சொல்தரவோபணிந்து

வ-ம், கேளுங்கள்தபசிகளே நீங்கள் நம்மைத்துதிக்கின்ற படியினலே நூறுவயதிலே மதியில்லாப்பிள்ளைவேணுமோஅல்லதுபதினறுவயதிலே மதியுள்ளதாய் கியானமிகுதியான பிள்ளைவேணுமோ சொல்லுங்கள்உங்கள் மதியைப்பார்ப்போம்

மிருகண்டர்-சுவாமிக்குச்சொல்-உலா,

மதியில்லாச்சுதநூறு வயதினிற்றந்தாவதென்ன
நதிபுனைந்தசங்கரனே நல்லகல்வி விதியுடைய
பிள்ளைபதினறுகிற் பிரபலமுற்றேயிருக்க
உள்ளபடிசுதன்றருமென்றேசொல்

வ-ம், அரகாநிரஞ்சனமானசோதியே அடியார்களுக்குநூறுவயதில் மதியில்லாபிள்ளையை கொடுத்தாலதென்ன நல்லகல்வியும் மதியும் உ

டையதாய்ப் பதினாறுவயது பிள்ளையாகத்தானேகொடுத்து ரட்சிக்கவேண்டுஞ்சுவாமி

சுவாமி-மிருகண்டருக்குச்-சொல் உலா

ஒன்றேசொலொன்றுசொன்ன வொருமையுள்ளிருடிகளே
இன்றேசந்தானமதையான்கொடுத்தேன்-சென்றவுங்கள்
ஆசிரமத்திற்புகுந்து அன்புடனேவாழ்ந்திருங்கள்
நேசமுடன்போய்வாரும்நிசமே

வசனம்,

கேளுங்கள்இருடிகளே அப்படியேஉங்கள்மனதின்படிக்குப்பதினாறுவயதுபிள்ளையே கொடுத்தேன் நீங்கள்ஆசிரமம் போய்ப்பிள்ளையைப் பெற்றுவாழ்ந்திருங்கள்போய்வாருங்கள் இருடிகளே.

மிருகண்டரும் ஞானச்சதிராளும் சொல் வசனம்,

சரணஞ்சரணம்அப்படியேபோய்வருகிறேஞ்சுவாமி

பொதுவிருத்தம்

பரமனார்மெய்மகிழ்ந்து பதினாறுவயதுபெற்ற
ஒருகுழந்தையின்வரத்தை யுவந்துடன்கொடுத்தனுப்ப
விரைவுடனவருஞ்சென்றார் விசனுங்கயிலைச்சேர்ந்து
அருமைசேர்ந்திருக்குங்குண்டோ தரனுக்குமறிக்கைசெய்வார்

கட்டியக்காரன்சொல்வசனம்

அகோதெப்படியென்றால் பரமசிவமூர்த்தி யானவர் திருக்கடவூர் மிருகண்டருக்குப் புத்திரபாக்கியமளித்துகயிலாயம் வந்தபிறகு அவிடத்தில் நடக்கிறவிதங்காண்க

சுவாமி குண்டோதரனுக்குச் சொல் கவி

எத்திசைமுனிவர்க்கெல்லா மெழிலுடன்வயதைப்பெற்ற
பத்தியாய்நமையெந்நாளும் பணிகுண்டோதரனேவாராய்

கட்டியக்காரன் சொல் வசனம்

அகோதெப்படியென்றால் பரமசிவனானவர் குண்டோதரனை அழைக்கக்குண்டோதரன் வருகிற விதங்காண்க

குண்டோதரன்வருகிற-தரு-இ-ம்-மோகனம்-அடதாள

பல்லவி,

வந்தான்வந்தானே-குண்டோதரன்-வந்தான்வந்தானே

அநுபல்லவி,

வந்தான்கியானமிகுத்து அந்திவண்ணனைத்துதித்து
பந்தமாய்மனம்பூரித்து விந்தையாய்மண்ணிற்குதித்து (வந்தா)

சரணங்கள்,

தேவதேவருங்கொழிக்க பூவுலகத்தோர்தழைக்க
பாவலர்களுஞ்செழிக்க ஆவலாய்சிவனழைக்க (வந்தா)
கண்டவர்கலங்கிடவே மண்டலங்குலுங்கிடவே

துண்டர்கள்விளங்கிடவே தெண்டினூர்துலங்கிடவே (வந்தா)
வேதியர்களும்புகழ சாதியர்களுந்திகழ
நீதியோர்களும்நிகழ ஆதிசிவனூர்பகிழ (வந்தா)

குண்டோதரன் சுவாமிக்குச் சொல் பாணி,

மானுமழுவுங்கைக்கொண்டு
வானும்புகழம்சகத்துடனே
தானுமிருக்கும்வேளைதனின்
எனையழைத்தீரென்சுவாமி

சுவாமி குண்டோதரனுக்குச் சொல் விருத்தம்

பத்தியாயென்றுநம்மைப் பணிகுண்டோதரனேகேளாய்
ருத்திர பதவினுக்கு நொடியினில்நடந்துமெத்த
வுத்தமன்சோழராஜ னுறுதியாய்ப்பெற்றெடுத்த
வித்தையோன்வேந்தன்வீதி விடங்கனையழைத்துவாராய்

வசனம்,

கேளாய்குண்டோதரா ருத்திரபதவியிலிருக்கும்வீதிவிடங்கனை நானழைத்தேனென்று சீக்கிரமாக நீபோய் அழைத்துவாரும் பிள்ளாய்

குண்டோதரன் சுவாமிக்குச் சொல் விருத்தம்,

எண்ணுமெந்தனையாட்சிக்கு மீசனே கயிலைவாசா
புண்ணியசோழராஜன் புவிதனில்விளங்கப்பெற்ற
மண்ணுலகாளும்வீதி விடங்கனையழைத்துக்கொண்டு
கண்ணிமைக்குள்நடந்து கடிதினில்வருகுவேனே

வசனம்,

சுவாமி சுவாமி கைலாசபதியே தேவரீர் உத்தாரப்படிக்கு ருத்திர பதவிக்குப்போய் வீதிவிடங்கனையழைத்து வருகிறேன்சுவாமி

குண்டோதரன் வீதிவிடங்கனுக்குச் சொல் பாணி

எண்ணுஞ்சிரஞ்சீவிகள்பெற்றே யிருக்கும்வீதிவிடங்கையனே
அண்ணலழைத்தார்நீயோடி யருகில்வருவாயிப்போதே

வீதிவிடங்கன் குண்டோதரனுக்குச் சொல் விருத்தம்

ராசனுரிடத்தில்வாழு மெழில்குண்டோதரனேகேளீர்
பேசிடாதோடிவந்து பேசிடியிடித்தாப்போலே
ஓசையாயென்னையழைத்தீருயர்கதிதபவல்லோனே
நேசமாயுளாயுமையா நீர்சொல்லும்படிசெய்வேனே

வசனம்,

சரணஞ்சரணங் குண்டோதரமூர்த்தியேதேவரீர் இவ்வளவுதூரம் வந்துஎன்னைத்தேடி அழைத்தகாரியம் என்னசொல்லுஞ்சுவாமி

குண்டோதரன்வீதிவிடங்கனுக்குச் சொல் விருத்தம்

பத்தியாய்வந்துகேட்கும் பாரினையாண்டிருந்த
உத்தமசோழராஜ னுளமகிழ்ந்திடுவதாக

பெறறிடுமபாலனேகேள் பிஞ்சகனுனையழைத்து
இட்சணமவரவேசொன்னு ரீசர்பால்வருகுவாயே

வசனம்.

வாராய்வீதிவிடங்கனே கயிலாயபதியுன்னை அழைத்துவரச் சொன்னார்வாருமப்பா,

வீதிவிடங்கன்-குண்டோதரனுக்குச்சொல்-விருத்தம்.

எனையொருபொருளாயெண்ணி ஈசனாரழைத்ததென்ன
மனமதையறியவேணு மான்மழுவோனிடத்தில்
தினமிருந்தடிவணங்கிச் சிறப்புறுபவரோகேளீர்
கனிதமாய்வருவேன்வாரீர் கந்தன்கண் காண கத்தாவே

வசனம்.

கேளுங் குண்டோதரமூர்த்தியே அந்தக்கைலாசபதி அழைத்ததே பாக்கியம் வருகிறேன்வாருங் குண்டோதரமூர்த்தியே.

வீதிவிடங்கன்வருகிற-ஓரடி-தரு-இ-ம்- ஆனந்தபைரவி- ஆதிதாளம்.

பல்லவி.

வீதிவிடங்கன்வந்தான் - ருத்திரபதவிவிட்டு
வீதிவிடங்கன்வந்தான்

அநுபல்லவி.

ஆதிபராபரனையனுதினமனதினில்
அன்புடன்றுதிக்குமன்னன்தென்புடைக்குமன்னன் (வீதி)

சரணங்கள்.

சிரசினில்மகுடந்துலங்க - யிருபுசத்
தினில்கிருதியு மிலங்க
வரிசையுடனேமணிமாலைகள்மின்னிட
வானவர்மகிழ்ந்திட தானதருமஞ்செய்வோன்
வாகைபெற்றிடு ஞானகுணாகரன்
வாசமுற்றிடு தீனதயாபரன்
வசையிலாதபுகழ் பெற்றவரோதயன்
நிசமதானசொ ற்றசுரோதயன் (வீதி)

குண்டோதரன்-சுவாமிக்குச்சொல்- விருத்தம்.

கர்த்தனேகயிலைவாசா கங்கையைத்தரித்தனேசா
ருத்திரபதவிதன்னில் விநோதமாய்வாழ்ந்திருந்த
தத்துவமானபிள்ளை சபைவீதிவிடங்கனைத்தான்
பத்தியாயழைத்துவந்தேன் பரமனேபோற்றிபோற்றி

வசனம்.

சரணஞ் சரணம் கயிலாசபதியே அடியேன்போய் ருத்திரபதவியிலிருந்த வீதிவிடங்கனை அழைத்துவந்தேன்சுவாமி.

வீதிவிடங்கன்- சுவாமியைத்துதிசெய்கிற-தரு-
இ-ம்-நாதநாமக்கிரியை- அடதாளம்.

பல்லவி.

ஈசனேசரணம் - கைலாச - வாசனேசரணம்

அநுபல்லவி.

மாசிலாமழுமான் றரித்தகையனே
ஆசையாய்த்தரிசனங் காணவந்தேனையனே (ஈசனே)

சரணங்கள்.

செங்கையைச்சிரசினிற் கீர்த்தியாகவைத்த
சங்கராவுன்றனைச் சரணமெனவடைந்தேன் (ஈசனே)
அரவாபரணமணிந் தாதியானவிநோதா
பரமதேவனேயுந்தன் பாதங்காணவந்தேன் (ஈசனே)
வெள்ளைமேனியனே விடைமீதில்வீற்றிருக்கும்
வள்ளலேயுன்றிருவடியைக் காணவந்தேன் (ஈசனே)

வீதிவிடங்கன்-சுவாமிக்குச்சொல்- விருத்தம்.

கைதனிற்பாசமேந்தி காளிதன்னுடனேநின்று
வையகமதிக்கவாடி வந்ததோர்சிவனேபோற்றி
துய்யவேபதவிதன்னிற் றுலங்கவேயிருந்தயென்னை
ஐயனேயழைத்ததென்ன வருளுவீரெனக்குத்தானே

வசனம்.

சரணஞ்சரணம் கைலாசபதியே ருத்திரபதவியிலிருந்த யென்னை யழைத்தகாரியம் அருளிச்செய்யவேணுஞ்சுவாமி.

சுவாமி-வீதிவிடங்கனுக்குச்சொல்-விருத்தம்.

அறிக்கைசெய்வீரொன்றெந்த னடியினைத்தொழுதபாலர்
திருக்கடவூரில்வாழுஞ் ஜெயமிருகண்டருக்கு
உருக்கமாய்வரமளித்தே னுண்மையாய்த்தருகவேணும்
பெருக்கமாய்நீயவர்க்குப் பிள்ளையாயுதித்திடாயே

வசனம்.

வாராயப்பா வீதிவிடங்கா நீருத்திரபதவியில் என்றுஞ் சிரஞ்சீவியாய்வயதுபெற்றவனானபடியினாலே அப்பவும் நீ இந்தவயதே பெற்றிருக்கப் பூரணமான வரமளித்தேன் நீமிருகண்ட தேவியாளுடைய வயிற்றிற்ஜெனமிக்கத் திருக்கடவூருக்குப் போவாயப்பா.

வீதிவிடங்கன்-சுவாமிக்குச்சொல்-விருத்தம்

தேவர்சொற்படியேயந்தச் செயமிருகண்டனார்தன்
றேவிதன்றிருவயிற்றிற் ஜெனமிக்கபுத்திபுத்தி
தேவர்கள்துதிக்குநாதா சிவசிவாகயிலைவாசா
தேவரீரென்னைக்காக்கத் திருவடிபோற்றிபோற்றி

வசனம்.

சுவாமி கைலாசபதியியே அடியேன் ருத்திரபதவியில் என்றுஞ் சிரஞ்சீவியாய் வயதுபெற்றிருந்த என்னை பூமியிற்போய்த் தபசிகளுடைய வயற்றிற்பிள்ளையாய் பிறக்கச்சொன்னீர் அப்படியேஜெனமிக்கிறேன் அவ்விடத்திலும் இந்தவயதோடும் வாழ்ந்திருக்க வுமதுதிருவாக்கனுக்கிரகஞ்செய்தனுப்பவேண்டுஞ்சுவாமி.

சுவாமி-வீதிவிடங்கனுக்குச்சொல்-விருத்தம்.

வயதுபெற்றிருந்தவீதி விடங்கனேகேளாயென்றும்
வயதுண்டாகவும்நீவாழ்க வரமதுமிகவளித்தேன்
வயதினில்மிருந்தவந்த மாமிருகண்டன்றேவி
வயிற்றினிற்றறிப்பதற்கு மைந்தனேநடந்திடாயே

வசனம்,

வாராய்வீதிவிடங்கா இப்பவும் நீருத்திரபதவியில் என்றும் சிரஞ்சீவியாய் வயதுபெற்றவனைபடியினாலே இப்போது நீ இந்தவயதுபெற்றிருக்கப் பூரணமான வரமளித்தேன் நீமிருகண்டருடைய தேவியாள் வயற்றிற் சென்மிக்கத் திருக்கடவூருக்கு நடந்திடுவாயப்பா.

வீதிவிடங்கன்-சுவாமிக்குச்சொல் - வசனம்.

அப்படியே நடக்கிறேன் உமது பாதாரவிந்தமேதுணை சரணஞ் சரணம் சுவாமி.

கட்டியக்காரன்சொல்- வசனம்.

அகோதெப்படியென்றால் இப்படிக்குக் கயிலாசபதியின் அனுக்கிரகம் பெற்று ருத்திரபதவியிலிருந்த வீதிவிடங்கன் திருக்கடையூர்வாழ்கின்ற மிருகண்டர்தேவியானஞானச்சதிராளுடைய வயற்றிற்பிள்ளையாய்வந்து ஜென்மிக்க அதன்பின்பு வனத்தில் நடக்கிறவிதங்காண்க.

மிருகண்டர்-ஞானச்சதிராளுக்குச்சொல்- விருத்தம்.

நங்கையேசதியேகேளாய் நாம்செய்ததபோபலத்தால்
பொங்கமாயீசர்வந்து புதல்வனையளித்தார்பெண்ணே
அங்கமுங்குளிர்ந்தோமிந்த அடர்வனந்தன்னைவிட்டு
சிங்காரவாசிரமம்போய்ச் சேருவோம்வாராய்கண்ணே

வசனம்.

வாராய்பெண்ணே ஞானசதிரே நாம்மனதொன்றாகச் செய்ததபோபலத்தினாலே உடனே ஈசர்வந்து புத்திரபாக்கிய மளித்தார் ஆகையால் முத்திமோக்ஷம்பெற்றோம் இனிநாம்நமது ஆசிரமம்போய்ச்சேருவோம்பெண்ணே.

முதல்சிஷன்-மற்றசிஷருக்குச்சொல்- விருத்தம்.

கேட்டுதாதம்பியையர் கிளிமொழியம்மையாளை
நாட்டமாயழைத்தாரிப்போ நமையெலாமழைக்கவில்லை
வீட்டுக்குவாடாவென்று வேண்டிடுப்பிரகெல்லோரும்
நீட்டுபோட்டாகப்போவோ நிலத்தினிற்படுத்திடீரே

வசனம்.

கேட்டுதடாதம்பி ஐயர்சொன்னசொல் எதடாயிந்தக்காலம் அல்லவோநமக்குத்தான் ஒருவரங்கேட்டாராகேழ்க்காதவரா கிலும்நம்மைத்தான் வீட்டுக்குவாருங்களென்று அழைத்தாரா அதையும்விட்டுவிட்டு அம்

மாளே அழைத்தாரோ அதுசரியாஇப்பவும்நம்மையெல்லாம் வீட்டுக்குவா ருங்களென்றுவேண்டிவேண்டி அழைக்குமட்டும் நாமபிகுவாயிருந்தால் நமக்குவரம்அகப்படும் அதுவரைக்கும் ஒருவருடனேயொருவர்பேசாம ல்பூமியிலே கவிழ்ந்து படுத்துக்கொள்ளுங்களப்பா தம்பிமார்மகளே

மிருகண்டர்-சீஷர்களுக்குச்சொல்விருத்தம்,

இணிமநோன்மணியேஞானச் சிரோன்மணியானசீஷா
மணிகெண்டாமணியேமெத்த மவுநசிந்தாமணியேகேளாய்
பணிவிடைசெய்யும்நீங்கள் பாவையும்நாமுமாக
அணியணியாய்நடந்து ஆசிர்மம்போவோம்வாரீர்

வசனம்,

அடாஅடா சீஷர்களே நாம்ஆசிர்மம்போய்ச் சேருவதாக அழைத் தால் ஒருவருப்பேசாம லிருப்பதென்ன் இடக்கானவார்த்தை கொடுப்ப தென்ன அடாவுங்களுக்கு யேதோகொஞ்சம் குறைவுவந்திருக்கிறதைப் போலத் தோற்றப்படுகின்றது அந்தக்குறையைச் சொன்னீர்களானால்உங் கள் மனக்குறையைத்தீர்த்து அழைத்துப்போகிறேன்சொல்லுங்களப்பா சீஷர்களே

சீஷர்கள்மிருகண்டருக்குச்சொல் விருத்தம்

தேவரீர்தவத்தைசெய்தீர் சிவன்வந்துவரமளித்தார்
ஆவலாய்காத்திருந்தும்அடியார்கள்வீணதானோம்
சேவகபசகளுக்குத் தேவைதானென்றுமில்லை
தீவிரமாகயிந்தச் சிறுபுட்டைபெருகவேணும்

வசனம்

சுவாமிசுவாமி எங்களுக்குக்குறையொன்றிருக்கின்றது அதென்ன வென்றால்உமக்குமாத்திரம் ஈசர்வந்துவரமளித்தார் நாங்களிதுவரைக்கு க்காத்திருந்தும் வீணாய்ப்போனோம் இப்பவும் எங்களுக்கு வேண்டியது ஒன்றுமில்லை இந்தபுட்டைபெருகும்படியாய் வரங்கொடுக்கவேண்டும் சுவாமி

மிருகண்டர் சீஷர்களுக்குச் சொல்விருத்தம்

பூமியிலில்லாவார்த்தைப் புதுமையாய்சொல்லவந்தீர்
ஆமடாசீஷரோநீ ராசையாய்கேட்டபோதே
பாமுடைந்திட்டாற்போலப் பருத்திடவேணும்புட்டை
நாமிதோவரமளித்தோம் நடந்திடீர்மனைக்குப்போவோம்

வசனம்.

பளாபளா பூமியிலில்லாத வார்த்தையைச் சொல்லவந்தீர் சரியோக் குமா நல்லது உங்களுக்கேன் குறைவாயிருக்கவேண்டும் நீங்களே ஆசை

யாகப்புட்டைபெருக்க வரங்கேட்டபடியினாலே அப்படியே யின்னம் புட்டைபெருக்க வரமளித்தேன் நடந்துவாருங்களப்பா சீஷர்களே.

சீஷர்சொல்-தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

பல்லவி,

சற்றேபெருத்துதே-இது-மெத்தவருத்துதே

அநுபல்லவி,

இத்தையெப்படி யெடுப்போந்தம்பி
யேதடாவுன்னுது யிதடாயென்னுது (சற்றே)

சரணங்கள்,

போசம்வந்துதே-அப்போ
ஆசை தந்துதே
வீசிநடப்பதெப்படி - தம்பி
விட்டுப் போகுதே - புட்டையுநோகுதே (சற்றே)

ஆட்டிப்புடைக்குதே - கீழே
நாட்டித்துளைக்குதே
ஒட்டிநடப்ப தெப்படிதம்பி
ஒடுக்கிப்போடுதே கெடுக்கத்தேடுதே (சற்றே)

காலும் ஙையுதே மெத்தக்
கோலஞ்செய்யுதே
ஞாலமுனிவர் செய்ததுநாதம்பி
ஞாயமோவது வுபாயமோயிது (சற்றே)

சீஷர் மிருகண்டருக்குச் சொல் விருத்தம்

கொப்பெனவரமளித்த கோலமாமுனிவர்கோவே
அப்பனேயிதையெடுக்க ஆருமோயெங்களாலே
தப்பிதம்வந்ததற்குத் தாடையிற்போட்டுக்கொண்டோம்
இப்பவும்வலிசிறுக்க யினியதாய்த்தயவுசெய்வீர்

வசனம்.

சுவாமி சுவாமி நாங்களறியாமல் மாட்டிக்கொண்டோம்புத்திவந்தது தாடையிற்போட்டுக்கொண்டோம் இதையெடுக்கஎங்களால் ஆகாதுபோதும் எப்போதும்போல இந்தவலிசிறுக்க வரங்கொடுத்து ரட்சிக்கவேணும் சுவாமி

மிருகண்டர் சீஷர்களுக்குச் சொல் பாணி

வருத்தந்தெரிந்துதாயிப்ப மதியுந்தெளிந்ததாநாலும்
உருக்கமாகவரமளித்தேன் ஓடிநடந்துவருவீரோ

சீஷர்கள் சொல் வசனம்.

மகாசந்தோஷம்மகாசந்தோஷஅப்படியே யிதோவருகிறேன் சுவாமி

மிருகண்டர்-சொல்-தரு-இ-ம்-புன்னாகவராளி-மிசுரதாளம்.

பல்லவி,

நடந்துவா மயிலே - பதிசேரவேணும்
துடர்ந்துவா குயிலே

அநுபல்லவி,

நடந்துவாயிந்த அடர்ந்தவனம்விட்டு
வுடந்தையானபெண் மடந்தையேயினி (நடந்து)

சரணங்கள்

எண்ணினப்படி யிண்ணுவனத்தினில்
அண்ணலொருவரங் கண்ணாந்தனர் (நடந்து)

நந்திவாகன ரிந்தவேளையில்
வந்துநமக்கொரு மைந்தனளித்தனர் (நடந்து)

கள்ளமில்லாம லுள்ளபடியிங்கு
வள்ளல்நமக்கொரு பிள்ளையளித்தனர் (நடந்து)

மிருகண்டர் சீஷர்களுக்குச் சொல் விருத்தம்,

அரிதானபாலரோநா மருந்தவஞ்செய்யயீசன்
பெரிதானவரமளிக்கப் பேதையுநானுமாக
விரிவானவாசிர்மத்தின் விடுதிக்குவந்தோமப்பா
பரிவானவாசனத்தைப் பவனிக்கப்போடுவீரோ

வசனம்.

ஆரடாசீஷரோ நாம்கானகத்தில் தபஞ்செய்யஈசர்வந்துவரமளிக்கவரம் பெற்றுக்கொண்டு பெண்ணுளாகிய ஞானச்சதிராளும் நீங்களும்நானுமாக ஆசிரமம்வந்துசேர்ந்தோம் சற்றுநேரம்பவனிக்கவேணும் ஆகையால் ஆசனத்தைப்போடும்பிள்ளாய்

சீஷர் மிருகண்டருக்குச் சொல் கவி

சுத்தனேதேவர் நித்திரைசெய்ய
பத்தியாயாசனம் பவனிக்கப்போட்டோம்

மிருகண்டர்ஞானச்சதிராளுக்குச் சொல்கவி

கவனமாய்க்கானில் சிவனருள்பெற்ற
தவகிலேபெண்ணே பவனிக்கவாராய்

ஞானசதிராள்மிருகண்டருக்குச்சொல் விருத்தம்

என்னிடபிராணநாதா யீசனார்தன்னை நோக்கி
முன்னம்நாம்தபத்தைச்செய்து மூர்த்தியைக்கண்டுபுத்ரன்

தன்னனும்வாங்கிவந்த தயவதினாலேகர்த்தன்
சொன்னசொற்படிமுடித்தார் சோதியைத்தொழு திடீரே

வசனம்.

கேளும் யென்பிராணனாதரே அடியாளை பவளிக்கச்சொன்னீர் மெய்யே நாம்தபசுசெய்துவந்த தபோபலத்தினாலேயும் சாம்பசிவமூர்த்தியின் அநுக்கிரகத்தினாலேயும் சிருவனைப்பெருவதான வேளைபோலக்காண்கிறது அதுஎப்படியென்றால்: நான்வழியில்வரும்போதுதானே அடிவயறு கனத்துவந்தது இரோகம்பாரித்திருந்தது இப்போதுயிரண்டுபக்கமும் விட்டுப்போகுது இரோகம் ஒருவகையாயிருக்கவில்லை நான்சிருவனைப்பெருகிறவரைக்கும் தேவரீர்சிவத்தியானத்தி லிருக்கவேணுஞ் சுவாமி

மிருகண்டர்-ஞானச்சதிராளுக்குச்சொல்-க்வி.

அப்படியேயுன் சொற்படியேசிவன்
பொர்பதங்காணவே கற்பனைசெய்வேன்

ஞானச்சதிரான்-கெர்பவேதனையால்சொல்சிசபத்தியம்-இ-ம்-கண்டா

ஆதிமூலப்பொருளே மெச்சுடரேயென்
ஞலேயினியாகுமோ யின்னுளில்வருவாய்
காதைவந்திப்படிக கப்பென்றடைக்குதே
கயிலாசவாசனே கருணைபுரிவாய்
மெய்தன்னிலெங்கினும் வீணைபோல்மீட்டுதே
மெய்யனேயொருவரமெள்தருவாய்
வாதையிப்படி பட வைத்தாயோகர்த்தனே
வள்ளலேயென்னிட மனதையரிவாய்
வந்துநீயெந்தனையிந்தவேளை
தொந்தமாய்காத்திடும் நந்திவண்ணு
நொந்துநொந்தழுகிறேன் சிந்தைதயைத்திர்
கந்தனைப்பெற்றிடும் அந்திவண்ணு

இதுவும்-ஞானச்சதிராள்சொல்-சிசபத்தியம்-இ-ம்-கண்டா,

நந்திவண்ணுவுன்னை நம்பினேனம்பினேன்
நாகபூஷணசிவ நாத நாதா
இந்தவேளையினிலே யெனக்காருமீசனே
இவ்வேதைபடுவனோ யீச யீசா
உந்தனருளாச்சுதே வுள்ளவேவதைக்குதே
வுண் டில்லையென்னுதே வுமையேவுமையே

சிந்தைப்பியமானேனே செல்வனைக்காணேனே
திரிபுரமெரித்திடுந் தேவதேவா
சித்தம்வைத்தெந்தனை யித்தினமுமே
கர்த்தனேகாத்திட ரத்திமுகனைப்
பெற்றிடும்வஸ்துவே பத்தியுள்ள
புத்திரனைப்பெற்றிட சித்தம்வைப்பாய்

ஞானச்சதிராள்-கெற்பவாதனையால்சொல்- தரு-இ-ம்-ஆகிரி-அடதாளம்

பல்லவி,

சர்த்தனேயிதவாய்-செல்வனைநான்-பெற்றிடவுதவாய்

அநுபல்லவி

அத்திமாமுகனைப்பெற்றவுத்தம மயேசனே
இத்தனைவேதையில்வைத்தாயோ யீசனே (கர்த்தனே)

சரணங்கள்

எந்தனுள்வயிற்றினிற் பந்தாசுருட்டுது
இந்தபக்கமிரண்டும் நொந்துநொந்துருட்டுது (கர்த்தனே)

இத்தனைவேதையில் வைத்தாயோஈசனே
குத்துதென்குலைமாரயில் சத்திமயேசனே (கர்த்தனே)

எப்படியெப்படி அப்பணிசடையோனே
இப்படிபடுவது ஒப்புமோகடவூரானே (கர்த்தனே)

பிஞ்சாகபெண்ணிட சஞ்சலந்தீர்த்திடும்
செஞ்சடையீசனே பஞ்சையைக்காத்திடும் (கர்த்தனே)

ஞானச்சதிராள்சொல்-கொச்சகம்

ஆதிபராபராஞ்சுடரோ யாதரிக்குமுமையவளே
நீதியுடன்சுதனளித்து நிஸ்டூரமாகயிப்போ
வாதைதக்கிடம்வைத்ததென்ன வயருளப்புக்கென்னசெய்வேன்
சாதுகநெஞ்சத்தைவிட்டுக் காத்தருளுமெய்ப்பொருளே

வசனம்.

ஹரகரா ஹரகரா ஆதிபராஞ்சுடரோ ஆதரிக்குமனோன்மணியே அடியார்களுக்குப் புத்திரபாக்யமளித்து இப்போகொத்த வேதனையைக் கொடுத்ததென்ன அடியா ளெவ்விதம் பொருப்பேன் என்னைக்காத் தருளும்ஈசா ஈசா

பொது-விருத்தம்

தந்தைநேர்மொழியாள்ஞானச் சதிராளுங்கெர்பமாகி
மெத்தவுஞ்சிவனைநோக்கி வீறிட்டுபுலம்பும்போது
உத்தமர்பாகம்வாழு முமையவள்காதிர்கேட்டு
காத்தனுக்கேற்றவார்த்தைக் கடிதினிலுணாக்கின்றுனே

கட்டியக்காரன் சொல் வசனம்

அதோதெப்படியென்றால் இப்படியாக ஞானச்சாள் கெர்ப்பவேதனை படுகின்றதைக்கேட்ட உமையவளானவள் மனந்தாளாமல் தன்னுடைய நாயகராகிய பரமசிவனுக்குச் சொல்லுகிறவிதங்காண்க.

ஈஸ்வரி- சுவாமிக்குச்சொல்-கொச்சகம்.

மாசிலாமாமணியே மாகயிலைவாழ்பரனே
ஆசையுடனேவனத்தி லருந்தவத்தைச்செய்தவற்குப்
பாசமுடன்வரமளித்தீர் பாவைஞானச்சதிராள்
ஈசாஈசாவெனவே யேங்கித்தவிக்கின்றாளே.

வசனம்.

சரணஞ்சரணஞ் சுவாமி தேவரீர் இப்போது வரமளித்திரோ திருக்கடவூர் மிருகண்ட மகாமுனியினுடைய தேவியான ஞானச்சதிராள் கெர்ப்பவேதனையினாலே மிகவும் ஈசாஈசாவென்று பரதவிக்கின்றாள் அதற்குக்கிருபை அருளிச்செய்யவேணுஞ்சுவாமி.

சுவாமி- ஈஸ்பரிக்குச்சொல்- கொச்சகம்.

ஏங்கித்தவித்திடுமாதுக் கின்னேரம்நீயுமொரு
பாங்கியர்போல்வடிவுகொண்டு பக்கலிற்போயுதவியதாய்
தாங்குமஞ்சயேல்வளர்த்திச் சுதன்றாய்வேறாகச்செய்ய
மாங்குயிலேயிடப்பாகம் வாழுமனேவிபோய்வாராய்

வசனம்.

கேளா யென்பிராணநாகியயே அந்ததபசிகளுக்குப் பிள்ளையளித்தபோதே முழுமையுங் காக்கத்தான்வேணும் இப்பவும் நீ ஒரு மருத்துவக்கிழவியைப்போலே வேஷங்கொண்டு அந்த ஞானச்சதிராளிடத்திற்குப்போய் அப்பெண்ணைக்காத்து ரட்சித்து தாய்வேறு பிள்ளைவேறாகச்செய்து பாலனைவாழ்த்தி வாராய்பெண்ணே.

ஈஸ்வரி-சுவாமிக்குச்சொல்-வசனம்.

தேவரீர் சொன்னபிரகாரம் அப்படியேபோய் வருகிறேன்சுவாமி

பொது- விருத்தம்.

மெய்யனாரிடத்திலம்மன் விடையதுபெற்றுக்கொண்டு
வையமீதினிலேமெள்ள மருத்துவக்கிழவியைப்போல்
கையிலேதடியொன்றாணிக கண்களைச்சிமிட்டிக்கொண்டு
தையலாளெனும்பெண்ஞானச் சதிராளினருகில்வாராள்

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் இப்படியாக ஞானச்சதிராள் பிரசவவேதனை காலத்தில் ஈஸ்வரி பரமசிவனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு ம

ருத்துவக்கிழவியைப்போலே வேஷம்பூண்டு ஞானச்சதிராள் அரண்ம ணைக்கு வருகிறவிதங்காண்க.

மருத்துவகிழவிவருகிறத-தரு-இ-ம்-புன்னாகவராளி- ஆதிதாளம்.

பல்லவி.

கிழவியும்வந்தனளே - மருத்துவக்
கிழவியும்வந்தனளே

அநுபல்லவி

கிழவியும்வந்தன ளழகொழுகிவிதோ
முழமுழதோப்புரு முலைகளுமாடவே (கிழவியும்)

சரணங்கள்.

வாயினிற்சுங்காணும் வைத்து
வாதுகள்தான் பெற்று
தாயிலுந்தாயதுபோலேமெள்ளத்
தள்ளாடித்தள்ளாடிக்கொண்டிதோ (கிழவியும்)

கொங்காணிமுகமும்பகைடத்துக்
குலுங்கக்குலுங்க நகைத்து
சிங்காரங்கெட்டிடுங்குழிங்கண்களைச்
சிமிட்டிச்சிமிட்டிக்கொண்டுமேயிதே (கிழவியும்)

கூனுமுதுகுமாகக்காட்டிக்
கொண்டுகை களைநீட்டி
ஞானச்சதிராளிட வேதைப்பாராட்டி
நயத்துடனேதன் முகங்களைக்காட்டி (கிழவியும்)

வேறு தரு.

கலங்கள்கெடக்குது கழுவாமல்
கலநெல்லுகெடக்குது நோம்பாமல்
நிலத்தரிசிகிடக்குது குத்தாமல்
நேரமில்லைகேவுராளத்திடவும்
குர்தாணியுன்னைநானுமிப்போ
கூத்துப்பார்க்கச்சொன்னேனே
கூத்துவந்துகும்கும்மென்ன
கூத்திலேகட்டசிலேயில்லை
வந்தாளேவந்தாளேயிதோ
மருத்துவகிழவியும்வந்தாளே

மருத்துவக்கிழவி- ஞானச்சதிராளுக்குச்சொல்-கவி.

ஏனடியம்மா ஈசனைத்துதித்தாய்
மானிடசென்னமோ வாதையைச்சொல்வாய்

வசனம்.

அடியம்மா ஞானச்சதிராளே (எனடியம்மா) ஈசனைமிகவும் நினை த்துப் புலம்புகின்றாய் உனக்கு என்னமாய்த்தா னிருக்கின்றது சொல்ல டியம்மா.

ஞானச்சதிராள்சொல்-தரு-இ-ம்-கண்டா- ஆதிதாளம்.

பல்லவி.

என்னமென்றுரைப்பேன் - அம்மா - அம்மா - நான்
எப்படிபொறுப்பேன்

அநுபல்லவி.

இன்னதின்னதென்றென்னமாய்ச்சொல்லுவேன்
எப்பவாகிலுமிப்படியானேனோ (என்ன)

சரணங்கள்.

மைந்தராசையாலே மருகனுடன் கூடி
மாதவஞ்செய்தேனே ஆதலாலேயிதை (என்ன)

அம்மணிமார்பை யடைக்குதென்னடி
அறிகிலேனிதைத் தெரியவுரையடி (என்ன)

பக்கத்திலிதோ பதைக்குதுவுதைக்குது
பாரடியென்னைநீ காரடியம்மணி (என்ன)

ஈசராலேவந்த யிடிநிந்தையோயிது
எப்படிஅம்மணி இப்படிநோகுதே (என்ன)

மருத்துவக்கிழவி- ஞானச்சதிராளுக்குச்சொல்- கவி.

உத்தபிமாதே ஒருபயமில்லே
கர்த்தனைத்துதிசெய் காக்கிறாம்மணி

ஞானச்சதிராள்சொல்- கந்தார்த்தம்.

மாதேகர்த்தனைமனதிலெண்ணியேவாடி
யேதோயித்துடி யிடைநோகுதுயென்ன
ஞுதோவருகில்நில்லடி யிதுநிலைசொல்லடி
ஆதிசோதியானோர்வர்சொரூபம்
அறிகிலேனம்மா சங்கரன்குணம் - தெரிகிலேனம்மா
அறிகிலேனெப்போதும் அறிகிலேனிப்படி
திரிபுரமெரித்திடும்பரமன்செய்திடுங்கோலம் (அறி)

வேறு - கந்தார்த்தம்.

சிவனே சிவனே சிறுடன்வனமதிற்செய்த
தவமோதனையினிற்றள்ளுதுதரிக்கிலேதானே
அவமாயேனோ அலைவது யென்னிட அய்யா
ஒவ்வுதோயிது வுன்மனமிதங்கிபிங்கு

ஓடிவா அரனே என்னை நீயிப்போ தேடிவா பரமனே
ஓடிவா வுமையுடன் கூடிய நாதனே
காடுவந்தரித்தாற்போ லோடிவந்தருள்புரி (ஓடிவா அர)

ஞானச்சதிராள்சொல்- கொச்சகம்.

வள்ளலேசங்கரனே மான்மழுவந்தரித்தவனே
எள்ளுக்குள்ளாயிருந்த யெண்ணையும்வேறனதுபோல்
பிள்ளையைநானுமதருளாற் பெற்றெடுத்தேன்சங்கரனே
வுள்ளநாள்சுகமடைய வொருமனதாய்க்காப்பாயே

வசனம்.

அரகரா மான்மழுவணிந்த மயேசனே வாதையைத்தீர்த்த கர்த்தனே கயிலாசபதியே உமதருளினாலே பிள்ளைபெற்று சுகமதாகினேன் இனிமேலும் எங்களைக்காத்து ரட்சித்தருளிப் பதவிதாருங்கர்த்தனே.

கிழவி-ஞானச்சதிராளுக்குச்சொல்- கவி

உத்தமிமாதே உன்மகனவாழி
சித்தமுமகிழச் செலவதுதாராய்

ஞானச்சதிராள்-கிழவிக்குச்சொல்- கவி

பாட்டி நீகேளாய் பாக்கியமோவுன்னைக்
கூட்டிற்றுதெய்வங் குறைவில்லைடாய்

சீஷர்- மிருகண்டருக்குச்சொல்-கவி.

சந்தோஷஞ்சுவாமி சந்தோஷமிப்போ
சந்தோஷமின்னுஞ் சந்தோஷந்தானே

மிருகண்டர்-சீஷருக்குச்சொல்- கவி.

என்னடாசீஷர்களே என்னடாவுங்களுக்கு
என்னடாவந்ததுதான் என்னடாசொல்வீர்

சீஷர்-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்.

அப்பாவுபிறந்தானையா யாங்களுமினிமேலத்தைச்
செப்பமாயெடுத்துப்போயி செண்டுகளாடிப்பின்னும்
கொப்பாகக்குதித்துக்கோலி குண்டுகளாடிமொச்சை
பப்புகள்தின்னுக்கொண்டு பலிவிளையாடுவோமே

வசனம்.

சுவாமி சுவாமி அப்பாவுபிறந்தான் இனி நாங்களவனை யெடுத்துக் கொண்டுபோய் பப்புகள்வாங்கிக்கொடுத்து கெச்சக்காய் செண்டு கோட்டியாடி குதித்துகுதித்து பலிசப்பளாங் குடுகுடு ஆடிவருவோஞ் சுவாமி

ஞானச்சதிராள்-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்.

வேதாமுனிநாதாசரணம்
ஆதிமூலப்பொருளாலே
நாதாயானேர்புத்திரனிப்
போதேபெற்றுவந்தேனே

மிருகண்டர்-ஞானச்சதிராளுக்குச்சொல்-விருத்தம்,

திருவுளச்செயலினாலே சென்மித்தபாலனுக்கு
மருவியேவாழ்த்தியானு மார்க்கண்டனெனும்பேர்தந்தேன்
அருமையாய்தேவர்வாழ்த்த அரிமறைமுனிவர்போற்ற
பெருமையாய்நீயுமிந்தப்பிள்ளையும்வாழ்கவாழ்க

வசனம்.

வாராய்பெண்ணே ஞானச்சதிரோஅந்ததிருவுளச்செயலினாலே உன துவயிற்றிற்சென்மித்த இந்தபாலனுக்கு மார்க்கண்டனென்றபேர்கொடுத்தேன் இனிஇந்தப்பிள்ளையும் நீயும் சிரஞ்சீவியாய்வாழ்கவாழ்க இப்போது இந்தப்பாலகனைத் தொட்டிலிலேவளர்த்தி தாலாட்டும்பெண்ணே ஞானச்சதிரே

ஞானச்சதிராள்-தாலாட்டுகிற-கண்ணிகள்

இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ,

ஞானமாமுனியே செல்வமேயென் கண்ணே
போரான்பாலகனே பிள்ளைகலிதீர்த்தவனே (ஆராரோ)

பொன்னேநவமணியே புகழோங்கவந்தவனே
மின்னேதிருவழகே விளங்[illegible]ந்தமார்க்கண்டா (ஆராரோ)

குச்சரிஷிவங்கிஷமே குலக்கொழுந்தேயென் கண்ணே
உச்சிதமாகியசுடரோ உத்தமனேகண்வளராய் (ஆராரோ)

மிருகண்டர்-சீஷர்களுக்குச்சொல்-விருத்தம்

சீஷரோகேளீரொந்தன் செல்வமார்க்கண்டனுக்கு
சீஷரோவயதைந்தாச்சு தெரிவிக்கவேணுங்கல்வி
சீஷரோநீங்கள்ளைந்தன் தேவிதன்னிடத்திற்சென்று
சீஷரோயிதுவுனாத்துச் செல்வனையழைத்துவாரீர்

வசனம்

ஆரடா அடா சீஷரோ எனதுகுமாரனாகிய மார்க்கண்டனுக்குஐந்து வயதாச்சுது கல்விகற்பிக்கவேண்டும் நீங்கள்ஞானச்சதிராளிடஆசிரமத்துக்குப்போய் மார்க்கண்டனை அழைத்துவாருங்களப்பா

சீஷர்-பரணி,

வாடாஞானசிரோன்மணியே மகிழ்வாமிருகண்டையர்பெற்று
நாடோர்புகழும் பாலகனை நாம்போயழைத்துவருவம்வா

சிஷர்-ஞானச்சதிராளுக்குச்செ-கவி,

தாயேமிருகண்டையனுருந் தன்பாலிருக்கும்பாலகனை
மாயாவிநோதமாயனழைத்து வருகச்சொன்னாளுப்புவையே

ஞானச்சதிராள்-சிஷருக்குச்சொல்-பாணி

சிஷரோ நீரிப்படிக்கே செல்வனுனபாலகனைப்
பாசமிகுந்தமிருகண்டர் பக்கஙகொண்டுபோய்விடுவீர்

சிஷர் - மார்க்கண்டனுக்குச் - சொல் - பாணி,

அப்பாமைந்தாமார்க்கண்டா ஐயருனைப்போயழைத்துக்கொண்டு
இப்போதேவரச்சொன்னார் எழிலாய்நடந்துவருவாயே

மார்க்கண்டன் - சிஷருக்குச்சொல் - பாணி

ஆசையாயென்தந்தையர்தான் அழைத்தபோதேநான்மெத்தப்
பாசமாகவேவருவேன் பரிவாய்நடவீர்சிஷர்களே

மார்க்கண்டன்-வருகிற-தரு-இ-ம்-பந்துவாளி-ஆதிதாளம்,

பல்லவி

மார்க்கண்டனிதோவந்தான்-ஜெய-மார்க்கண்டனிதோவந்தான்,

அனுபல்லவி,

தீக்காயசுபடைத்தோன் - பெண்
சித்தமதைவிடுத்தோன் - ஜெய (மார்க்க)

சரணங்கள்

அண்டரண்ட ரகிக்க இந்த
அவனியெங்குந் துதிக்க
கண்டவர்தொழு திருக்க மிரு
கண்டர்மனங் களிக்க ஜெய (மார்க்க)

ஞானங்கல்வி யுடையோன் முனி
நாதர்வணியும் விடையோன்
தியானகுறிக் [illegible]டையோன் அரன்
ஜோஷ்டபூசைக் [illegible]டையோன் ஜெய (மார்க்க)

அல்லிமலரை யெடுப்போன் மெத்த
அன்பனுசத் தொடுப்போன்
செல்விசிரசில் விடுப்போன் ஆதி
தேவர்பாதம் அடுப்போன்-ஜெய (மார்க்க)

சிஷர்மிருகண்டருக்குச்சொல் பாணி,

மெய்யனேசரணம் விச்சித்ரபாலனை
ஐயனேநாங்கள் அழைத்தோடிவந்தோம்

மார்க்கண்டன்-மிருகண்டருக்குச்சொ-பரணி,

காதலாய்பெற்றநாதரரேயென்னை
எதினாலழைத்தீர் ஓதுவீர்புத்தி

மிருகண்டர்-மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்,

அப்பனேகண்ணேவாடா அருமைமைந்தனேயுனக்கு
இப்பவும்வயதைந்தாச்சு யினியுனக்கிசைந்தகல்வி
செப்பமாய்சொல்லிவைக்கச் சிந்தையிலெண்ணியுன்னைக்
கொப்பெனவரவழைத்த குறியிதுவறிந்திடாயே

வசனம்,

அப்பாமார்க்கண்டா உன்னையழைத்த தென்னவென்றால் இப்பவும் உனக்குஐந்துவயதாயிற்று காலத்தில் கல்விகற்பிக்கவேணும் ஆகையால் உனக்குசீக்கிரத்திற்கல்வி கற்பிக்கவேணுமென்று அழைப்பித்தேனப்பா.

மார்க்கண்டன்-மிருகண்டருக்குச்சொல்- விருத்தம்.

தந்தையேயுமதுவாக்கியந் தவறாமலப்படிக்கே
எந்தனுக்கடுத்தவித்தை யெல்லாம்நீர்சொல்லிவைத்தால்
உந்தனுசீர்பாதத்தா லுலகத்தோர திசயிக்க
அந்தகனென்னைக்கண்டு அலறிடச்செய்குவேனே

வசனம்,

கேளும்என துதந்தையே உமது திருவாக்கின்படியே எனக்குண்டாகிய வித்தைகளைச்சொல்லிவைத்தால் இந்தஈரேழுபதினாலுலோகமும் அதிசெயப்பட அந்தயமதர்மராசனும்என்னைக்கண்டுபயந்துபின்னிட்டோடும்படி செய்விப்பேன் ஐயாவே

மிருகண்டர்-சீஷருக்குச்சொல்-பரணி,

பாகமாகபெற்றெடுத்த பாலனுக்குத்தமிழுணாங்க
சீஷரேநீரோதுவனா க்ஷணத்திலழைத்துவருவீரோ

சீஷர்கள்சொல்-பரணி

தம்பிமார்க்கண்டனுக்கிப்போ
தையா கல்விசொல்லிவைக்க
நம்ம லோதுவர்தான்வருக
நாடி ணாணழைப்போம்வா

சீஷர்-வசனம்.

ஆனால் அப்படியேபோவோம் வா அண்ணே

பொது-கவி,

வேதமாமிருகண்டையர்
வேண்டியீன்றமைந்தனுக்குச்

சாதகத்தமிழுணாக்க
தானேவோதுவர்வாராரோ

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் மிருகண்டமகாமுனிவருடைய புத்திரனாகிய மார்க்கண்டேயருக்குக் கல்விகற்பிக்க உபாத்தியாயராகிய வேதியர்வருகிற விதங்காண்க.

உபாத்தியாயர்-வருகிற-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி.

ஓதுவர்வாரார் - குலக்குரு - வேதியர்வாரார்

அநுபல்லவி.

நீதியறிந்தவர் நேர்மைதெரிந்தவர்
சாதகநூல்முறை சாஸ்திரங்கற்றவர் (ஓதுவர்)

சரணங்கள்.

அஷ்டாங்கஞ்சுத்தி யறிந்தபேர்பெற்றவர்
அருமறைமுனிவர்க்கு மறிவுகொடுத்தவர் (ஓதுவர்)

வேதமார்கலைகளும் வெண்ணிட்டறிந்தவர்
வித்தியாகுருவென்றும் விறியேவாழ்ந்தவர் (ஓதுவர்)

பூமியையாளும் புகழுள்ளமன்னர்க்குப்
புத்தியுரைத்துப் பெருமைபடைத்தவர் (ஓதுவர்)

உபாத்தியாயர்-சட்டாம்பிள்ளைக்குச்சொல்-விருத்தம்.

ஆரடாசட்டாம்பிள்ளை ஆதிமூலமேவாடா
பாரடாபசகளெல்லாம் பயப்படாதிருப்பதென்ன
கூரடாயேட்டைப்பார்த்துக் கூக்குரலாய்ப்படிக்க
சீரடாபிரம்பினாலே சிவுச்செனவடித்திடாயே

வசனம்.

அடாவாடா சட்டாம்பிள்ளை ஆதிமூலம் என்னடா பசகளெல்லா கலகலென்று படிக்காமல் விளையாடிகொண் டிருப்பதென்ன கோஷ்டமாகப்படிக்கச்சொல்லிப் பிரம்பையெடுத்து செங்கென்று அடியடா சட்டாம்பிள்ளையாகிய ஆதிமூலமே அப்படியே செய்கிறேனையா.

சட்டாம்பிள்ளைபசகளுக்குச்சொல்-தரு
இ-ம்-கேதாரகௌளம்-ஏகதாளம்.

பல்லவி.

அடடாபடியடா - சுவடியைநல்ல
தாகட்டுந்தடிகளே

அநுபல்லவி

கொடடாவவன்ருடையிற்குமாப்பாஉன்பாடங்
கொண்டுவாவண்ணடையில் மொண்டிநீபண்ணுதே (அடடா)

சரணங்கள்.

ஆத்திருடிபடித்திடும்வீராசாமி நீயிங்கேகில்லடா
நேற்றுவருகாதமுத்தையாயிந்த நிலத்திற்சாலுன்றிநில்லடா
போற்றிப்பணிந்திடும் புண்ணியவோதுவர்
பொல்லாதகாதகர் வல்லாண்மைசாதகா (அடடா)

நிகண்டுபன்னிரண்டுக்குறைசொல்லும்
நீலகண்டாநீவாயைத்திறவடா
சிகண்டிவேஷங்கொண்டு சேர்ந்தீர்களிருவரும்
சீச்சீமதயோடா சூச்சலேதடா (அடடா)

காட்டுச்சொல்லேசொல்லாய்ப்பேசிடுமப்பு
காளத்தியுன்பாடங்கொண்டுவா
உருட்டிப்பார்ப்பதேது உள்ளாமூஞ்சிநாயே
வுலகத்தைநீவெல்லகலகத்தைவன்கொண்டாய் (அடடா)

சட்டாம்பிள்ளை-உபாத்தியாயருக்குச்சொல்-விருத்தம்.

அந்தணரே-நீரெங்க ளையரேநீலகண்டன்
தந்தைதாய்சொற்கேளாமற் றறிதலையாகியின்னம்
எந்தனை மதித்திடாமலெதிர்த்துமேகவிழ்த்துவிட்டான்
இந்தகாதகஞ்செய்தோனுக் கென்செய்வோஞ்சொல்லுஞ்சுவாமி

வசனம்.

சரணம்சரணம் வித்தியாகுருவே நிகண்டுக்கு உனாகேட்கப்பட்ட இந்தநீலகண்டன் நாம் இத்தனை வித்தைகற்றுக்கொண்டோமென்கிறகெர்வத்தினலே தன்தாய்தகப்பன் சொல்லுங்கேளாமல் என்சொல்லுங்கேளாமல் நான்வதாகிலுஞ்சொல்லப்போனல் உருமிமிரட்டிக்கொண்டு மகா. தறிதலையாய் தன்மனதுபோனபடிக்கு நடக்கின்றுன் அவனையென்ன செய்கிறது சுவாமி.

உபாத்தியாயர்சட்டாம்பிள்ளைக்குச்சொல்-விருத்தம்

புத்திநானுரைப்பேன்கேளாய் புகழ்பெற்றசட்டாம்பிள்ளை
இத்தனைகெர்வங்கொண்டுயெண்ணுமல்நடந்தோன்றன்னை
குத்திடுஞ்சிட்டக்கல்லைக் கொடுங்காற்றிலுங்கைக்கு
வித்துறமாட்டிவிட்டுவெய்யலில் நிறுத்துவாயே

வசனம்.

அடாகேளடாசட்டாம்பிள்ளை ஆதிமூலம்இப்போக்கொத்தபொல்லாதவனு அந்தநீலகண்டன் அவன்தாடையிலகற்ந்து பசகளையெல்லாம்வி

ட்டுகாரியுமிழச்சொல்லி கறடுமொறடாயிருக்கப்பட்ட சிட்டிக்கல்லேகொ ண்டுவந்து காலுக்குகைக்குமாட்டி அவனுக்குப்புத்திவருகிற வரைக்கும் இந்தவெய்யலில் நிறுத்திவையும் பிள்ளாய்

சட்டாம்பிள்ளை-நீலகண்டனுக்குச்சொல்-விருத்தம்.

வாத்தியாருனாத்தபோதே வழக்கென்ன புழுக்காவுன்னை
சேர்த்துமேநான்பிடித்துக் கட்டினேன்நீலகண்டா
பார்த்தையாசிட்டந்தன்னைப் பதைத்திடவுன்காற்கைக்கும்
சாத்துவேனிந்தவெய்யல் தன்னில்நீயிருந்திடாயே

வசனம்.

அடாவாடாநீலகண்டா உபாத்தியாயர் உத்தரவுவந்தபோதே உன் னைக் கொஞ்சத்திலே விடப்போகிறதில்லை இதோமாட்டின சிட்டமுங் கொஞ்சத்தில் வாங்கப் போகிறதில்லை உன்னுணுவம் இப்போ தெங்கே போயிற்று சீச்சி திருட்டுமூஞ்சி உனக்குபுத்திவருகிறவரைக்கும்இந்தவெ ய்யலிற்றனே விழுந்துகிடவும் பிள்ளாய்

நீலகண்டன் புலம்பல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

ஐயாசட்டாம்பிள்ளை யென்னையாசிட்டத்தை
அன்புடனேவாங்குமையா
ஐயாஐயாசரணம் ஐயாவுன் திருவடிக்
கையாசட்டாம்பிள்ளை யென்னையா
காலுங்கடுக்குதேஐயாஐயாஐயாசிட்டத்தை
கடுகெனநீர்வாங்குமையா யெந்தன்
மார்பையுளைக்குதே ஐயாசிட்டத்தை
மகிழ்ச்சியாய்நீர்வாங்குமையா
இடுப்புங்குடையுதே ஐயாஐயாஐயாசிட்டத்தை
வெழிலுடனீர்வாங்குமையா எந்தன்
பக்கமுளைக்குதே ஐயாசிட்டத்தைப்
பரிவுடனேவாங்குமையா
ஐயாசரணமென்னையாசிட்டத்தை
அன்புடன்வாங்குவீரையா
வெய்யலுரைக்குதே ...யபிக்கக்கொடுக்குதே
வேர்வை...ொழுகுதே ஐயா
ஐயாபள்ளிகூடமென் னையாயினிநான்
அமர்ந்து படிக்கிறேனையா

சட்டாம்பிள்ளை-உபாத்தியாயருக்குச்சொல்-விருத்தம்,

ஐயரோசரணமையா அவனுக்குசிட்டமாட்டி
வெய்யலிற்போட்டபோதே விடாய்த்தனனிதுவல்லாமல்
கைகளுங்காலும்வீங்கிக் கதறுறான்புத்திவந்து
ஐயனேசிட்டம்வாங்கத் தயவதுபுரிந்திடீரோ

வசனம்.

சரணம்சரணம்வித்தியாகுருவே அந்தநீலகண்டனுக்கு அவன்கொழுப்புக்கேத்தாப்போல் பொல்லாதசிட்டக்கல்லைக்கொண்டுவந்து காலுக்குங்கைக்குமாட்டிவெய்யலில்உருட்டிவிடவேமிகவும்விடாய்பட்டுப்போனான்வீக்கமுங்கண்டுகதறிக்கதறபழுகிறான் புத்திவந்திருக்கும் செவ்வையுடனடப்பான் அந்தச்சிட்டத்தை வாங்கச் செலவுதாருஞ்சுவாமி

உபாத்தியாயர்-சட்டாம்பிள்ளைக்குச்சொல்-விருத்தம்,

சிட்டத்தைவாங்குமென்று திருடனுக்குபரால்வந்த
மட்டும்நீயினியென்நாளு மவனுக்குவருவதெல்லாம்
சட்டமாயுனைப்பிடிக்குந் தயிரியமிருந்துதானும்
பொட்டனச்சிட்டம்வாங்கிப் புத்திகளுரைத்திடாயே

வசனம்.

வாரும்பிள்ளாய்சட்டாம்பிள்ளை ஆதிமூலம்ஏதடா நீயேஅவனுக்குஉபரால்வருவதுஅடாஅவன்திருடனுச்சேஅவனுக்கு நீஉபரால் வந்துபேசுகிறபடியினாலேஇனி அவன்என்னசெய்தபோதும் அந்தக்குற்றம் உன்னைவந்துசாரும் அதற்குத்தயிரியமிருந்தால் சிட்டக்கல்லைவாங்கிப் புத்திசொல்லி வுட்காரவையுமப்பா

சட்டாம்பிள்ளை-நீலகண்டனுக்குச்சொல்-தருணி.

ஏதடாசிட்டம்வாங்கிவிட்டேன்
இனியாகிலும்நீநீலகண்டா
பார்த்தோர்நகைக்கப்பேரெடுக்காமற்
படித்துக்கொண்டேயிருப்பாயே

நீலகண்டன்சொல்-வசனம்,

அப்படியேபடித்துக்கொண்டுவருகிறேன்சட்டாம்பிள்ளை

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் இப்படிக்குவாத்தியாரும் சட்டாம் பிள்ளையும் பிள்ளைகளுமாகயிருக்கும்போது மிருகண்டமகாமுனியினுடைய சீஷர்களவ்விடத்திற்கு வருகிறவிதங்காண்க

சீஷர்-உபாத்தியாயருக்குச்சொல்-கவி,

கல்விசிறுவர்தமக்குரைக்குங்
காவியந்தெரிந்தோதுவரோ

செல்வமிருகண்டையருமை
க்ஷணத்திலழைத்தார்வருவீரோ

உபாத்தியாயர்சட்டாம்பிள்ளைக்குச்சொல்கவி,

அட்டாஆதிமூலமேகே
வருமாமுனிவர்நம்மையழைத்தார்
கொட்டாபிரம்பைநீயிந்தக்
குமாரனைப்பார்த்திருப்பாயே

சட்டாம்பிள்ளை - உபாத்தியாயருக்குச்சொல் - கவி

குமாரரெங்குங்கலையாமற்குருவேவைத்துக்கொண்டிருப்பேன்
சமானமானமிருகண்டர்தன்பாற்சென்றுவருவீரோ

உபாத்தியாயர் - மிருகண்டருக்குச்சொல் - கவி,

சுபமாமிருகண்டையரேநீர்தானேஞ்தா நமைவேண்டி
சுபமாயழைத்தகாரியத்தைச்சொல்வீரறியச்செல்வீரோ

மிருகண்டர் - உபாத்தியாயருக்குச்சொல் - பாணி,

வந்தவோதுவரோகேளீர்மகிழ்வாயெனதுபாலனுக்கு
செந்தமிழெல்லாமுணக்கச்சீக்கிரமழைத்துப்போவீரோ

உபாத்தியாயர் - மார்க்கண்டனுக்குச்சொல் - பாணி,

மதியும்விதியுந்தானுள்ள
மைந்தாமணியேமார்க்கண்டா
விதியால்விளங்கச்செய்திடுவேன்
மெய்யேயென்பின்வருவாயே

உபாத்தியாயர் சொல் அகவல்,

கணபதியென்றிடக் காலனுங்கைதொழும்
கணபதியென்றிடக் கலங்கும்வல்வினை
கணபதியென்றிடக் கருமமாதலாற்
கணபதியல்லதோர் கருமமில்லையே
விநாயகனென்றிட வினைகள்தீர்ந்திடும்
விநாயகனென்றிட வெறுமைமாற்றிடும்
விநாயகனென்றிட வேள்விகுணந்தரும்
விநாயகனென்றிட வேறுமில்லையே

வசனம்,

நமோஸ்நமோஸ்துகட்டைபோ புத்திவாகடுசென கடுகென்பாடம்
வா கூராயெழுத்தாணியுங்குறுப்பனீர்லோலையும் வாராயெழுத் தெல்லாம்
எனக்கேவா கட்டைமனதிலேபுத்திமுளைத்தது கற்பகப்பிள்ளையாருக்கு
ம்மூன்றுகுட்டும் மூன்றுதோப்பணமும் போட்டுச்சேவித்துக்கொள்ளு
மப்பிள்ளாய்

உபாத்தியாயர்சொல்-தரு-ஜம்பை.

ஆதிமுதல்நமோஸ்து அலங்காரகுருவேதுணை
ஆனைமாமுகவன்றுணை அருள்வாணிதுணையே
ஹரிநமோஸ்துடன்சித்தம்-அ-ஆ
அறிவிதுவும் இ ஈ யிது
உ- ஊ- உயர்ந்தசொல்- எ
உறிதியுள்ள- ஏ- ஐ- ஈது
ஒ- ஓ- ஒவ்வாத- ஔ
ஒன்றுககுமாகாத் கூயிது
க ங ச ஞ கடோமுள்ளடணயிது
த ந ப ம திருணமுள்ள ய ர யிது
ல வ ழ ள லலிதமுள்ள ற ன யிது
பக்குவமதாகயிந்தப் பதினெட்டெழுத்தையும்
பார்த்தபேரொப்போது பாலித்துவாழ்வார்

உபாத்தியாயர்சொல்- முச்சீரடி- இபதை.

ஊமையெழுத்திது உடலெழுத்திது வுலகில்வழங்குமிது
நேமவெழுத்திது நிஷ்டையெழுத்திது நினைவமிவானதிது
பூமியெழுத்திது புதுமையெழுத்திது புண்ணியமானதிது
காமியெழுத்திது கடோவெழுத்திது காணவேணுமிது

உபாத்தியார்சொல்- சந்தவிருத்தம்.

உலகமாக்கலுங் காக்கலும்மாகிய
உண்மையானதோ ரக்ஷரந்தானிது
கலகமுற்றிலும் வைத்தலுமாகிய
காரணப்பொரு ளக்ஷரந்தானிது
நிலையமாதவர் நெஞ்சிலு தித்[illegible]
நின்றதோரிந்த வக்ஷரந்தானிது
வலுமையாகும்விவேகமுமாகிய
வள்ளலைக்காணு மக்ஷரந்தானிது

மார்க்கண்டன்-உபாத்தியாயருக்குச்சொல்- கவி.

உத்தமகுருவே வி[illegible]யையறிந்தேன்
கர்த்தனையறியப் புத்திதந்திடுவீர்

உபாத்தியாயர்- மார்க்கண்டனுக்குச்சொல்-கவி.

கல்வியையறிந்த செல்வனேயினிமேல்
வள்ளலையறிய இல்லறம்வாராய்

மார்க்கண்டன்-உபாத்தியாயருக்குச்சொல்- கவி.

உமதருளதனால் நடனை நான்வெல்ல
நிலையினில்வருவேனுமதடிசரணம்

உபாத்தியாயர்-மிருகண்டருக்குச்சொல்-கவி.

மிருகண்டமுனியே கனாகண்டான்பாலன்
அறிவுண்டாயிருப்பான் திறமுண்டாமையர்

மிருகண்டர்-உபாத்தியாயருக்குச்சொல்-கவி

அறிவினையுரைத்த மறையவாவுமக்குத்
திரவியமளித்தேன் பிரியமாய்நடப்பீர்

ஞானச்சதிராள்-மிருகண்டருக்குச்சொல்-கொச்சகம்.

வேதமுமெய்ஞ்ஞானமுநீர் வேண்டிமைந்தனுக்குரைத்தீர்
மாதவத்திற்சிவனளித்த வயதுபதினாறச்சே
எதுபதேசஞ்செய்து மிங்கிருப்பதிலேயேயிவன்
ஆதலினாற்கேட்டேனிதை யறிந்தெனக்குச்சொல்வீரே

வசனம்

கேளும் பிராணநாதா இவ்வளவு சீக்கிரமாய் நமதுகுமாரனுக்குக் கல்விகற்றுக்கொடுத்து மென்ன அப்போது இந்தப் பாலகனுக்குப் பரமசிவனளித்த வயது பதினாறுதானே அந்தபதினாறுவயதிற்குப் பின்பு இந்தப்பிள்ளை இவடத்திலிருக்கப்போகுதா இந்தக்காரணத்தை அறிந்து சொல்லும்பிராணநாதா.

மிருகண்டர்-ஞானச்சதிராளுக்குச்சொல்-கொச்சகம்.

ஆமிதுவுமெய்தானே அறிவுடையதேவியரே
பூமிதனிலுயிர்வதைசெய் பொல்லாதகாலனிட
நேமகத்திற்கென்னென்றா னேரமேயிருவருமாய்ச்
சாமியைக்கேட்காதுவந்த சஞ்சலத்திற்கென்னசெய்வேன்

வசனம்.

வாராயென் பிராணபதமான பெண்ணே ஞானச்சதிரே இப்போ நீசொல்லவந்த சொல்மெய்யே இந்தப்பாலனுக்குப் பதினாறுவயதுஞ் சென்றபிறகு பிடிக்கவாப்பட்ட எமனுக்கு என்னவிதஞ் சொல்வதென்று நாமிருவோரும் ஈசனைக்கேழ்க்காத வந்த சஞ்சலத்திற்கு நான்தானென்ன செய்வேன் நீதானென்னசெய்வாய் உள்ளபடிக்கு நடக்கும்பெண்ணே.

மார்க்கண்டன்- மிருகண்டருக்குச்சொல்-கொச்சகம்.

என்னைப்பெற்றுளமகிழ்ந்து மிஷ்டமுடன்பாத்திருந்த
தந்தையேதாயேநீர் சஞ்சலமுற்றேதியங்கி
வந்ததென்னவென்னோடவ் வகையுரைத்திராவிலுங்கள்
சந்தேகந்தீர்த்திடுவேன் சட்டமுடன்சொல்வீரே

வசனம்.

கேளும் என்னைப்பெற்றுவளர்த்த தந்தையேதாயே நீங்களெனக்குக் கல்விகற்பித்துக்கொடுத்து இப்போது என்னைப்பார்த்து நீங்களிருவ

றும்சஞ்சலப்படுவதென்ன அந்தச்சஞ்சலமான சங்கையையென்னுடனே சொல்லுங்கள் சஞ்சலத்தை நிவர்த்திசெய்கிறேன் தந்தையே.

மிருகண்டரும் - ஞானச்சகிராளும் - புலம்பல்

கண்ணிகள்-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

என்னென்றுசொல்லுவோமுந்தனெழுத்தின் விதிவசத்தை
யேதென்றுசொல்வோமடா - மகனே - மகனே - ஐயோ
இந்நாள்வரையிற்புத்திர னில்லாததோஷத்தாலே
இருள்வனந்தேடியடா - மகனே - மகனே
தபத்தைச்செய்துஞ்சிவன் றனைக்கண்டுமிப்போது
சங்கையாச்சுதேயடா மகனே - மகனே
தபத்தைச்செய்தபேர்க்கொரு பாலனகிடைத்ததானுல்
தன்பாக்கியமில்லையோடா மகனே - மகனே
ஈசர்வந்துவயதுயீரெட்டுனக்களித்தார்
இனிவேறில்லையோடா மகனே - மகனே
ஆசையாய்ச்சிவன்வயதளிக்குமப்போதேகேட்டு
அறியாமற்போனோமடா மகனே - மகனே
வயதுசரியானாலேமன்னன்நமனுமுன்னை
மடக்கிப்போவானேயடா மகனே - மகனே

மார்க்கண்டன் - மிருகண்டருக்குச்சொல் - கொச்சகம்.

முனிவர்குலத்திற்பிறந்து முத்திபெற்றவையாவே
புனிதனென்னையெனநினைத்துப் புலம்பிநிற்குமென்றுயே
தனியதவத்திற்குடையோர் சஞ்சலத்தையெண்ணுவரோ
மனதைத்தேற்றியுமிருக்க வகையதனைத்தேடுவீரோ

வசனம்.

சேனும் எனது தந்தையேதாயே தபசிகளாயிருக்கப்பட்டபேர் இப்படிக்குச் சஞ்சலப்படுவது நீதியல்ல நான் எப்படியானாலும் நீங்கள் வேண்டிய தவத்தைச்செய்து அநேகம பிள்ளைகளைப் பெறலாம் தந்தையே தாயே.

மிருகண்டரும் - ஞானச்சகிராளும் - மார்க்கண்டனுக்குச்

சொல்விருத்தம்.

எப்படிமகனேயீசனீந்த வோர்வயதுதன்னை
எப்படியினியழித்தி யெழுதவும்நம்மாலாமோ
எப்படியுனைவளர்த்து யேமன்றனைக்கொப்பித்து
எப்படிவாழ்ந்திருப்போ மெங்களாருயிரேகண்ணே

வசனம்.

கேளாய்ப்பா எங்களுயிருக் குயிராய்வந்து பிறந்த மார்க்கண்டா ஏ

டீ

ப்படி எங்கள்மனதைத்தேற்றி யிருக்கச்சொன்னாய் உனக்கு ஈசனளித்த பதினாறு வயதையழித்து எழுத வெங்களாலேயாகுமா அல்லது மற்ற ஒருவராலேயாகுமா இல்லையே இனி யெப்படி உன்னைவளர்த்து எமன்கையில் ஒப்பித்து மனந்துணிந்து இப்பூமியிலிருப்போமடா மார்க்கண்டா

மார்க்கண்டன்-மிருகண்டருக்கும் - ஞானச்சதிராளுக்குஞ்

சொல் விருத்தம்.

இனியென்னசெய்வோமம்மா யென்னிடவையாகேளீர்
இனிகயிலாசவாசரினித்தங்கியுத்தரஞ்சொல்வாரோ
இனிமேல்நான்சிவனைக்கண்டு யிடர்நீக்கிக்கொள்ளவேண்டும்
இனிமனந்துணிந்துவாழ்ந்து யிருந்தென்னைரட்சிப்பீரோ

வசனம்.

கேளுந் தந்தையே தாயே இனிமேல் என்னசெய்வது அந்தகயிலாசவாசகர் இனி உங்களுக்கு உத்தரஞ்சொல்லப்போகிறார் ஆகையால்நான் அந்தயீசனைக்கண்டு இடர்நீங்கிக்கொள்ள வேண்டும் உங்களாலே ஆவதென்ன இனிமனந்துணிந்துஇருவரும்என்னைரட்சியும்தந்தையேதாயே.

ஞானச்சதிராள்புலம்பல்-தரு-இ-ம்-ஆனந்தபைரவி- ஆதிதாளம்,

பல்லவி.

மகனே ஐயோ மகனே - எந்தன்
மகனே நானென்ன செய்வேன்

அநுபல்லவி.

மகனேயுனைவளர்த்து மறலிகையிலொப்பிக்க
வகைமோசமாகலாச்சே ஜெகமேபழிக்கலாச்சே (மகனே)

சரணங்கள்.

ஈசன்தந்தவயதினாலே - மெத்த
யெண்ணதெல்லாமெண்ணு தகுதினாலே
பாசமாய்தபஞ்செய்துபெற்றதினாலே - உனக்கு
பதினாறுஞ்சென்றிடரிதனாலே
மோசம்வருமோசிவன்மொழிந்தவயதினாலே
ரோஷதூதர்துடிப்பார்கூசாமலேபிடிப்பார் (மகனே)

அருமைமகனைக்காலன்அடுப்பானோ - உந்தன்
அழகுஅந்தமும்பார்த்துவிடுப்பானோ
சிறுமைப்படவேதுசந்தொடுப்பானோ - வுன்னைத்
திருகுசெய்தேதடியா லடிப்பானோ
எருமைக்கிடாவிலேறி யேமனுமிழுப்பானோ
பொருமைப்படுகுவானோபுறமாய்விடுகுவானோ (மகனே)

காலன்கையிலொப்பித்துயிருப்பேனோ - எந்தன்
கண்ணேயுனைப்பிரிந்து தரிப்பேனோ
பாலமார்க்கண்டாவுன்னோடிறப்பேனோ - யினிநான்
பாதவித்திட அயன் பிரிப்பானோ
சூலங்கொண்டேயிடித்து தூக்கியேயிழுப்பானோ
கோலங்கொள்வாரோமைந்தாமேலுங்கிள்வாரோயிந்த (மகனே)

மிருகண்டரும்-ஞானச்சதிராளும்-மார்க்கண்டனுக்குச்சொல்

தாழிசை - இ-ம்- தேனுப்பத்து

கொஞ்சுமஞ்சுகமுடைத்த்குஞ்சரமேகோகிலச்சரமே
குமாருக்குமழகானகண்மணியே மறையேனோவைத்தெழுதினான்
செஞ்சுடர்முடிபடைத்தவாக்கினன்செய்ததபத்தினற்குறைவாச்சுதோ
ஜென்மதீவினையோசெய்தபாவமின்னந்திரவில்லையோவறிகிலோம்
வஞ்சகமாகச்சிவனுனை யளித்ததுவு மாயமோஅபனுபாயமோ
மர்ம்மமோயிதுவுங்கர்ம்மதீவினையோவல்வினைகளோசெல்வமே
அஞ்சிடாதேயெனையாதரிக்கயினியாரடாவுனதுபின்புதான்
ஐயையோமகனேதெய்வமேவிழியும்அலையுதேநெஞ்சமலையுதே

வசனம்.

அப்பாமகனேமார்க்கண்டாகொஞ்சுங்கிளியே கோகிலமேகுமாரவேளுக்கு மழகானகண்மணியே வுனக்கேனோவயதுகுறைவானதவத்தைசெய்திருந்தோமோ அல்லது அயனிடவுபாயமோ எந்தமர்ம்மமோகர்ம்ம தீவினையோ அடாசெல்வமேஉனக்குப்பின்பு எங்களுக்குஆதரவு சொல்லப்பட்டவர் ஆரிருக்கிறார்கள் எப்படியிடங்கொள்வது தெய்யமே மகனைப்பார்க்க நெஞ்சங்கலங்குதேதெய்வமே

மிருகண்டரும்-ஞானச்சதிராளும்-புலம்பல்,

ஆனந்தக்களிப்பு,

மகனேயுனைவளர்த்தேனே - அந்த
மாலிகையிலொப்பிக்கவகைதேடலாமே (மகனே)
சுகமாயிருந்திடக்காணேம் - காலன்
துள்ளிவந்துவுன்னைத் துடிக்கக்கொல்வானே (மகனே)
பண்ணததபத்தைச்செய்தோமே - இந்தப்
பாரிலுள்ளவரெல்லாம்பழிக்கவானோமே (மகனே)
கண்ணேயுனைவளர்த்துநாமே - அந்தக்
காலர்க்கிறைகொடுக்க காத்திருந்தோமே (மகனே)

சிறுபிள்ளையாயிருப்பானோ - விட்டுத்
திரும்புவானோகாலன் இசைக்கிழுப்பானோ (மகனே)

அறிவானகல்விகற்றானே - வரும்
அந்தகன்பாசங்கொண்டடித்திழுப்பானே (மகனே)

பெற்றும்வளர்த்தும்வீணாச்சே - ஊர்
பெண்களெனைப்பழித்துப்பேசவுமாச்சே (மகனே)

கர்த்தனை துதித்தும்வீணாச்சே - என்
கண்ணேயிதுவென்னகாரணமாச்சே (மகனே)

ஞானச்சதிராள்-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்-இ-ம்.கண்டா

மகிணனேகேளாயிந்தமகனுக்காயடவிதன்னில்
வெகுகாலந்தபமிருந்தும்வீணாச்சேயினிமேல்நம்மால்
வகைதேடவேணுமென்றால்வளருமோஆயுளிந்த
செகமெலாம்நகைக்கலாச்சே செல்வனுக்கென்னசெய்வேன்

வசனம்.

கேளும்பிராணநாதா இந்தப்பாலகன்வேணுமென்று வெகுபாடுபட்டுதவஞ்செய்தோம் செய்தும் பலனில்லாமற் போயிற்றுஇனிஆயிசு வளரப்போகுதா நமக்குத்தெரியாது இதற்கென்னபுத்திசொல்லும் என்பிராணநாதா

மிருகண்டர்-ஞானச்சதிராளுக்குச்சொல்-விருத்தம்-இ-ம்-கண்டா.

மனைவியேகேளாயிந்தமகனைநீநினைத்துக்கொண்டு
உனதாசையாலேமெத்தவுருத்தமாய்புலப்புகின்றாய்
இனிமேல்நாம்விசாரமுற்றாயிருந்தாலாவதென்ன
சனிகோலமீதென்றெண்ணித்தயிரியமுற்றிருப்பாய்பெண்ணே

வசனம்.

கேளாய்பெண்ணே நமதுகுமாரனுக்குவயதுகுறைவென்றுநாம்புலம்பினதினாலாவதென்ன அப்படியே பாலனுக்குவயதுசரியாகி காலன்வந்துபிடிக்கும்போது வரமளித்தஈஸ்வரர் எங்கேபோறார் நாம்தாமெங்கேபோறோம் உள்ளபடிநடக்குது தபக்குறைவராது நீ தயிரியமாயிரும்பெண்ணே

ஞானச்சதிராள்-மிருகண்டருக்குச்சொல்- விருத்தம்-இ-ம்-முகாரி

இருங்கிடாயென்றுசொன்னயிருடிமாமுனிவர்கோவே
தரித்திடுமோவெனதிரேகஞ் சங்கரர்தன்னைநோக்கி
வருந்தியேபெற்றெடுத்த மதியுள்ளபாலன்தன்னை
துறந்தபின்னிருப்பதாலுஞ் சீவனையொழிக்கலாமே

வசனம்.

கேளும்பிராணநாதா என்னையெப்படி மனந்துணிந்திருக்கச்சொன்னீர் நாமோவெகுகாலந் தவமிருந்து பெற்றபிள்ளையாச்சுதே இந்தப்பிள்ளைக்குப்பிறகுநாமிருப்பதாசிவனையுமொழிப்பதேயுத்தமம் பிராணநாதா

மிருகண்டர் -ஞானச்சதிராளுக்குச்சொல்-விருத்தம்-இ-ம்முழகாரி,

ஒழித்திடுவேன்ருேது முறைதிமாமயிலேகேளாய்
அழித்துபினனெழுதுவாரோ ஆயுசுமகனிக்கிப்போ,
வழித்துறையில்லாவார்த்தை வழங்கினுலுலகிலுள்ளோர்
பழித்திடாரோநீயிந்தப் பக்ஷத்தைதவைக்கவேண்டாம்

வசனம்,

வாராய்பெண்ணேஞானச்சதிராளே நாம்தானே தவத்தைச்செய்துபாலகனைப்பெற்றபோதும் நாம்பெரியோர்களென்றுனுக்குராசன் கொடுத்திருக்கிறவயதை அழித்தெழுத ஒருவராலே யகுதா உலகினில்அடாதவார்த்தையைவழங்கினுல் உலகம்பழிக்காதா இனிமேல்இந்ததபஞ்செய்யமாட்டோமா இப்போக்கொக்க பிள்ளையைப்பெருதே பெற்ருேமா நீ இப்போது சொன்னபுத்தியை நெஞ்சில் வைக்கவேண்டாம்பெண்ணே

ஞானச்சதிராள்-மிருகண்டருக்குச்சொல்-கொச்சகம்,

வைக்கவேண்டாமெனவே மதியுரைக்குமாமுனியே
ஒக்காதவார்த்தைசொன்னு லொக்குதாயினிநமக்கு
திக்குதாணுரிந்தச் செல்வனுச்குப்பிற்காலம்
இக்குவை சொல்வார்காணேனெனக்கதனைச்சொல்வீரோ

வசனம்,

கேளும்பிராணவல்லபா இப்படிக்கு ஒவ்வாதவார்த்தை சொன்னுல் ஒவ்வுதா இந்தப்பிள்ளைக்குப்பிறகு நமக்காதரவிருக்குதா என்ன விதமாயென்னை மனந்துணிந்திருக்கச்சொன்னீர் பிராணநாதா

மிருகண்டர்-ஞானச்சதிராளுக்குச்சொல்-கொச்சகம்,

சொல்லுவேன்கேள்ஞானச் சுந்தரமாதேநம்மால்
வல்லமைகள்பேசவுண்டோ மழுவணிந்தோன்செயலிதுவே
இல்லையென்ருலிருவோரு மீசனைத்துதித்ததனுல்
எல்லையிலெப்போதுஞ்சுத னிருக்கவருள்செய்வாரோ

வசனம்,

கேளாய்மதியுள்ளமாதே வல்லமையாய்ப் பேசுதற்குநம்மாலே யாகுதா மைந்தனையளித்தசுவாமியின் செயற்படி நடக்கும்செயற்படி நடக்குமென்று நாமும் சும்மாயிருக்கலாகாது இப்பவும்விசாரத்தை விட்டுசிவத்தியானத்திலிருந்தால்மகன எப்போதுமிருக்க அருளிச்செய்குவாரொன்று நினைக்கிறேன் பெண்ணே ஞானச்சதிரே

ஞானச்சதிராள்-மிருகண்டருக்குச்சொல்-கொச்சகம்,

செய்குவாரொன்றுரைத்த செயமிருகண்டரேகேளும்,
வையகமெலாமதிக்க மைந்தன்மண்மீதிருப்பதற்கு

பொய்கையினிற்குளித்துப்பேர் புகழீசனை நோக்கி
கைகைக்குவித்துநின்றால் காக்கவருள்செய்வாரோ

வசனம்

கேளும்பிராணநாதா நீர் சொன்னதுமெய் மேலும் நாமிருவரும் பொய்கையில் நீராடிகைகளைக்குவித்துநின்றால் ஈசன் மகனைக்காப்பாரொ ன்று நானும்நினைத்தேன்பிராணநாதா

மார்க்கண்டன்-மிருகண்டருக்குச்சொல் - விருத்தம்.

அன்னையேயென்னைப்பெற்ற வையாவேநீங்களிப்போ
சொன்னசொல்லுறுதியாகத் தோற்றுதுயெந்தனுக்கும்
இந்நேரமப்படிக்கே யிருந்திட்டாலேமன்வந்து
என்னசெய்வான்சிவனிருந்துயெந்தனைக்காத்திடாரோ

வசனம்.

கேளும்எனதுதந்தையே தாயே இப்போது நீங்களிருவரும் பேசிக் கொண்டது சரியே விசாரப்படுவதினாலொன்றுமாவதில்லைஇது யெனக் கும் நல்லயோசனையா யிருக்கின்றது அப்படிக்குநீங்கள் சிவதுதிசெய்து க்கொண்டிருந்தால் எமன்வந்துஎன்னை என்னசெய்யமாட்டுவான் அப்போ தைகருத் திருக்கடவூரர் யென்னைக் காப்பாரொன்று நினைக்கிறேன் என் னையாவே

பொது-கவி.

மிருகண்டையருந்தேவியுமாய் விளங்குமுனிமார்க்கண்டருமாம்
அறிவுகொண்டுபேசுங்காலையர்நாரதமுனிவாரார்

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் இப்படியாக மிருகண்டரும் ஞான்ச்சதி ராளும் மார்க்கண்டனுமாகப்பேசிக்கொண்டிருக்குங்காலையில்அவர்களை க்காணும்படியாகநாரதமகாமுனிவர் வருகிறவிதங்காண்க.

நாரதர்வருகிற-தரு-இ-ம்-புன்னாகவராளி - ஆதிதாளம்.

பல்லவி

தபமேபுரிநாரதமாமுனிவந்தார் - பாணருளபல
தபமேபுரிநாரதமாமுனிவந்தார்

அநுபல்லவி.

சுபலலிதமுடைய தூயமிருகண்டையர்
தோகையாள்புலம்ப லாகையாலுமெள்ள (தபமே)

சரணங்கள்

சுந்தரவரிப்புலி தோலதுதளத — ளொன்ன
சோதியுடையதொங்கல் மேலதுபளப — ளொன்ன
சந்திரகாந்தியுள்ளசடைகளுமொளமொ — ளொன்ன
வெள்ளிப்பாதக்குறடெங்கும்விதிட்டுத் — துன்னவே(தபமே)

வின் னுபன் னுலகெங்கும்ஆரடா வென்னலே
சள்ளயத்தொருபாரஞ்சகலரு மென்னவே (தபமே)
பெயயினிலெங்குமிக வெண்ணீ றிலங்க
விஸ்தாரமானமுன் னூல் மார்பினிற் மூங்க
லைதுயல்வல்லிடமன்ந் தானது கலங்க (தபமே)

நாரதர்-மிருகண்டர்-சீஷர்களுக்குச்சொல்- சந்தவிருத்தம்.

அப்பாமிருகண்டையர் தொண்டர்களே
அப்பாநீங்களாசிரமம்போய்
அப்பாமுனிநாரதர்வந்தாரொன்
றப்பர்சொல்வீர திவேகமதாய்

சீஷர் - மிருகண்டருக்குச்சொல் - சந்தவிருத்தம்.

ஐயாமிருகண்டையா சரணம்
ஐயாமுனிநாரதரும்வந்தார்
ஐயாதேவர்க்கறிவியென்றார்
ஐயாதுய்யா அறிவீரறிவீரே

மிருகண்டர் - ஞானச்சதிராளுக்குச்சொல்-சந்தவிருத்தம்.

அனமேநம்பாலருமையதாக
அனமேதபநாரதர்வந்தனராம்
அனமேநாம்போ யவரைக்கண்டு
அனமேவருவோ மழகாய்வாராய்

மிருகண்டர் - ஞானச்சதிராள் - இருவரும்

நாரதருக்குச்சொல்- சந்தவிருத்தம்.

சரணஞ்சோதி சொரூபாசரணம்
சரணமாதி முதலேசரணம்
சரணமினிதாய் வந்தீர்சரணம்
சரணம்நாதா வுனையுஞ்சரணம்

மார்க்கண்டன்-நாரதருக்குச்சொல்-கவி.

முத்தாசரணம் சுத்தாசரணம்
வித்தாசரணம் பெற்றேய்சரணம்

நாரதர்-மார்க்கண்டனுக்குச்சொல்- கவி.

அப்பனேயெனது ஆயுளுங்கொண்டு
செப்பமாய்வாழச் சிரஞ்சீவிசுகீபவா

நாரதர்-மிருகண்டருக்கு- ஞானச்சதிராளுக்கும்சொல்- விருத்தம்.

தவமிருகண்டரோஞானச் சதிரோதபத்தால்
சவுரியமுடனேவந்ததனையனைக்காணவந்தேன்

இவ்விடம்நான்வந்ததற்கு மிருடிகளேநீர்மெத்த
கவலையாயிருப்பதென்ன காரணமுனாசெய்வீரோ

வசனம்.

வாரும்மிருகண்டரோ ஞானச்சதிரோ நீங்கள் தபத்தைச்செய்து மகா அருமையான பிள்ளையைப்பெற்றீர் நானந்த பாலகனைப்பார்த்துப்போகலாமென்று ஆசையாக இவ்விடம்வந்தேன் நான் வந்தேனெனகிறதோநீங்கள் மகாமனக்கவலை கொண்டிருக்கிறீர்கள், அப்படி கவலைகொண்டிருப்பதென்ன, அதக்கவலையை சொல்லுங்கள் அதற்கேத்த காரணவழி சொல்லுகிறேன்.

மிருகண்டர்-நாரதருக்குச்சொல்- விருத்தம்.

கடிதினிலுரைக்கச்சொன்ன கபடமாமுனிவர்கோவே
திடமுள்ளதபத்தைச்செய்து செல்வனைவாங்கிவந்தோம்
கடவுளின்கிருபையாலே கர்ளைக்குவயதிரெட்டே
இடமிலாதாகையாலே தியங்குறோமயங்குறோமே

வசனம்.

கேளும் நாரதமகாமுனிவரே எங்களுக்குமற்றொருவிசாரமுமில்லை இந்தப்பாலகனுக்கு ஈசனாளித்த வயதுபதினாறுஞ்சரியாயிற்று ஆனல்வரப்பட்ட யெமனுக்கு என்னசொல்வது பிள்ளையைப்பிற்பாடு எப்படிகாணபது அதனால் தயங்குகின்றோஞ்சுவாமி.

நாரதர்-மிருகண்டருக்குச்சொல் - விருத்தம்

அழித்தாயசெழுதவில்லை அருந்தபத்தோரேபிள்ளை
பிழைத்ததேயுன்பேர்கொண்டபித்தனைக் காணப்போறான்
எழுத்தொன்றேசிரஞ்சீவி எந்நாளுமிருப்பான்கண்டாய்
பழித்தோருக்கிடங்கொடாமற் பாலித்துவாழ்குவீரோ

வசனம்.

கேளாய்முனிவரோஇந்தபாலகனுக்கு அற்பாயிசிராது-எழுத்தோசிரஞ்சீவியான யெழுத்தேயிருக்கும் நானுஞ் சிரஞ்சீவிவாழ்த்தல்கொடுத்தேன் இனிமேல்கர்த்தனையுங் காணப்போகிறான் உங்களுக்குக் கீர்த்தியுங் கொண்டுவருவான் பழிப்போருக் கிடங்கொடாமலிருங்கள் நமக்குச் செலவுதாருங்கள்

மிருகண்டர்-நாரதருக்குச்சொல்- விருத்தம்.

உமதுநல்லருளினலே யுயர்பாலனிருக்கவேணும்
நமனையும்வென்றேயிந்த நகர்தனிலிருக்கவேணும்
அமரர்கள்வணங்கும்நாதாவையனேமுனிவர்கோவே
எமக்கொருபுத்திசொல்லி யெழுந்திடீராசிரமத்தே

வசனம்.

நாரதபகவானே உம்முடைய திருவருளினலேஇந்தமார்க்கண்டன் ஆசிரமத்திற்குப் போயிருக்கவேண்டும் நமனையும்வெல்லவேண்டும்நகரிலு யிருக்கவேண்டும் இன்னம் எங்களுக்குப் புத்தியுரைத்து ஆசிரமத்திற்கு எழுந்தருளுஞ்சுவாமி

நாரதர்-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்.

புத்தியுமறிவுமெத்த புகழுயும்பெற்றுவாழும்
உத்தமமிருகண்டாகேளுயர்வில்மார்க் கண்டாகேளாய்
பத்தினிஞானமாதே பாவித்துவாழ்வீர்நீங்கள்
கர்த்தனைதுதிப்பீரின்னோர் காலத்தில்வருகுவேரமே

வ-ம்.வாராய்மிருகண்டனே அப்பாமார்க்கண்டா ஞானமாதே இன்னம் புத்திரகள்த்திராதிகளும் நீடூழிகாலம்வாழ்கவாழ்க இனிநீங்களிருவரும் கர்த்தனைத்துதிசெய்துகொண்டிருங்கள்போய்வருகிறேன்

மிருகண்டர்-ஞானச்சதிராள்-மார்க்கண்டன்
இம்மூவரும்-நாரதருக்குச்சொல்-வசனம்.

சரணஞ்சரணஞ் அப்படியேதேவரீர் எழுந்தருளுஞ் சுவாமி.

மிருகண்டர்-மார்க்கண்டனுக்குச்சொல்-கொச்சகம்.

பாலகனேயுன்வயது பதினாறாம்நாளிலுடன்
சூலம்படைத்தாளுந் துணாராஜனமனுமெத்த
கோலஞ்செய்தூதர்களைக் கொண்டுவருவானவனைச்
சாலவித்தையாற்செயிக்கச்சமத்துனக்குமுண்டோதான்

வ-ம். அப்பாமார்க்கண்டசெல்வனே ஆகிலும் உன்னுயுள் சரியாச்சுதானு ல் உடனே எமன்தூதாளைவிடுத்து உன்னைப்பிடித்து வரச்சொல்வானே அப்போதைக்கு அவர்களைச்செயிக்கவும் எமனைவெல்லவும் உனக்குச்சம ர்த்துண்டா சாலவித்தையுண்டா நீஜெயம்பெற்றிருப்பாயா சொல்லுமப்பா மார்க்கண்டா

மார்க்கண்டன்-மிருகண்டருக்குச்சொல்-கொச்சகம்.

இதனைப்பெரிதாயெண்ணியேங்குவரோவையாவே
விதனமதைத்தீர்ப்பேனான் மேவிவில்வமலரெடுத்து
எதுவிதத்தாலும்பந்த யீசனைக்கண்டடிபணிந்து
அதனவிதஞ்செய்யவரு மந்தகனைவெல்வேனே

வசனம்.

கேளும்என்துதந்தையேதாயே இதற்கோநீங்கள் பயப்படுவது நீங் காளாசிரமத்திற்றனேயிருந்து சிவத்தியானஞ்செய்யுங்கள் நான்போய்ஆ லயந்தோறுஞ்சுத்திகந்தவனம்புகுந்து விசித்திரமான மலர்களெடுத்துஅ ர்ச்சனைபுரிந்து ஈசனைக்கண்டு என்னைத்தொடவரப்பட்ட எமனைவெல்ல வரம்பெற்றுவருகிறேன் நீங்கள்சந்தோஷமாய் எனக்குச்செலவுகொடுத் தனுப்புமையாவே

மிருகண்டர்மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்

பண்ணினதவத்தில்வந்த பாலனமார்க்கண்டாயிந்த
அண்ணலைக்காணவுன்னா லாகுமென்றல்லோசொன்னாய்
எண்ணினும்பதினாறுகயிருக்கவேவயதுண்டாகக்
கண்ணனைக்கண்டேயந்த காலனைவென்றுவாராய்

வசனம்

கேளாயப்பா மார்க்கண்டா அப்படியே நீ ஆலயந்தோறுஞ்சுத்தின ப்படியாகிலும் அண்ணலைக்கண்டு யென்றும்பதினாறுகயிருக்கவயது பெ

ற்று எ[illegible]னைவென்று பூமியிலிருக்க விண்ணுமண்ணு மதிக்கத்தக்கதாக வரம்பெற்று வருவாயப்பா

மார்க்கண்டன் மிருகண்டருக்குச்சொல்விருத்தம்

ஆதீனம்விளங்கயீன்ற ஐயனேசரணம்பத்தா
மாதமுஞ்சுமந்துபெற்ற மாதாவேசரணமம்மா
காதகநமனைவெல்லக் கானகத்திருந்துபூத
நாதனைக்கண்டுவாரோ னலமுடனிருந்திடீரோ

வ-ம். மஹாஅருமையானதபத்தைச்செய்து என்னைப்பெற்றதந்தையேதாயேசரணஞ் சரணஞ்அந்தக்காதக நமனைவென்று உம்மிடமிருந்துவாழப் பூதநாதனைக்கண்டு வரம்பெற்றுவருகிறேன் நீங்களாசிரமத்தி லிருங்கள தந்தையேதாயே



மார்க்கண்டன் வருகிற - தரு - இ-ம்-இ[illegible]ால்ஆதிதாளம்.

பல்லவி.

இகழுமாமுனிமார்க்கண்டன்வந்தானிதோ

அநுபல்லவி.

புகழ்சேர்கடவூர் பரனைத்துதிசெய்
தகைபாப்பணியுங் குகனேபுகழ்சேர் (இகழ்)

மறையேபொருளேதெளிவாகியசீர் பரனேயகமேபரிவாய்துதிசெய்
பரிவாய்வயதேமிகவேபெருக வரமேயருளும்பரமனைத்துதிசெய்
விசுவாசமதாய்அன்னை தந்தையுமெச்சிபோற்பணியும்மிகசுந்தரமே

மார்க்கண்டன்-மலரொடுக்கிற-தரு-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்
கண்ணிகள்.

கொண்ணமலரெல்லாம்பறித்தேன்-இந்த
கோமனுக்காமெனச் சூடினேன்
வண்ணமலரெல்லாம்பறித்தேன் இந்த
வள்ளலுக்காமெனச் சூடினேன்
நிண்ணமலரெல்லாம்பறித்தேன் இந்த
நிமலனுக்காமெனச் சூடினேன்
எண்ணமலரெல்லாம்பறித்தேன் இந்த
யீசனுககாமெனச் சூடினேன்
மல்லிகைமலரெல்லாம்பறித்தேன் இந்த
மான்மழுவோனுக்குச் சூடினேன்
முல்லைமலரெல்லாம்பறித்தேன இந்த
மூர்த்திக்கேயாமெனச் சூடினேன்
நல்லமலரெல்லாம்பறித்தேன் இந்த
நாதனுக்காமெனச் சூடினேன்

மார்க்கண்டன்சொல்-கொச்சகம்,

கொண்ணமலரொடுத்துந்தன் கொண்டையினிற்சூடிநின்றேன்
வண்ணமலரெடுத்துவுந்தன் மலரடியிற்சூடிநின்றேன்
புண்ணியனேயுன்பாதம் போற்றிமலர்சூடிநின்றேன்
அண்ணலேயென்றடிபணிந்து ஆத்திமலர்சூடிநின்றேன்

வசனம்,

அரகரா திருக்கடவூரீசா கள்ளங்கவடறியேன் அறியாத புத்தியாலே என்கண்ணுககுத்தோற்றின மலரொடுத்து சாற்றினேன் அறியாத பாலகனே உமதுபாதாரவிந்தம்சேர்த்துக் கொள்ளுங் கர்த்தனே

மார்க்கண்டன்சொல்-தரு-இ-ம்-ஜம்பை

கடவூரிலமர்ந்திருக்குங்கர்த்தனேஎனக்காக
படிமீதிலென் னுயிரைப்பாலிக்கவேணும்
அன்றுமிருகண்டருக்குஅ மதலையளித்ததுபோல்
இன்றெனக்குவ மளித்துயீடேற்றவேணும்
எழையடியார்களிடர்இடர்நீக்குஞ்சோதியே
தாழ்வில்லாதிடர்நீங்கிசித்தர்க்காக்கவேணும்
சங்கராவுனைத்தொழு தேன்சண்டன்வந்தணுகாமல்
பொங்கமாயெனைக்காத்துப்புகழ்தருகவேணும்

மார்க்கண்டன்சொல்-கொச்சகம்,

வாசமலரொடுத்துந்தன்மலர்பாதங்காணயிப்போ
பாசமுடன்சூடுகிறேன்பார்வதிசமேதகனே
கூசாமலேமன்னைக்கொடுபோகவராமுன்னம்
ஈசாயெனைக்காருமெழிற்கயிலைநாயகனே

வசனம்.

அரகாரமயேசா அமூர்தகண்டீசா திரிபுரதகனா அடியேன்உமதுபா

தமேகதியென்று நம்பினேன் என்மீதில்எமன்வந்து அணுகாமுன்னம்உமது
பாதாரவிந்தஞ்சேர்த்துக்கொள்ளுங்கர்த்தனே

பொதுவிருத்தம்

இப்படிமார்க்கண்டன்று னீசனைப்பூசைசெய்து
ஒப்புடனிருக்கும்போது வுயிர்வதைசெய்யுமேமன்
சொற்படிகேட்டிருக்குஞ் சுந்தரக்கட்டியக்காரன்
மெய்ப்படியெச்சரித்து மின்னல்போல்வருகின்றனே

கட்டியக்காரன்-வருகிற-ஓடி-தரு-இ-ம்-சங்கராபரணம்,
மிசுரதாளம்,

பல்லவி

வாசற்கட்டியக்காரனனே கொலு
வாசற்கட்டியக்காரனனே

அநுபல்லவி,

தேசத்திலெனக்கிணையானசேவகருண்டோ
திக்குமுக்கிட்டோடவேயடிப்பேனெனசொல்லிரண்டும்
ராஜராஜர்கள்மெச்ச ரவுத்ராகாரங்கள்கூற
நாளுமிகவலுமைபுஜங்கள்தட்டி
நீளுஞ்சமாசிதசிங்கக்குட்டி (வாசற்)

சரணங்கள்,

அடிக்கும்பெருங்காற்றுக்குமஞ்சேன்-ஆனல்
அருங்கவிபுலவர்பால் மிஞசேன்
இடிக்கும்பெருமழைக்குத்துஞ்சேன்-சற்றும்
இணக்கமில்லாநாய்களைக்கெஞ்சேன்
துடிக்கும்மரணமுகத்திவீ விதக்கங்கள்செய்யேன்
சொந்ததாய்தந்தைமேலுந் தயவுதாட்சணியம்வையேன்
துரைகள்மகிழவெகுபணியலங்கரிப்பேன்
சிரசுமுதலுடலில்விருதுகள்தரிப்பேன்
தண்டைமடிப்பேன்-எடுப்பேன்
கட்டியம்படிப்பேன்-தொடுப்பேன்
துதிமேவுபணியாக கணிலோபர்தலைவாரி
அடித்தடித்தவரை நொடிக்குளுக்ரம்
மிகுத்தடிக்கடிபடைக்குளொப்பென (வாசற்)

காலதூதர்கள்-வருகிற-பொதுவிருத்தம்,

கோலங்கொள்தென்றிசைக்கோர் குறைவின்றிநடத்துகின்ற
நீலங்கொள்மேனியான் நெடுமுடியேமனார்தன்
வேலையிலட்டியின்றி வெகுதுரிதமாய்ச்செய்யும்
காலதூதர்கள்சபைக்குக் கடிதினில்வருகின்றரோ

மார்க்கண்டன்-சிவனைத்தோத்திரஞ்செய்கிற.

கண்ணிகள் - இ-ம்- புன்னாகவராளி - ஆதிதாளம்

அரகராசிவசிவா அமூர்த்தகண்டேஸ்வரா
அன்புடன்மலர்தேடி சூடுவேன்-சுவாமி
திரிபுரதகனுவுன் திருவடிகாணவே
தேடித்திரிந்துமலர் சூடுவேன்-சுவாமி
கரியுரிபோர்த்திடுங் கர்த்தனேயுமைபாகா
கருத்துடன்மலர்த்தேடி சூடுவேன்-சுவாமி
வரிவிழியுமையாள்தன் மணவாளாயுந்தன்
மலரடிகாணமலர் சூடுவேன்-சுவாமி
சிறுவனுனும்பிட திருவடிகாணவே
சித்தமொன்றாகிமலர் சூடுவேன்-சுவாமி
தெரியாதபேதைமை செல்வனுனும்பிட
திருவடிக்காணமலர் சூடுவேன்-சுவாமி
இருகரத்திலுமலரேந்தியேஉன்னிட
இணையடிகாணமலர் சூடுவேன்-சுவாமி
அறியாதபாலகனை ஆட்கொள்ளுமீசனே
ஆத்திமலரெடுத்து சூடுவேன்-சுவாமி

மார்க்கண்டன்சொல்-கொச்சகம்

இந்தப்பூவனம்போல்நானெந்தவனமுங்காணேன்
அந்திவண்ணனுக்கேற்றஆத்திமலரிருக்குதிங்கே
தந்திமுகவனைப்பெற்றதனியொளியுமிருக்குதிங்கே
எந்தனிடபாக்கியமோயாதொன்றுமறிகிலனே

வசனம்,

அரகரா அரகரா அரகரா அரகரா இந்தவனமே நந்தவனமோ அந்த அந்திவண்ணனே வாசமாயிருக்கப்பட்டவனமோ அவருமிதோயிருக்கிறார் அவருக்குமிகவும்அற்புதமான ஆத்திமலரும்வில்வமலருமிருக்குது ஆ-ஆ-சோதிப்பிரகாசம்போலசிவாலயமுந்தோற்றப்படுகின்றது இதைவிட அப்பால்நடப்பதென்ன இந்தயிடமே நாம்செய்த பாக்கியமானயிடம் இனியிந்த ஆத்தி வில்வம் செண்பகம் கொன்றை பாரிசாதம் இப்போர்க் கொத்தமலரொடுத்து பூத்தொடுத்து இந்தஆதிமூலப்பொருளையே அர்ச்சனைபுரிவது உத்தமம் அரகரா,

மார்க்கண்டன்சொல்-தேவாரம்,

செஞ்சடைமுடிமேல்பகிரதிபுனையுந்தேவனேதிரிபுரத்தாசே
பஞ்சுமெல்லடியாரபாகனே கடவூர்ப்ரமனேபசுபதியானே
தஞ்சமேநமனார்வந்திடாமுன் னந்தயங்கியுன்பாதத்தைநம்பி
அஞ்சலென்றடைந்தேனென்றுயர்தீர்த்து அடியனையாண்டு கொண்
[டருளே

வசனம்.

அரகராகயிலேயங்கிரிவாசா அரகராகாலகண்ட திரி நேத்திரமுடையஈ சா அரகராகங்கையைதரித்தநேசா அரகராகர்த்தனே திருக்கடவூரீசாஉன் தபத்துகளுருகிறேன்என்தபத்துக்கு ஒருவிக்கினம்வராமலென்னைக் காத்துஇரட்சிக்கவேண்டும்கர்த்தனேஅரகரா-அரகரா-அரகரா-அரகரா

அமுர்தகண்டீசுரனா-மார்க்கண்டேயர்-பூசைசெய்தல்

மார்க்கண்டன்பூசைசெய்கிற-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

தேவர்முனிவர்சித்தர்போற்றிடும்-ஸ்ரீகாசியில்வாழும்
தேவனே விஸ்வநாதலிங்கமே-ஓம்அராகரா
மூவரும்ஒருருபமானீரே-சாம்பசிவா
முதல்வனேயுன்னைப்பூசைசெய்கிறேன்-ஓம்அரகரா
மாயன்பூசைபுரியும்பாதனே திருக்கடவூர்
ஏழையர்போற்றுந்தியாகராயனே ஓம்அரகரா
இந்திரன்பூசைபுரியும்பாதனே திருக்கடவூர்
தியாகமானஅருணலிங்கமே ஓம்அராகரா
சரணமென்றுனைப்பூசைசெய்குவேன் சாம்பசிவா
தயவுவைத்தெனையாளவேணுமே ஓம்அராகரா
துதிக்கவுன்னை வினைகள்தீருமே திருக்கடவூரீசா
ஏழையர்போற்றும்அருணலிங்கமே ஓம்அராகரா
யோகமொருவடிவானயீசனே அருணகிரியில்
உண்ணாமுலைபங்காளவாசனே ஓம்அராகரா
சதைக்கயென்னைகாலன்வராமலே சாம்பசிவா
சங்கராவுன்னைப்பூசைசெய்குவேன் ஓம்அராகரா
சரணமென்றுனைப்பூசைசெய்குவேன் சாம்பசிவா
ரட்சித்தருளவேணுமையனே ஓம்அராகரா
பகவனேயுனைப்பூசைசெய்குவேன் சாம்பசிவா
பரிவுடனென்னையாளவேணுமே ஓம்அராகரா

மார்க்கண்டன்சொல்-விருத்தம்-இ-ம்-தேவாரம்

கையின்மான்மழுதரித்த காசிவாழ்கனலிங்கேசா
துய்யசெம்பாதம்போற்றி தொழுகிறேன்மனதிரங்கி
வெய்யகாலனைக்கடிந்து விரத்திக்கமனதுவந்து
பையவேயாட்கொண்டெந்தன் பணிவிடையேற்பாய்சுவாமி

வசனம்.

அரகரா கையில்மான்மழுதரித்த மயேசா அடியேன் தேவரீருடைய சிவந்தபாதத்தைத் தொழுது நின்றேன்அதற்குக்கொடியகாலனைத்துரத்தி விரத்திக்கமனதுவந்து என்னையாட்கொண்டு இரட்சியும் கர்த்தனே அரகரா அரகரா

கட்டியக்காரன்சொல்-வசனம்

அகோதெப்படியென்றால் எமதர்மராஜன் கொலுவிற்குக் காலதூதர்கள்வருகிற விதங்காண்க

தூதர்-வருகிற-தரு-இ-ம்-கலியாணி-ஆதிதாளம்

பல்லவி.

காலதூதர்நாங்களே-எம-காலதூதர்நாங்களே

அநுபல்லவி.

நீதியுள்ளயெமதர்ம்மராஜனும்
நித்தந்துதித்திடும் பத்தர்களாகிய (கால)

சரணங்கள்.

அண்டரண்டமவகண்டமெல்லாங் கைபிலடக்கித்தூக்குவோம்
அச்சமில்லாமல்நடக்குமடயனை அலாத்தாக்குவோம்
எண்டிசைபுகழுஞ் சூலத்தினாற்குத்தி
இஷ்டபடிசெய்ய கெட்டிக்காரர்நாங்கள். (கால)

காலத்துக்கொவ்வாத்பாவிகளைக்கண்டால்கடுத்துக்சொல்லுவோம்
காதகநெஞ்சம்படைத்தவரைக்கண்டால் கடுகவெல்லுவோம்
மூலமறியாதமூடர்தங்களை
மூட்டிக்கால்தூதரால் கட்டிவரச்சொல்லுவோம் (கால)

துஷ்டரைக்கண்டாலிடங்கொடுக்காமலேசூலத்தினாலிடிப்போம்
துள்ளதுள்ளக்குத்திபாசக்கயிற்றினால்தூக்கியேயிடிப்போம்
கட்டுக்கடங்காதகாலதூதர்நாங்கள்
கரலினிப்புகழேமன் வாசற்படிக்காக்கும் (கால)

கட்டியக்காரன்கூறல்-விருத்தம்.

ஒளிவுள்ளசெனங்களேகேளும்வுத்தசொற்காட்டவேண்டாம்
மொளமொளவெனறுசொல்லி முற்றிலும்பேசவேண்டாம்
சளசளவெனவுமிங்கே சக்கட்டம்படிக்கவேண்டாம்
தளமுள்ளதருமர்வாரார் சந்தடிபண்ணவேண்டாம்

இதுமது-விருத்தம்

அதிபதிவாரார்வாரார் அங்கங்குநிற்கவேண்டாம்
சதிர்மதியுளைத்தால்வெட்டி யிருதுண்டமாகச்செய்வார்
இதுசெதிசொன்னேஞ்சொன்னே மிழுத்தடித்துதப்பார்தூதர்
புதியதுதேடிக்கொண்டு பதலமாயிருந்திடீரோ

இதுமது- விருத்தம்

கூத்தினைப்பழித்தபேரைக் கொடுவந்துகழுவில்மாட்டிச்
சாத்துவோம்பாறையாலே தடையில்லேயபந்துநின்று

பார்த்துசந்தோஷங்கொண்டு பதியினுக்கேசெல்லுங்கள்
நாற்றிசைமன்னரோடும் நமனிதோவருகினருே

இதுமது- விருத்தம்

நமனிதோவாரார்வாரார் நகைத்திடாதேயிருங்கள்
சமையந்தென்றுதூதர் தள்ளுவார்நரகந்தன்னில்
அமையபேயுங்களுக்கு அவிதிகள்வருவதேனே
செமையதாயிருந்துபாருந் தென்றிசைக்கதிபர்வாரார்

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் ராஜாதிராஜனுன எமதர்மராஜன் சிங்காரக்கொலுவிற்கு வருகிறவிதங்காண்க,

எமதர்மராஜன்-கொலுவிற்குவருகிற-தரு

இ-ம்-மத்தியமாவதி-திரிபுடைதாளம்.

பல்லவி.

ராஜபோஜவிசுவாசன்வந்தானே
எமதர்மராஜன் வந்தானே

அநுபல்லவி

நேசமாகிய ராஜராஜரும்
நெருங்கிவருகவே கரங்கள்கூப்பியே
ரோஷதூதர்கள் துடிதுடிக்கவே
விநோதமுடன்கொலு வீற்றிருக்கவே (ராஜ)

சரணங்கள்.

சிரசில்நவரத்ந மகுடமின்னவே
தீபம்போற்புஜ கீர்த்திமின்னவே
தரியலர்கள்கிடு கிடென்னவே
தரணியமைச்சர்கள் சமர்த்தரென்னவே (ராஜ)

மகுடமுடியோடு மகுடமுடிபட
வலது புஜத்தொடு புஜங்கள்ளிடிபட
விருதுகொடிகளு மோங்கியடிபட
மேன்மையாகக்கொலு வீற்றிருந்திட (ராஜ)

வேதவேதியர் வேதம்புரிகவே
வீரர்கட்டியங் கூறிவருகவே
நீதியாய்தர்மம் மேலும்பெருகவே
நெடியகொலுவினி லிருந்துபார்க்கவே (ராஜ)

கட்டியர்கள்-கட்டியங்-கூறல்,

ராஜாதிராஜனே ராஜமார்த்தாண்டனே
நடுவனேதென்றிசையில்வாழ்
ராஜகெம்பீரனே பாசமுங்கைக்கொண்டு
ராச்சியத்துயினராயெல்லாம்
கூசாமலேபிடித்தவரவர்கள்செய்பாவ
குற்றத்தைநிறைப்படிக்குக்
குறைவராச்செங்கோல் இறைப்படிசெலுத்தியே
கோஷ்டமெல்லாமடக்கும்
காசாம்பூவண்ணனே கையினிற்சூலனே
கண்டனைக்கொலுவீரனே
கருங்கடாமீதேறு மறலிதேறியலர்கள்
தர்ம்மத்துக்கதிகாரனே
கேசாதிருட்டியே யாக்குதப்பட்டணங்
கீர்த்தியுடனேயாள[illegible]டிடும்
கெடிபெற்றபாசனே [illegible]பற்றகண்ணனே
கெம்பீர மார்த்தா[illegible]

எமதர்மராஜன்-கொலுவிருந்து-கடவுளைத்துதித்தல்

விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி,

தருமமேதருமமிந்தத் தாரணிதழைக்கவேணும்
தருமமும்மாரிபெய்து சதாகாலம்வாழ்க்கவேணும்
தருமமாமெனதுசெங்கோ[illegible] தாழ்வில்லாதிருக்கவேணும்
தருமமேபெருகவேணுஞ் சங்கராபோற்றிபோற்றி

எமதர்மராஜன்-லோகவிசாரணை

சீரணியுமெமபுரக்கொலுவதினிலெல்லோருஞ் சேர்ந்திருக்கின்றார்களா

தூதர்-சொல்லல்.

இராமுள்ளசண்டப்பிரசண்டனே யெல்லோருந் திகழ்சபைதனில்நிறைந் [தார்

இராஜன்-கேட்கல்.

வொழுகுபரமாதர்காமுகத்துரோசருக் கெமதண்டனைநடக்குதா

தூதர்-சொல்லல்.

எப்போதுமெப்படியப்படியேதண்டனை யியலாகநடக்குதையா

இராஜன்-கேட்கல்.

அவனிதனிலுள்ளோர்கள்புண்யமதையெப்போதும் அகமகிழசெய்தார்க [ளா

தூதர்-சொல்லல்

ஆமதற்கொருகுறைவுமில்லாமற்சிலதுபேர் அப்படியேசெய்கிறார்கள்

இராஜன்-கேட்கல்.

பவமதுபுரிந்தபேர்பாழுநரகக்குழியில் பாதவித்திருக்கிறார்களா

தூதர்-சொல்லல்

பணிந்துசொல்வேன்கேளு மறலியேயந்தவிதப்பதிகுலைந்தலைகிறார்கள்

இராஜன்-கேட்கல்,

பஞ்சமாபாதகர்களக்கினஸ்தம்பத்தைப் பற்றித்தழுவுகின்றார்களா

தூதர்-சொல்லல்

பாவபுண்ணியமுமறிந்துபின்ஸ்தம்பத்தைப்பற்றியவர்தழுகிறார்கள்

இராஜன்கேட்கல்,

வஞ்சகஞ்செய்தவரைக்கிங்கிலியர்கரும்பாம்பின்வாய்க்கிரைகொடுக்கிறாரா

தூதர்-சொல்லல்,

வரிசைபெறுமந்தகாகிங்கிலியர் கரும்பாம்பின்வாய்க்கிரைகொடுகிறார்கள்

இராஜன்-கேட்கல்

சூதுசெய்பாதகரைமந்திரித்தூதர்கள் சூலங்கொண்டிருக்கிறாரா

தூதர்சொல்லல்

சொல்லொணாப்புகழ்பெற்றகாலரே அந்தடிசுருண்டுவிழஅடிக்கிறார்கள்

இராஜன்கேட்கல்,

நீதிதவிர்கொலையாளர்தங்களைச்செக்கினிலிருத்தியே வதைக்கிறாரா

தூதர்-சொல்லல்

நிலைவழுவாதயெமதர்மரேயவா[illegible]ளாய்ச்சிதைக்கிறார்கள்

இராஜன்கேட்கல்

இன்னமதாக்கினையிலகப்பட்ட பாவிகளிருக்கிறாரோயில்லையோ

தூதர்சொல்லல்.

இப்பதான்கொடுவந்தபொல்லாததோஷிகளிதோயிருவர்நிற்கிறார்கள்

இராஜன்கேட்கல்,

என்னபாவங்களைச்செய்த பேரிருவர்களுமெனக்கறியவுரைத்திடுவீர்,

தூதர்சொல்லல்,

இறைவனேயிவன்குருத்ரோகியிவன் றுயானாயிகழ்ச்சிபேசினவனையா

இராஜன்-தூதருக்குச்சொல்-விருத்தம்

குருவுக்குத்துரோகஞ்செய்த கொடியபாதகனைவாட்டி
நரகத்திற்றள்ளுமிந்த நாயையென்முன்வையாதே
பிரியமாய்ப்பிள்ளைவேண்டி பெற்றாளைவைதோன்றன்னை
முரியனையக்கினிதன்னில்மோதுவீர்மோதுவீரே

வசனம்,

அடா அடா யெமகாதகிங்கிலியரே அடாநாம் இதுவரைக்கும் எமதெண்டனை பண்ணிவந்தோம் இந்நாள்வரைக்கும் குருத்துரோகி வந்தானென்கிற சொல்லில்லை ஆகையால்குருவுக்குத்துரோகம்பண்ணிகுருவைப் பழித்தபடுபாவியைக் கொண்டுபோய் பொல்லாதவதைவதைத்து நரகத்தில்தள்ளிப்போடுங்கள் - ஆகா - ஆகா - ஆகா - மகாபிரியமாய்ப்பெ

றருவளர்த்ததாயைவதை இந்ததோஷியைக் கொண்டுபோய் அக்கினிஸ்த ம்பத்திலே மோதிவாருங்கள் அந்தமூரியனை என் முன்னில்வைக்க வே ண்டாம் கொண்டுபோங்கள்கால தூதர்களே

கிங்கிலியர்சொல்-தரு-இ-ம்-புன்னாகவராளி-அட தாளம்,

குருவைப்பழித்தகொடியபாதகன்றனைக
 குத்திதள்ளடாதள்ளுகிங்கிலியர்இப்போ
நத்திபெத்தென்கிருன் கிங்கிலியா
 ராஜனுத்தாரப்படி நரகத்தினில்தள்ளடா
யெத்தானகூனு கிங்கிலியா
 கொடியபாதகஞ்செய்து குற்றத்திலகப்பட்ட
கூகையைச்சூலங்கொண்டிடியடா இந்தச்
 சோகையைத்தடியாலே யடியடா நல்ல
தாகட்டுங்கருந்தேளை பேகிட்டிக்கடித்தபின்
 ஆகாநரகத்தில் தள்ளடா
பெற்றதாய்தந்தையைப்பிரங்கழியாய்ப்பேசும்
 பேயனை அக்கினி[illegible]தம்பத்தில் ராசன்
வாயாலுரைத்தி[illegible]மத்தில்
 உபாயமாகப்பா[illegible]கடிக்கவிட்டு
நீயும்அக்கினிதன்னி[illegible]மோதடா
 வாயழியாய்ப்பேசும் மாபாவங்கண்டோனை
வதைக்குஞ்சூலங்கொண்டிடியடா இவனைச்
 சதைக்கும்வளைதடியா லடியடாஇன்னும்
உதையுங்குத்துமாக உதைமேலுதையுதைத்து
 பருத்தஅக்கினிதன்னில்மோதடா

கிங்கிலியர்-இராஜனுக்குச்சொல்-விருத்தம்

கொலுவினிலிருக்குமன்ன குருவுக்குதுரோகஞ்செய்த
நலமிகுந்தோஷந்தன்னை நரகத்திற்றள்ளிவிட்டோம்
நிலையுள்ளதாயைவதை நிஷ்டூரபாவிதன்னை
கொலைபுரியக்கினி[illegible]ன்னிற் கொண்டுபோய்மோதிவந்தோம்

வசனம்,

சரணஞ்சரணம்ராஜப[illegible]மேஸ்வராகுருவுக்குதுரோ[illegible]ஞ்செய்து குரு வைபழித்தபடுபாவியைக்கொண்டு போய்பொல்லாதவதைவதைத்துநரக த்தில் றள்ளிவிட்டோம்தானென்று கெருவங்கொண்டு தாயைவதைதோ ஷியைக்கொண்டுபோய்பொல்லாத சித்திரவதைசெய்து அக்கினிஸ்தம்ப த்திலே மோதிவந்தோம்மகாராஜனே

இராசன்-தூதருக்குச்சொல்-விருத்தம்

ஆரடாதூதரோகே ளடங்காதபாவியான
போடாபாசத்தாலேபிடித்திங்கேகொடுவந்தீரா

கூரடாயெந்தன்முன்னே கொடுவந்துவிட்டாயிப்போ
பாரடாயெனதுசெங்கோற்படிமுறைசெலுத்துவேனே

வசனம்.

ஆரடாஅடாகாலதூதர்களே இன்னம எங்கெந்தப் பாவிகளைக்கொண்டுவந்து வைத்திருக்கிறீர்களோ அவர்களையென்முனபாகக்கொண்டுவந்துவிடுங்கள் எனதுசெங்கோற்படி செலுத்துகிறேன்காலதூதர்களே

இங்கிலியர் இராசனுக்குச்சொல் விருத்தம்

இடமுள்ளநமனேயிந்தத்திருடனை பாரிவன்றன்
வடிவுளபிராமணன்றன் மனவியைகைபிடித்தோன்
நடுவனேயிவனைப்பாரீர் நானென்றுகெர்வங்கொண்டோன்
மடிமோசஞ்செய்தோன்மெத்தமா பாவியிவன்றானையா

வசனம்.

கேளும்எமதர்மராசனே இவனேபிராமணஸ்திரீயைக்கைப்பிடித்தவன் இவனேஉண்டவீட்டில் ரெண்டகம்நினைத்தவன் கெருவங் கொண்டவன் காதகநெஞ்சத்தைப்படைத்தவன இவன்மார்பிலெங்கும்நாமத்தைப்பார்த்தீராசுவாமி

இராசன்-தூதருக்கு[illegible]விருத்தம்.

தேசிகப்பெண்தோஷத்தில் சிக்கின[illegible]வி தன்னை
ஊசியில்நிருத்தித்தேளை உடம்பெலாம்விடுத்துக்கொல்வீர்
கேசரியாகானென்று கெருவத்தையடைந்தோர் தன்தன்னை
வாசியிற்செதுக்கிப்பாம்பின் வாய்க்கிரைகொடுத்திடீரோ

வசனம்,

ஆரடாஅடா எமகாதகிங்கிலியரே அடாஇந்தபிராமண தோஷத்திலகப்பட்டவனைத் தள்ளிகொண்டுபோய்ஊசிமுனையில்நிருத்தி கருந்தேளைக்கடிக்கவிட்டுவதைசெய்யுங்கள் மேலும்ஒருவரை மதியாதமூடப்பெட்டிமகனைக்கொண்டுபோய் தரையில்தள்ளிவாசிகொண்டு செதுக்கிகாக்கைக்கிரையிட்டுபின்னும் வதைசெய்து பாம்பின்வாய்க்கிரை கொடுத்துவாருங்கள் கொண்டுபோங்கள் காலதூதர்களே

தூதர்சொல்-தரு-இ-ம்-புன்னுகவ[illegible]-ஆதிதாளம்

இறைவனுத்தரப்படி யிவன்றனைப்பிடியடா கில்லியா இவனை
இறுக்கடாவுருக்கடாபெருககாமல்நருக்கடா கில்லியா
மறையவன்பதிக்காகவதைசெய்துவிடுகுவோம் கில்லியா இவனை
மடக்கடா அடக்கடாபிடிக்குள்ளேயொடுக்கடா கில்லியா
மோசமதாகயிவன் முதுகினில்மாரடா கில்லியா இவனை
முளிக்கிற விளிக்கிற ஞெளிக்கவேவனைக்கிறன் கில்லியா
ஊசிமுனையிற்குத்தி தேளைவிடடாஅடா கில்லியா தோலை

உரிபடா விரியடா பிரியமாயுரியடா இல்லியா
அவனிமன்னவன்சொன்ன ஆக்கினைப்படியடா இல்லியா இவனை
அடியடா கடியடா மடையனைப்பிடியடா இல்லியா
எவனும் நமக்கீடில்லையென்று சொல்லிநகைக்கிறான் இல்லியா இவனை
இடியடா பொடிபட கொடிவழிநடவடா இல்லியா
நரகிலிவனைத்தள்ளி நருக்கடா நொருக்கடா இல்லியா எட்டி
நடக்கிறான் முடுக்கிறான விடுக்காமற்பிடியடா இல்லியா
வாசியாலேயிவனை வரிசையாய்ச்செதுக்கடா இல்லியா பாம்பின்
வாய்க்கிரையாகயிப்போ போக்கியேயெறியடா இல்லியா

கிங்கிலியர்-இராஜனுக்குச்சொல்-விருத்தம்

சண்டனேவேதியர்க்குச் சர்ப்பனைசெய்தோன்றன்னை
கொண்டுபோயூசிதன்னிற் குத்தியேதேளைவிட்டோ
மிண்டனுயகெருவங்கொண்ட வீணனைவாசிகொண்டு
துண்டஞ்செய்பாம்பினவாய்க்குத் தொகுத்திரைகொடுத்துவந்தோ

வசனம்,

சரணஞ் சரணம் இராஜபரமேஸ்வரா வேதியஸ்திரிபாதகத்திலகப்பட்டவனைக்கொண்டுபோ... ஊசியிற்குத்திவனைதத்தோம்நாமென்றுகெருவங்கொண்ட முறியனை... போய் வாசியிற்செதுக்கிப்பாமபின்வாய்க்கிரைகொடுத்துவந்தோம் சுவாமி

இராஜன்-தூதருக்குச்சொல்-கவி,

வர்னப்பல்லொளிதூதர்களே வந்தபாவிகள்தான்போக
இன்னம்பாவிகள்தானுண்டோ யியம்புமியம்புமெந்தனுக்கே

தூதர்-சொல்-கவி

தருமமெங்குமுறைசெலு...துஞ்சண்டாளபாபிகள்தான்போக
கருமவினைக்குளகப்பட்ட கபடர்தானுமிலைமன்னு

மற்றொரு-தூதன்-இராஜனுக்குச்சொல்-கவி,

மன்னவர்வணங்குமன்னவனே மகாபாதகஞ்செய்தவர்கள்
இன்னமுலகிலில்லையையா இறைவாசரணமன்னவனே

இராஜன்-தூதருக்குச்சொல்-பரணி,

ஆரடாகாலதூதர்களே அதிசீக்கிரமதாய்சென்று
சீருடனமதுகணக்கெழுதுஞ் சித்திராபுத்திரனையழைப்பீரோ

தூதர்-சித்திராபுத்திரருக்குச்சொல்-பரணி,

பகுத்துப்பகுத்துக்கணக்கெழுதும் பாக்கியமுள்ளகருணிகனே
வகுத்தநமனுமுனையழைத்தார்வருவீர் நொடியில்வருவீரோ

சித்திராபுத்ரன் தூதருக்குச்சொல்-பரணி

நம்மையாளுமெமதர்மராஜனழைத்தபோதேநான்
செம்மையாகவேவருவேன்சேர்ந்துவாரீர்தூதர்களே

சித்ராபுத்ரன்வருகிற-தரு-இ-ம்-சங்கராபரணம்-மிசுர தாளம்

பல்லவி,

ஊருக்குநானே கணக்க் பிள்ளை-மற்றப்
பேரெல்லாம அணிப்பிள்ளை கீரிப் பிள்ளை

அநுபல்லவி

தேருக்குளிருக்கின்ற சித்திரமெல்லாமெந்தன்
சித்தத்தில்நிர்மிக்குஞ் சித்திராபுத்ரனனே (ஊருக்கு)

சரணங்கள்,

கட்டோலையக்கட்டி யிரப்பிலேபாய்ச்சுவேன்
கண்டபடியெல்லாம் கணக்கைக்கைப்பிரட்டுவேன்
சட்டமாகபிறப்பவர் பிறப்பவர்தங்சளைச்
சாதிக்கவல்லவன் சோதிக்கநல்லவன் (ஊருக்கு)

கையெழுத்தாணியை மெய்யாய்ச்சுருட்டுவேன்
கணக்காகச்சொல்லுவோர் கருத்தைப்பிரட்டுவேன்
வையகந்தனிலெங்கும் வளர்ந்திடுஞ்செந்நெல்கள்
மாறிவரும்போது கூறித்துப்கைதப்பே (ஊருக்கு)

வந்ததொகையிதென்று வழிதனைச்சொல்லமாட்டேன்
வாய்பேச்சைப்பிடுங்கி வழக்கில்விட்டுவிடுவேன்
தந்த்ரயிந்த்ரசால சமர்தெல்லாஞ்செய்திடுவேன்
சாகுமபோசு தன்னை மாற்றிடுவேன் (ஊருக்கு)

சித்திராபுத்ரன்-இராஜனுக்குசொல்-விருத்தம்,

நானிலமெங்குங்கீர்த்தி நலமுடன்பெற்றலோலா
தானசம்பத்திற்கீர்த்தி சம்பத்தாய்வாழ்விசாலா
சேனையோடிருந்துகீர்த்தி செங்கோலும்படைத்தலீலா
எனையாவெனையழைத்தசேதி யியம்புந்தென்றிசையிற்காலா

வசனம்

சரணஞ்சரணமையா எமதர்மராஜனே என்னையழைப்பித்த காரி[illegible]ம்அருளிச்செய்யுமையா சுவாமி

இராஜன்-கணக்கப்பிள்ளைக்கு[illegible]ல்-விருத்தம்,

வானுள்ளோர்கணக்குமிந்த வையகத்தோர்கணக்கும்
நான றிந்திடவேவேணும் நன்றிசேர்கடவூர்தன்னில்
ஞானமார்க்கண்டனுக்கு நாட்சென்றகணக்குமிப்போ
மானியாய்ப்பார்த்துரைப்பாய் மதியுள்ளகணக்கனே

வசனம்.

கேளும் கருணிக வமிசாதிபதியான சித்திரா புத்ரனே இந்த வானுள்ளோர் கணக்கும் அந்த வய்யகத்தோர் கணக்கும் இன்னம் மற்றமு

ள்ள பேருடையகணக்கும் திருக்கடவூரிலிருக்கு மிருகண்டையருடைய குமாரனான மார்க்கண்டனுக்கு வயதுசரியானகணக்கும் நானறியவேணும் ஆகையால் சிக்கிரமத்துக்குக் கணக்கையெடுத்துப் பார்த்துச் சொல்லுஞ் சித்ராபுத்ரனே

சித்ராபுத்ரன்-இராஜனுக்குச்சொல்-கவி.

கண்டிதமுடனேகணக்கையும்பார்த்து
சண்டனேசொல்வேன்சமர்த்தைப்பாரும்

சித்ராபுத்திரன்சொல்-வசனம்,

ஆரடாஅடாசுடுமூஞ்சி சுண்டங்கா கணக்குக்கட்டையெடுத்துக்கொண்டுவாரும்பிள்ளாய் (அப்படியேயெடுத்துவந்தேனையா)

சித்ராபுத்ரன்-கணக்குப்பார்க்கிற-வசனம்,

பார் பார் பள்ளத்தார்கணக்கு இது தீர் தீர் திண்டிவனத்தார் கணக்கு இது கூர் கூர் குடிசைபாளயத்தார் கணக்கு இது ஆர் ஆர் ஆண்டிகுப்பம் அக்காளவோழிகணக்கு இது வர் வர் எழும்பூர்தடியன் கணக்கு இது ஓர் ஓர் ஒட்டர்கணக்கு இதுமார் மார் மறவர்கணக்கு இது வீர்வீர் வேசிகள்கணக்கு இது கோர் கோர் குயவன் கணக்கு இது சீர் சீர் ஜெய மார்க்கண்டன்கணக்கு இது சுவாமி

சித்ராபுத்ரன்-இராஜனுக்குச்சொல்-விருத்தம்

காலனேவாராயிந்த கணக்கையும்பாராயந்த
பாலன்மார்க்கண்டனுக்குப் பதினாறுவயதுமாச்சு
கோலமாநீறுபூசி குறுந்தடிபிடித்துநிற்கும்
காலதூதனைவிடுத்துக் கட்டியேவரச்செய்வீரோ

வசனம்.

கேளுமையா எமதர்மராசனே இதுவரையிலும் பார்த்த கணக்கில் யாருமகப்படவில்லை திருக்கடவூரிலிருக்கும் மிருகண்டருடைய குமாரனான மார்க்கண்டன் அகப்பட்டான் நமதுகாலதூதனை விடுத்து கட்டிக்கொண்டு வரச்சொல்லும் மற்றகணக்கு நாளைக்குப்பார்த்துச் சொல்லுறேன் மகாராஜனே

இராஜன்-தூதர்களுக்குச்சொல்-விருத்தம்,

தூதரோகேளீர்சேளீர் சோலைசூழ்கடவூர்தன்னில்
நீதன்மார்க்கண்டன்றானும் நிமலனைப்பூசைசெய்வான்
சோதனைப்பார்த்துநீங்கள் துணிந்தவன்றன்னைக்காட்டி
காதலாய்நமதுமுன்னே கடுகெனக்கொண்டுவாரீர்

வசனம்

ஆரடா அடாகாலதூதர்களே (சுவாமி) திருக்கடவூரிலிருக்கும் மிருகண்டருடையகுமாரனான மார்க்கண்டன் ஆலயத்தில்சிவாலயத்தி

னருகே சிவபூசைசெய்துக்கொண்டிருக்கிறான் அவன்பூசைக்கு அஞ்சி நீங்கள்பயப்படாமல் பாசத்தினாலேகட்டி சூலத்தினாலே குத்திக்கொண்டு நமதுயமபுரத்துக்குக் கொண்டுவாருங்கள் காலதூதர்களே

தூதர்-இராஜனுக்குச்சொல்-கவி

அப்படியேபோய் எப்படியாகிலும்
கைப்பிடியாய்க்கொண் டிப்பவேவாரோம்.

தூதர்சொல்-தரு.

ராஜனுத்தாரப்படி ரோஷமுடனடந்து வாடா
அடாதூதா-வண்டா-பூதா
நாமெல்லோருங்குதித்து நடப்போம்
நாசகாலத்தூதனே தூசியெழும்பிடவே வாடா
அடடாகாடா-வண்டா-மூடா
நாடுங்கிடுகிடென்ன நடப்போம்
வாசிப்பல்லழகாரீ நேசச்சில்லாக்கோலேந்தி வாடா
அடாகுள்ளா-வண்டா-கள்ளா.
வாழுமார்க்கண்டனிட நடப்போம்
பாசக்கயிறெடுத்து வீசிப்பிடிப்போமெள்ள வாடா
அடடாகாக்கா-வ்ண்டா-மூக்கா
பருத்தமீசைமுறுக்கி நடப்போம்

தூதர்சொல்-விருத்தம்.

மதங்களாய்ப்போறவண்ண மார்களேகூட்டியொன்று
பதமுனிமைக்கண்டிட்டாற் பதுங்கியேகொள்வான்மேலும்
ஒதுங்கியேவலகுவெடுத்து வுரத்தசொற்காட்டாமற்றான்
பதுங்கியேபோனோமானா பாலனைப்பிடிக்கலாமே

வசனம்.

வாருங்களண்ணமாரே நாமிப்படிக்குச்சந்தடியாய்ப்போனோமானால் அந்தமார்க்கண்டன எங்கேயாகிலுமிருந்துநம்மைப்பார்த்துப் பதுங்கிக்கொள்ளுவான் பிறகுஅகப்படமாட்டான ஆகையால்சந்தடி பண்ணாமல் நாலுபக்கமும்பதுங்கிடவுங்களண்ணமாரே

மார்க்கண்டன்சொல்-வசனம்.

அரகரா அரகரா அரகரா அரகரா திருக்கடவூரீசா திரிபுரதகனா சிவகுருநாதா அடியேனைத் தூதர்வந்தணுகாமுன்னம் உமதுபாதாரவிந்தஞ் சேரவேணுங்கர்த்தனே

மார்க்கண்டன்சொல்-தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

திருக்கடவூரானே-சந்திர-சேகரனேநந்திவாகனனே
உருக்கமதுடையோனே எனக்காக உல்லாசனேவெகுவில்லாசனே

அமூர்த்தகண்டேஸ்வரனே அன்பனா ஆண்டவனேசபைதாண்டவனே
அமரர்கள்துதிப்போனே ஏழைமுன் வருவோனேவரந்தருவோனே
சினமுற்றுவாரானே காலனுந் தேடுவானேயெனை நாடுவானே
உனைநிதம்நம்பினேனே எனக்காக உத்தமனேகிருபைவைத்தவனே
எனைக்கொடுபோவானே நமனினி யீஸ்வரனே மயேஸ்வரனே
கனமதுகொள்வோனே யினியெனைக் காப்போனேபாதஞ்சேர்ப்போனே

தூதர் சொல்-விருத்தம்,

சீரானஅண்ணமாரே சிவபூசையோசைகேளீர்
நேராகவந்துநின்று நிலைக்கவேயாலோசித்து
பூராயமாகயிந்தப் புதரினில்நுழைந்துபார்த்து
பாராளுந்தருமர்சொன்ன பாலனைப்பிடிக்கலாமே

வசனம்,

வாருங்களண்ணமாரே சேருங்கள் ஒன்றாய்ச்சேருங்கள் சிவபூசையின் ஓசைஅடிபடுகுது கேளுங்கள்நேராகஇந்தப்புதரில் நுழைந்துபாருங்கள் அகப்படுவான் அண்ணமாரே

தூதர் சொல்-விருத்தம்,

கோடாலிப்பல்லாவாடா கொள்ளிக்கண்தூதாவாடா
ஆடாதகூத்தையாடு மழுகூன்முதுகாவாடா
மோட்டானமூக்காவாடா முட்டிக்கால்பூதாவாடா
வாடாதவலுமைபெற்ற மார்க்கண்டனிவனேபாராய்

வசனம்,

கோடாலிப்பல்லா கொள்ளிகண்தூதா கூன்முதுகா குருங்கால்பூதா கோட்டுவாயா மூடுகண்ணு நமதுமகாராஜன்சொன்ன மார்க்கண்டன் இவன்தானு பாருங்கள் அவன் தான்போலத் தோற்றப்படுகின்றனு நன்றாய்ப் பாருங்கள்ஒன்றாய்ச்சேருங்கள்

தூதர் சொல்-விருத்தம்,

தென்றிசைக்கதிபன்சொன்ன சிவாலயமிருக்குதிங்கே
அன்புடன்பூசைவேளை யானுக்குச்செல்லுதிங்கே
இன்னம்வேறில்லைமைந்த னிவனேமார்க்கண்டன்கண்டாய்
மன்னவனழைத்தானென்று வாக்கினாலழைத்திடீரோ

வசனம்

கேளுங்களண்ணமாரகளே மகாராசன்சொன்ன மார்க்கண்டனிவன்தானுபாருங்கள் சிவாலயமுமிருக்குது சிவபூசையும் நடக்குது இவனுஞ் சிறுபிள்ளையாயிருக்கிறான் சமுசயமில்லை மார்க்கண்டன் இவன்தான் அழைத்துப்பாருங்கள் அண்ணமார்களே

தூதர்-மார்க்கண்டனுக்குச்சொல் விருத்தம்,

ஈசனைப்பூசைசெய்வ திருகட்டுமுனிமார்க்கண்டா
ராஜபூபதியோனான நமனுமேயுன்னைக்கண்டால்

நேசமாய்த்திடமுனைத்து நிமிஷத்திலழைத்துக்கொண்டு
பாசமாய்வரவேசொன்னர் பாலனேவருகுவாயே

வசனம்,

வாருமப்பாமார்க்கண்டா நீசிவபூசைசெய்வதிருக்கட்டும் எங்களை மதர்மராஜன் உன்னைப் பிரியத்தோ டழைத்து வரச்சொன்னர் கேட்டு வருவாய் வாருமப்பா

மார்க்கண்டன்-சிவனுக்குச்சொல் கலிப்பா

வந்தழைத்தாரெமதூதர் வானோர்பிரானெந்தன்
சிந்தையிலெண்ணியிப்போ செய்ததொருகுற்றமெல்லாம்
மூந்தியேமனம்பொருத்து மூத்திதரும்பொற்பதனே
எந்தனைக்காத்தருளும ஈஸ்வரமயேஸ்வரனே

வசனம்,

அரகரா மகாதேவாஎமதூதர்வந்து பாசசூலங்காட்டி யழைக்கிரார்கள் என்னைப்பிடியாமுன்னமே உமதுபாதாரவிந்தஞ்சேர்த்துக்கொள்ளுங்கர்த்தனே

சிவன்-மார்க்கண்டனுக்குச்சொல்-கொச்சகம்

அஞ்சாதேயஞ்சாதேயனை முகநரியச்சொன்னேன்
மிஞ்சிடாரெமதூதர்மிகவுன்ச்சேரார்கண்டாய்
நெஞ்சினில்நமத்துதித்து நின்றுநீபூஜசெய்தால்
பஞ்சதுபோர்பரப்பான் பாலனேநீயஞ்சாதே

வசனம்.

வாராயப்பா மார்க்கண்டசெல்வமே வந்திருக்கிறதூதர்கள் உன்னிட்டவந்து அண்டுவார்களா அண்டமாட்டார்கள் இதோநான்யானை முகநரியச்சொன்னேன் உன்னைக்காட்டிதொடுப்ப இல்லைநீசுகமாய்ப்பூசையிலிரு வந்ததூதனைபோகச்சொல்லுவாயப்பா

மார்க்கண்டன்தூதருக்குச்சொல்-விருத்தம்

தப்பிதமில்லையேதருமருமழைத்தசேதி
எப்படிவருவேனிப்போ எந்தனையாட்கொண்டாளும்
அப்பனிசடையோனுக்கு மாதிகாலத்துப்பூஜை
செப்பமாய்நடக்குதென்று சேதிபோய்ச்சொல்லுவீரோ

வசனம்,

கேளுங்கள்கால்தூதர்களே உங்கள்மகாராஜனழைத்துவரச் சொன்னதுசரியே இன்நேரம்சிவனுக்குப்பூசை [illegible] பனபடியினுலேஎப்படிவருவன் வரக்கூடாதென்றுபோய் சொல்லுங்கள்தூதர்களே

மார்க்கண்டனுக்கும் தூதருக்கும் தர்க்கம்

தரு-இ-ம்-கௌளிபந்துஆதிதாளம்

தூதர்-சொல்லல்

சொல்லிடவோயித்தனைத்தூரமதுவந்தது
தூதரும்நாங்களடா மார்க்கண்டா

மார்க்கண்டன்சொல்லல்

தூதராகாலென்னடா நாதர்பூசைவிடச்
சொன்னவனாரடா தூதர்களே

தூதர்சொல்லல்,

வல்லமைபேசவா வந்தது கெட்டியா
வாரதேயில்லையோடா மார்க்கண்டா

மார்க்கண்டன் சொல்லல்

வாரதேயில்லையென்று மன்னனோடுரையுங்கள்
மட்டில்லாவார்த்தையேன் தூதர்களே

தூதர்சொல்லல்,

உலகினிலிப்படி யுத்தரஞ்சொன்னபேர்
ஒருவருங்காண்கிலேன் மாக்கண்டா

மார்க்கண்டன்சொல்லல்

ஒருவர்சொல்லென்னடா உற்றதைச்சொல்லினேன்
உங்களாலாவதென்ன தூதர்களே

தூதர்சொல்லல்,

கொல்லவும்நாங்களே யுன்னைக்குத்தவும்நாங்களே
கொண்டுபோய்விடுவமடா மார்க்கண்டா

மார்க்கண்டன்சொல்லல்.

கொண்டுபோய்விடுவது பெண்டுகள்பேச்சடா
குற்றமதுசிக்குவீர் தூதர்களே

தூதர்-மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்

குற்றமாவதுதானென்ன குணங்கெட்டுப்பேசவேண்டாம்
இத்தனையாணுவங்கொண் டிருப்பதுநன்மையெல்ல
பித்தனேபிடித்துவுன்னைப் பின்கட்டாய்கட்டியிப்போ
குத்துவோஞ்சூலத்தாலே குணமுடன்வருகுவாயே

வசனம்.

அடாவாடாமார்க்கண்டா ஈசனைச்சேர்ந்திருக்கிறோமென்கிறகெருவத்தினாலே இப்போக்கொத்தஆங்காரம் படைத்துமதோன்மத்தனாகப்பேசுகிற உன்னுணுவத்தையடக்கி எங்கள்பாசக்கயிற்றினாலே கட்டிசூலத்தினாலேகுத்தி எங்கள்ய[illegible]த்திற்குக் கொண்டுபோவோம் பாரடா மார்க்கண்டா

மார்க்கண்டன்-தூதருக்குச்சொல்-விருத்தம்

வாரதேயில்லையென்னை மடக்கியேகுத்திக்கெட்டீர்
வாரதேயில்லையந்த மாலிதான்கெட்டான்போடா
வாரதேயில்லைநீங்கள் மடிவதுசித்தங்கண்டீர்
வாரதேயில்லையென்று மன்னனுக்குரைசெய்வீரே

வசனம்

கேளுங்கள் காலதூதர்களே பூனைக்குப்புலிபஞ்சுமர் பொருளுக்கு
பூஷணமஞ்சுமா அதுபோல் நீங்களென்னைப்பிடித்தூக்கெட்டீர்கள்
ங்களையனுப்பினானே அந்தஎமன் அவனுங்கூடக்கெட்டான் கண்டாய்நீ
ங்கள்மாத்திரம் தப்பிப்பிழைத்தோடிப்போங்கள் காலதூதர்களே

தூதர்சொல்-தரு-இ-ம்-ஆஹிரி-ஆதிதாளம்

பாரடாகைபரசமதுபாராமலே பூசைசெய்தால்
பார்த்தவர்க்கழகுமல்லடா பார்ப்பாரப்பையாஉன்னைப்
பாசத்திலேகட்டியேகுவோம்

மார்க்கண்டன்சொல்-தரு

ஐயனேநானென்ன செய்குவேன் கடவூரீசா
ஐயனேநானென்னசெய்குவேன்
வையம்புகழுந்துய்யமாநகர்மெய்யுநேசமகாலதூதர்கள்
வய்யுறேணிதோபாசமென்கிறார்தையலாளபிராமிநேசனே (ஐய)

தூதர்சொல்-தரு

எங்கள்பின்னேகலந்தாலாச்சு
யில்லாவிட்டால்காலமாச்சு
இப்படிக்குன்மனதிலெண்ணடா-பார்ப்பாரப்பையா
கொப்பளையிற்காய்ச்சிக்கொட்டுவோம்

மார்க்கண்டன்சொல்-தரு

நீசுநணந்தனிலே வந்தானே-சிவனேயினி
யிக்ஷணமேகொண்டு போவானே
பட்சிகருடனைத்தூக்கியோடியமட்சம்போல்பதைக்குதையோ
பட்சம்வைத்தெனையாளுமென்னுயிரட்சியுமிந்நேரவேளையி (ஐய)

தூதர்சொல்-தரு

எத்தனைநேரங்களாச்சு
யினிபொறுப்பதில்லையுந்தன்
புத்திதனிலெண்ணிக்கொள்ளடா-பார்ப்பாரப்பையா
குத்தியுயிர்கொண்டுபோகுவோம்

மார்க்கண்டன்சொல்-தரு

இனிபொறுப்பதில்லையென்கிறான்-சிவனேயினி
யிறுக்கக்கட்டிகொல்வேனென்கிறான்
தனியனாயிருந்தென்னசெய்குவேன் தையலாளிடமாகவே
யினியாகிலும்வருவீரோயிக்கட்டமமாநகர்தன்னிலே (ஐய)

தூதர்சொல்-தரு.

ஈசரளித்திட்டவய
திரொட்டுஞ்சரியேயாகில்
ஈசராலேயென்னசெய்வது பார்ப்பாரப்பையா
யுன்னை சூலத்தாலேகுத்தி யெய்துவோம்

மார்க்கண்டன்சொல்-தரு

நாலுதிக்கும்வந்துநிற்கிறார்-சிவனேயினி
காலனும்வருவானென்கிறார்
காலிரண்டசையுதேயிக் காரணத்திற்கென்னசெய்வேன்
ஆலமுண்டயீசனேயினி அந்தகன்வந்தாலுமென்ன (ஐய)

தூதர்சொல்-தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

இப்படியாணுவங்கொண்டவன்றன்னை நீ
எட்டிச்சிகைகயைமெள்ளப் பிடியடா அடா
அப்படிநீவாடாகில்லியா இவனை
யசங்கவொட்டாமலே பிடியடா
சொற்படிகேளாதமூடனையுந்தன்
சூலத்தினாற்குத்திப் பிடியடா அடா
எப்படியாகிலும்பாசத்தாலேகட்டி
யிருப்புத்தடியாலே யடியடா அடா
தற்பரன்பூசைநமக்கிப்பொதாலதென்ன
தள்ளிக்கயிற்றாலே கட்டடா
அப்பணிசடையோன்பூசையிப்போதென்ன
அடிக்கடிகிட்டிநீ பிடியடா
குப்புறமண்ணிற்கவ்விவிழக்குத்தி
கொண்டுபோவோந்தாடையி லடியடா
தொப்பெனவக்கினிவீசுதங்கோதடா
யிங்கேநில்லடாகில்லியா அடா (இப்படி)

தூதர்கள்சொல்-விருத்தம்.

அடித்திடவேண்டாம்வேண்டா மண்ணமார்களேநீர்கேளீர்
பிடித்துமேபோவோமென்றால் பின்னுகன்றயவதாலே
துடித்துமேதணல்களோங்கிச் சுற்றிலும்வீசுதிப்போ
நடித்துமேநடந்வோடி நாசனுக்குரைக்கலாமே

வசனம்.

கேளுங்க ளண்ணமார்களே இந்த மார்க்கண்டனையாராகிலு மிஞ்சித் தொடப்போகிறீர்கள் சிவபூசைவேளையானதினாலும் சிவனுடைய தயவினாலும் எங்கும் அக்கினியாய்வீசத்தலைபடுகினறது இனிநம்மாலேயாகாது மகாராஜனேவரவேணும் வாருங்கள்போய்ச்சொல்லுவோம் அண்ணமார்களே

தூதர்-இராசனுக்குச்சொல் கவி

சரணமன்னுவென்னுதான் தயவாகப்போவென்றேதான்
சரணம்பிழைத்துவந்ததுதான் சண்டாவுமக்கண்டதுதானே

இராஜன்-தூதருக்குச்சொல்-கவி

கண்டிதமுடைய தூதர்களே கடுகென நீங்களோடி வந்து
சண்டனைக்கண்டது தயவென்று சாற்றுகிஷ்ரேமென்னவடா

தூதர்-இராஜனுக்குச்சொல்-விருத்தம்,

குதித்துமேயடிப்போமென்றுற் தொன்லறகுடியனைத்தாக்குங்
மதத்துடன்பிடிக்கப்போனோமகாபுசைவேளையாலே
கொதித்துமேகணல்களெங்கும் குபீலெனவீசலாலே
விதித்தவன்விதிபலத்தால் மேவியேபிழைத்துவந்தோம்

வசனம்,

கேளுந் தர்மராஜனே முன்னம் நாங்க ளழைத்ததற்கு வருகிறதில்லையென்று உம்மையும் எங்களையும் வைதான் பிறகு பாசக்கயிறுகொண்டு விசிப்பிடிக்கப்போனோம் ஆலயத்தைச்சுற்றி அக்கினிப் பொறிபறக்குது எங்களாலேஆகாமல் வந்துவிட்டோமையா

இராஜன்-தூதருக்குச்சொல்-விருத்தம்

அப்படியாவாய்பேச் சறியாதபையனுக்கு
இப்படிசெறுவந்த்த யீசனையறிகிறேனன்
எப்படியிதைத்தடுப்பா னென்னிடக்கிடாவைக்கொண்டு
நற்படியாகவாரீர் நானேபோயறிகுவேனே

வசனம்,

ஆடாஅடா காலதூதரே வாய்ப்பேச்சுநன்றாய்ப் பேசத்தெரியாத பையனுக்கு இப்படிகெறுவந்தானு அந்தயீசனை நானே போயறிகிறேன் நமதுகிடாவை யலங்கரித்துக்கொண்டு வாருங்கள் காலதூதர்களே

தூதர்-இராஜனுக்குச்சொல்-பாணி,

கோபாக்கினியைத்தான்படைத்து கொண்டுவாகிடாவை யென்றமட்டில்
மாபாக்கியமென்றேமகிழ்ந்தோம் மன்னுகிடாவைக்கொண்டுவாரோம்

எருமைக்கிடாவருகிற தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி.

தாவும்புலியதுபோல் எருமை கிடா வும்வருகுதுபார்

அநுபல்லவி.

தாளுமெழும்பிடத் துள்ளித்துள்ளியேயிதோ (தாவும்)

சரணங்கள்,

எனத்திராளுமொடுக்கத் தரணியுள்ள
சேனைப்பதியும் நடுங்க
வானத்திருக்கும் தியானத்தோருந்தியங்க
வாடைக்கொதிகொதிக்க நாடிக்குதிகுதித்து (தாவும்)

உவர்தச்சென்னியைப்பிரட்டி-மிரட்டிக்காட்டி
செவந்தகண்ணை யுருட்டி
கவிந்தமலர்முகத்தோடு வந்தமதியுங்கொண்டு
கண் கள்திறடந்திட செகமென்குமகிழ்ந்திட (தாவும்)
மோசத்திலே குழம்பி-சருங்கிடா
மோகத்திலேயெழும்பி
லோகத்திலுயிர்வதை யோகத்திணற்செய்து
நொடிக்குங்காலனூர்ப்பக்கல் முடுக்காகவேயிதோ (தாவும்)

தூதர்-இராஜனுக்குச்சொல்-பாணி,

அலங்காரஞ்செய்தேமெள்ள
அழைத்துவந்தோங்கிடாவதனை
கலங்காமன்னருதித்தேறும்
கடிதிற்போய்வருவோமே

இராஜன்சொல்-தரு-இம்-மோகனம்-ஆதிதாளம்

பல்லவி,

வாடாவாடாதூதர்களேயந்த-ம்மார்க்கண்டனிடபலமறிவேனே

அநுபல்லவி

தாடாண்மைகளைப் படைத்தானேயாகில்
சதைப்பேனவனை நான் சிதைப்பேனேயடா (வாடா)

சரணங்கள்

விதியோஅவனுக்குச்சதியாயிருந்திட
விடுப்பேன்மேல்தூஜர் தொடுப்பேனே-அடா
கெதிவாரதையவனறிய தேகேடு
கெட்டானேஅவனை விட்டேனே-அடா (வாடா)

சிவனுகிலுமின்னும் எவனுகிலும்நம்மைச்
செயிப்பானோஅவனை தகிப்பேனே-அடா
தவமேபெரிதாகிலுமாகிலுமென்சொல்
தடுப்பானோஅவனை விடுப்பேனே-அடா (வாடா)

எனதாக்கினையைத்தடுப்பாருமங்கே
யிருப்பானோசொல் பிசிப்பேனே-அடா
இனிதாகவேவந்தால் சரியேயில்லாவிட்டால்
இடிப்பேன்தாடையிலடிப்பேன்-அடா (வாடா)

இராஜன்-தூதருக்குச்சொல்-விருத்தம்,

என்னடாகிடாவையிப்போ யெண்ணமலடித்தபோதும்
பின்னிட்டேபோகுதந்தப் பித்தன்பால்நடக்கவில்லை
இன்னொருகிடாவையிப்போ யிழுத்தோடிவருகுவீரே
பின்னையுமிதையேவாட்டிப் பித்தன்பால்நடக்கலாமே

வ-ம். ஆரடாஅடா காலதூதர்களே என்னடாயிந்தக்கிடாவைஅடிமேல் அடிஅடித்தபோதும் இன்றைக்குப் பின்னிட்டேனிற்குது மூனனிட்டோடவில்லை நல்லது நீங்களோடியின்னம் ஒருகிடாவைக்கொண்டுவருகிறீர்களோ அல்லதுஇதைத்தானே நடத்துகிறீர்களோ சொல்லுங்கள்காலதூதர்களே

தூதர்கள்இராஜனுக்குச்சொல்-விருத்தம்

எங்கும்பார்த்தாலுமங்கே பெண்ணுதசிவாலிங்கங்கள்
எங்கினுந்தாநெருங்கி யிருப்பதாலெங்கள்கோவே
எங்கினுங்கிடாவொதுங்கி யெகிரியேநடக்குமிப்போ
எங்களுக்கோடக்கயிடிவுண்டுவருகின்றோமே

வ-ம், கேளும்மகாராசனே வும்மிட ஆக்கினைக்கும் கோபத்துக்கும்பயப்பட்டு அந்தக்கிடாவும் நாங்களும்வந்து எங்கும் கால்வைக்க இடமில்லாமல் சிவாலிங்கங்கள் நெருங்கியிருக்கின்றது கிடாவையடித்ததனுலாபமென்ன நாங்கள்வருகிறதர்க்கே பயந்துவருகிறோம்மெள்ளத்தானே நடத்துமகாராஜனே

மார்க்கண்டன்சொல்-தரு-இ-ம்- ஆனந்தபைரவி- ஆதிதாளம்

பல்லவி

வாரானேகாலன்-வாரானேசுவாமி-வாரானேகாலன்

அநுபல்லவி

கோரகவேகண்கள் நெருப்புப்பொரிபரக்க (வாரா)

சரணங்கள்

மேல்கீழ்கீழ்மேலாகவேயிப்போ
விண்ணுமண்ணுமதிரக்கண்ண கடவூரீசா (வாரா)

எனைநாடியேநமனித்தூதர்களோடு
யிடிபோற்கதும்பியேவிரைட்டுங் கடவூரீசா (வாரா)

அஞ்சாக்கொலைசெய்ய அலரிகுதிகுதித்து
அவனேவருகிறான்சிவனே கடவூரீசா (வாரா)

அடித்தான்சவுக்கினு லடித்தான்கருங்கிடாவை
விடுத்தானிதோவந்து அடுத்தானே கடவூரீசா (வாரா)

மார்க்கண்டன்சொல்-தேவாரம்,

தூதரும்போனபின்பு துஷ்டமாய்க்கிடாவிலேறி
வேதனைசெய்யவேண்டி வெதும்பியேகதும்பிக்கொண்டு
நாதனேகடவூரானே நமனிதோவருகின்றானே
மாதொருபாகாயிந்த மைந்தனைக்காத்திடீரோ

வ-ம், அரகராகடவூரீசா ஆலகாலவிஷத்தையுண்டஐயனே ஆதிசோதி முன்வந்ததூதர்போக இன்னம் என்னைவேதனைசெய்ய எமன்கருங்கிடாமீதேறி மகாவுக்கிரமாக வருகிறான் அவனைப்பார்க்க என்னுள்ளம் நடுங்குதுகர்த்தனே

சிவன்- மார்க்கண்டனுக்குச்சொல்- தரு-ஜம்பை.

பாலனேமார்க்கண்டாபயமுறாதேமனதில்
காலனெனவேசற்றுங் கவலைவையாதே
எமனுகிலுமின்னம் இமையவர்களானுெம்
மாலிவுன்னைவிழிதிறந்துப் பார்க்கவசமாமோ
பதுமலர்தொடுக்குமதன் பட்டபாடறிந்திருந்தும்
அதனவிதஞ்செய்யேமனடுப்பானோமைந்தா
குண்டோதரன்முதல் கோடிதளமிருக்கவுன்னை
அண்டுவானோஎமனும் அருகில்வருவானோ
அழகுடையபாலகனே அஞ்சவேண்டாம்னமனே
மழுவுககிகையாக்கிடுவேன் மனதுதெளிந்திருப்பாய்
ஆனைமாமுகனுன்னை அபயமிருந்துன்னையினி
தானெதிர்த்தயேமனுடன். சரிவாதுபுரிவாய் (பாலனே)

சிவன்- மார்க்கண்டனுக்குச்சொல்-கொச்சகம்.

சண்டன்வாரானெனவே சற்றும்பயப்படவேண்டாம்
பண்டுமுப்புரங்கள்பட்ட பாடறிகுவானமனும்
அண்டிடவந்தானேயாகி லவனுடனேநீயெதிர்த்து
மண்டலமதிக்கச்செய்வாய் வஞ்சனைநான்செய்யேனே

வசனம். கேளுமப்பா மார்க்கண்டா நீ.யேமன்வருகிறானென்று பயம் சற்றுகிலும் வைக்கவேண்டாம் இதோ நான் ஆனைமுகனரியச் சொல்லுகிறேன் உன்னை எமன்கையில் காட்டிக்கொடுப்பதில்லை முன்னமுப்புரம் பட்டபாடு அவன்நன்றாயறிந்திருப்பான் நீ யவனுடனே யெதிர்த்துப்பேசி மண்டலமதிக்கச்செய்யுமப்பா மார்க்கண்டா.

இராசன்-தூதருக்குச்சொல்- விருத்தம்.

கண்டிததூதரோமார்க்கண்டன்றானெங்கேயெங்கே
மிண்டனுமவனைக்காட்டு மீசனைத்துரத்திவிட்டு
அண்டாதபாசத்தாலேயவன்றனையிருக்கிக்கட்டிக்
கொண்டுபோய்கழுவில்மாட்டிக்கொலைவதைசெய்குவேனே

வசனம்- ஆரடா அடாகாலதூதரோ அந்தமார்க்கண்டன் எங்கேயெங்கே யென்கண்ணிற்காட்டுங்கள் அவனையும் அவனுக்குத்துணையாகவருகிறவனையும் கட்டிக்கொண்டுபோய் கொலைவதை செய்கிறேன் காட்டுங்கள் காலதூதர்களே.

தூதர்-இராஜனுக்குச்சொல்-விருத்தம்.

அதிபலமுடையகோவே யாருக்கும்பயப்படாமல்
மதாமதங்கொண்டுமெத்த மவுனமாய்மொணமொணென்று
கெதாகெதியாகப்போற கேடுகள்தெரிந்திடாமல்
இதோசிவபூசைதன்னிலிருக்கின்றான்பாருமையா

வசனம்- வாராய் தர்ம்மராசனே நீர்வருகிறதைப் பார்த்தும் பயப்படாமல் மதோன்மஸ்த்தனுய் மொணமொணன்று பேசிக்கொண்டு தன

க்குவருகிறகெதி அரியாமல் அதோ ஆலயத்திற்குப் பூசைசெய்துக்கொண்டிருக்கிருன் பாருமையாமகாராஜனே.

இராஜன்-மார்க்கடனுக்குச்சொல்-விருத்தம்.

பார்ப்பயலேநீதான பயமதுசற்றில்லாமல்
தோர்ப்பாடிதனேயேசெய்து தூதனைமிரட்டிவிட்டாய்
காார்ப்பேனென்றுனக்குச்சொன்னக் கடவுரானறனனேக்கூட
பூப்போலேகட்டியெந்தன் புரங்கொண்டுபோவேன்பாராய்

வசனம்- அடாவாடா பார்ப்பாரப்பயலேயெனது தூதர்வந்தழைத்தால் வராமல் துரத்திவிட்டாயல்லவாசபாசடா அந்த இரணியன் இடும்பாசூரன் இந்திரசித்து ராவணன் கும்பகர்ணன் இப்பேர்க்கொத்த பேரெல்லாம் எனதுகயிற்றிற் கூட்டுப்பட்டிருக்க நீகட்டுப்படுகிறதுபெரிதா பேசாமல் வருவையோவாராயோசொல்லடா மார்க்கண்டா.

மார்க்கண்டனுக்கும்- இராசனுக்குந்தர்க்கம்-ஜம்பை

மார்க்கண்டன்சொல்-தரு

பாசசூலங்கொண்டு பயமுறுத்தவேண்டாம்நீ
யீசரடியார்கள்தன்னை யென்செய்யலாகும்

இராஜன்- சொல்லல்

ஈசரடியாராகி லெனக்கென்னவென்றுடனே
பேசவருவார்களோ பேய்ப்பயலேபோடா

மார்க்கண்டன்-சொல்லல்

பொருப்புச்சிலையான்பாதம் போற்றுமடியார்கள்தன்னை
விருப்புடையயெவராலும் விழிநோக்கலாமோ

இராசன்-சொல்லல்

விருப்புடையெவராலும் விழிநோக்காதென்பதனைச்
சரிப்படுத்துவேனெந்தன் சமர்த்தைப்பாரடாநீ

மார்க்கண்டன்-சொல்லல்

இருப்புத்தூண்தனக்கஞ்சியான் எரிக்குமோவீண்பேச்சேன்
நெருப்பிலேஈமொய்க்க நேருமோபோடா

இராஜன்- சொல்லல்.

நெருப்பநாமென்றுந்தன் நெஞ்சிலெண்ணியேயந்த
குறிப்புசொல்லவந்தாயோ குட்டிசுவரேநீ

மார்க்கண்டன்-சொல்லல்

கருப்புச்சிலைதொடுக்குமந்த காமனெரிபடவிழித்த
விருப்பமுள்ளபரமசிவன வீரமறியாயோ

இராஜன்-சொல்லல்

விருப்பமுள்ளசிவன்பலத்தை வெண்ணிநீபேசாதே
முறிப்பேனுனைப்பிடித்து முறிப்பதுவுமெய்யே

மார்க்கண்டன்-இராசனுக்குச்சொல்-விருத்தம்.

கனக்கவேமுறிப்பேனென்ன காட்டுசொல்விடடாநீதான்
மனைக்குள்வாழ்பூனை தன்னை மடக்கவுனனுலாகாதே
எனக்குநீமசகமாமென றெண்ணினேனறுள்ளவேண்டாம்
உனக்குநானபயந்துபேச ஒவ்வாதுநடந்திடாயே

வ-ம், அடாவாடா சண்டாநீமுறட்டுத்தனமாய்என்னை முறிப்பேனெ ன்கிறசொல விருக்கட்டும் எனக்கு நீஒருகொசுவுதான்கண்டாய் உனக்கு நான் பயப்படயிராது நீஇதுவரைக்கும் பூனைக்குட்டியைப்பிடித்தறிவை யா போ போ சும்மா நடந்திடுகாலா

இராசனுக்கும்-மார்க்கண்டனுக்கும்-தர்க்கம்-தரு,

இ-ம்-நாதநாமக்கிரியை மிசுரதாளம்,

இராசன்சொல்-தரு.

நடந்திடென்றசொல்லு மேற்குமோ இந்த
நாதலிங்கமுன்னைக் கார்க்குமோ
தொடர்ந்தவார்த்தைப்பேசி துள்ளிவிழுந்திடாதே
தூக்கித்தாக்கியுன்னை நோக்கியேயெறிவேன (நடந்து)

மார்க்கண்டன் சொல்லல்,

நாதலிங்கத்தைப்போ லாவையோ அடா
நமனேயெனக்குயி டாவையோ
சாதகத்தையென்முன் காட்டிடாதேபோபோ
காலாகுலாநோக்கு வேலைதானில்லையோ (நாதலி)

இராசன்-சொல்லல்,

நமனென்றயென்பய மில்லையா எனது
நாட்டினிற்கோவார இல்லையா
விமலனுன்னையென்றும் விடுவதில்லையோடா
விசிப்பாசமேகொண் டீசனைப்பிடிப்பேன் (நமனெ)

மார்க்கண்டன்-சொல்லல்,

நாட்டுக்கொடிநீ பிழைப்பதேன்கெட்ட
நாயேபிந்தபிந்த முழிப்பதேன்
கூட்டிவந்ததூதர் கூடநீயுமிப்போ
கொககரித்திருக்கப் பக்குவங்கள்சொல்வேன (நாட்டு)

இராசன்-சொல்லல்,

நாயேபேயேயென்று குலைக்காதே இப்போ
நாம்பிழைத்தோமென்று மலைக்காதே
வாயைநான்கிழித்து வாரிக்கொண்டுபோய்
வாதைபாதைசெய்ய ரூதைவிளைவிப்பேன (நாயே)

மார்க்கண்டன்சொல்-தரு,

நாம்பிழைத்தேமென்றுயெண்ணியோ-அடா
நல்லயோசனைகள்நீ பண்ணியோ
பாம்பணிந்தோரொந்தன் பாகமேயிருக்கப்
பார்த்துமார்க்கண்டத்தான் சோக்கவேநினைப்பார் (நாம்)

இராசன்சொல்-தரு

நல்லயோசனைகற்றவ னேடா எட்டி
நான்பார்க்கக்குத்துவேண்டா,
கொல்லில்லென்றுவிழுங் கொடியதூதர்களே
குத்திகுத்தியெங்கும் பற்றிவாங்களடா (நல்ல)

மார்க்கண்டன்சொல்-தரு

நாதன்பார்க்குமட்டு மிருப்புனேயிந்த
நாகமென்னப்பேசத்தரிப்பேனே
வாதுசெய்யவேண்டாம் வழியைப்பாரடாசொன்னேன்
மன்னுமன்னுநீயென்முன் னில்லாதேபோபோ (நாத)

இராசன்மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்

நில்லாதேயென்றுசொன்ன நெஞ்சினைக்கொடுத்தவந்த
உல்லாசனபூசைவிட்டு வொடுங்கியேவந்தாலாச்சு
எல்லாருங்காணஉன்னை யிடியிடித்திழுத்துச்சென்று
பொல்லாதவதைவதைத்துப் புகழினைப்பெறுகுவோனே

வ-ம், அடாவாடாமார்க்கண்டா நமசொன்கிறபயம்சற்றுகிலும்மில்லாமல் யிப்படிக்குஉருதியான நெஞ்சைகொடுத்தவனை யறிகிறேன். பேசாமல் ஒடுங்கிவந்தாலாயிற்று இல்லாவிட்டால் இடிஇடித்திழுத்துப்போய் சித்திரவதைசெய்வேன்பாரடா-மார்க்கண்டா

மார்க்கண்டன்-இராஜன்சொல்-விருத்தம்,

பனைமரம்போல்நீவந்து பலபலமொழியுரைத்தால்
உனையொருபொருட்டாயெண்ணி யொடுங்கிநான்வருவதுண்டோ
இனியொருநிமிஷம்நீயிங் கிருந்ததேயானாலுன்னைச்
சனியனும்பிடித்தாற்போலே தணலைவந்திட்சசெய்வேனே

வ-ம், அடா அடா யேமா நீபனைமரம்போல் ஒருவனைவிழச் சாதிக்கப்பட்டவனு தெரிந்தது தெரிந்ததுநீ நல்லபனைமரம்போல் என்னென்னமோ நின்றுக்கொண்டு வீண்பேச்சு பேசினால் உன்னையொரு பொருட்டாயெண்ணி நான்வருவதா வன் வீணாய்ப் பித்தம்பிடித்து அலையுறாய் போ போ சண்டா

இராசன்-மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்,

பித்தனென்றெனைச்சொல்லார்நீ பித்தனைச்சேர்ந்ததாலே
பித்தமேபிடித்துநீயிப் போர்க்கொத்தவார்த்தைசொன்னும்

பித்தமுந்தெளியவுன்னைப் பிளந்திடுவேனியந்தப்
பித்தனைவிட்டுவாடா பேய்மதங்கொண்டனாயே

வ-ம், அடாவாடா மார்க்கண்டா நானு பித்தம்பிடித்தலைகிறேன் நீபித்தனைச் சேர்ந்திருக்கிறபடியினாலே அந்தப்பித்தம் உன்னைப்பிடித்து நீ பித்தனைப்போலப்பேசுகிறாய் அந்தப் பித்தந்தெளிய அடித்தால் உனக்குப்புத்திவரும்பயந்துபேசுவாய் வீண்வேலைவைத்துக்கொள்ளாதே பேசாமல் அந்தப்பித்தனை விட்டுவாடாமார்க்கண்டா

மார்க்கண்டனுக்கும்-இராஜனுக்கும்-தர்க்கம்-தரு.
இ-ம்-புந்நாகவராளி-ஆதிதாளம்,

மார்க்கண்டன்சொல்-தரு

பினத்தாதேபினத்தாதே பெருங்கிடாமீதேறும்
பேச்சைவிட்டுவிடடா காலா

இராஜன்சொல்-தரு

சினத்துப்பேசுவதிந்த சிவன்வலுமையல்லவோ
கெஷணத்திலறிவேனினி பாலா

மார்க்கண்டன்சொல்-தரு,

குதித்தாலுமெதிர்த்தாலுங் குலைத்தாலும்நாயது
கொடியசிங்கமாகுமோ காலா

இராஜன்சொல்-தரு

மதத்துப்பேசாதே மரநாயேயுனைவெல்ல
வகைதேடவேணுமோடா பாலா

மார்க்கண்டன்சொல்-தரு,

ஓசந்தாலும் வளர்ந்தாலும் ஓடிமாமரந்தன்னில்
ஒளித்தாலும் யானைப்பூனையாகுமோகாலா

இராஜன்சொல்-தரு

வசந்தானென்னடாஅந்த வள்ளல்தானெனக்கீடோ
வகைசெய்குவேனினி பாலா

மார்க்கண்டன்சொல்-தரு

சிறந்தாலுமுயர்ந்தாலுந் திசைதிசையெங்குமோடி
சிட்டுப்பருந்தாகுமோ காலா

இராஜன்சொல்-தரு

ஊந்தானென்னடாஅடா வுன்னையுஞ்சிவனையும்
ஒருகட்டாய்க்கட்டிவெல்வேன் பாலா

மார்க்கண்டன்சொல்-கொச்சகம்,

எத்தனைநான்சொன்னாலு மெனைவிடுவதில்லையென்று
பத்துவிதத்திலுமெத்த பராக்கிரமம்பொருந்தியேமன்
கர்த்தனேயுனைப்பாசக் கயிறுகொண்டென்னையுங்கட்டி
குத்திக்கொண்டுவாவென்று கொக்கரிக்கின்றான்சிவனே

வ-ம், அரகரா அரகரா அரரரா அரகரா திரிபுரமெரித்தயீசா அடியேனெமனுடனே எங்ஙேசம் வாதுபுரிவேன் என்னசொன்னபோது போகாமல் மேல்விழுந்து பிடிக்கவருகிறான் என்னெஞ்சங்கலங்குது கர்த்தனே

சிவன்-குண்டோதரனுக்குச்சொல்-கொச்சகம்

நெஞ்சங்கலங்கித்தவித்து நினைவழிந்துமதிமயங்கி
சஞ்சலமுற்றேதியங்கித் தத்தளிக்கிறுன்பாலன்
றஞ்சிதகுண்டோதரனே நமனுடனே நீயெதிர்த்து
பஞ்சுகொட்டுபாவனைபோற் பறக்கடிக்கச்செய்வாயே

வ-ம். வாராயப்பா குண்டோதரா நமது பாலகனுகிய மார்க்கண்டன் எமனைப்பார்த்துதத்தளிக்கிறுன் அந்தஎமனுட னெதிர்த்து பஞ்சுகொட்டும்பாவனைபோற் பறக்கடித்துப்பாலகனைக் காருமப்பாகுண்டோதரா

குண்டோதரன்சிவனுக்குச்சொல்-கொச்சகம்

பாலகன்மேற்கிருபைவைத்து பட்சமுடன்பார்த்திருக்கும்
நீலகண்டரேயுமது நினைவின்படியேயானும்
காலனுடனெதிர்த்துநின்று கதித்ததெண்டினுலடித்து
ஓலமிட்டோடவும்விடுத்து வுமதுமைந்தனைக்காப்பேன்

வ-ம், அரகரா திருக்கடவூரீசா மார்க்கண்டசகாயா உமதுநினைவின்படியே எமனுடனெதிர்த்து தெண்டுக்கிணைகொடுத்து மார்க்கண்டனைக் காக்கிறேன் சுவாமி

மார்க்கண்டன்-குண்டோதரனுக்குச்சொல்-விருத்தம்,

காக்கிறேனெனவேயிந்தக் கடவூரீனருகில்வந்து
தீர்க்கமாய்த்திறமுரைத்த சிவ சேவகிகுண்டோதராநீ
ஏர்க்கவேசொன்னவார்த்தை யேமனுங்கேட்டுயென்னைப்
பார்க்கிறுனென்னசெய்வேன் பதமலர்சரணமையா

வ-ம், சரணஞ்சரணம் சிரஞ்சீவியான குண்டோதரமூர்த்திஎன்னைக் காக்கிறேனென்று நீர்சிவனுக்குச்சொன்ன சொல் இந்தயமன் கேட்டு என்னையுருட்டிப்பார்க்கிறுன் கெர்ப்பங்கலங்குது என்ன செய்வேன்சுவாமி

குண்டோதரன-மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்

மைந்தனேமார்க்கண்டாநீ மறலிக்குப்பயப்படாதே
எந்தனபின்னுகதில்லு யெமனிடவலுமைதன்னை
இந்தநாழிகைக்குள்நானே யறிகிறேனுனைப்பிடிக்க
வந்தவன்பின்னிட்டோட வாட்டுவேன்வாட்டுவேனே

வ-ம், கேளுமப்பா மார்க்கண்டா நீஎமனெனக்கிறகிலேசம்மனதில்லைக்கவேண்டாம் சிவபூசையிலிருநான் எமனுடனெதிர்த்து தெண்டுக்கிணை கொடுக்கிறேன் பயப்படாதிருமப்பா மார்க்கண்டசெல்வமே.

மார்க்கண்டன் குண்டோதரனுக்குச்சொல்-விருத்தம்,

ஆலயத்தருகில்நின்று அன்புடனெனக்குனாக்கும்
பாலகுண்டோதரர்கேள் பயப்பட்டேனமனைக்கண்டு
காலனைத்துரத்தியென்னைக் காத்ததேயாகிலிந்த
நீலகண்டையர்நீதானிட்சயஞ்சரணமயா

வ-ம், சரணஞ் சரணம் சுவாமிக்குப் பக்தனுனகுண்டோதர மூர்த்தி யே நானெமனுக்கு மிகவும்பயந்திருக்கிறேன் நீ எமனைத்துரத்தி என்னைக்காத்ததேயாமாகில் இந்த நீலகண்டையர் நீர்தான்சுவாமி

குண்டோதரன்-இராசனுக்குச்சொல்-விருத்தம்,

எவராலுமாகாதிந்த யீசனைக்கட்டுதற்கு
அவனியையாண்டதாலே ஆங்காரமுண்டோயேமா
சிவனுக்குமன்பனை செல்வனோடெதிர்க்கலாமோ
இவடத்தில்நிற்கவேண்டா மிவடம்விட்டப்பாற்போடா

வ-ம், அடா வாடாயேமா எவராலுமாகாதே இந்தயீசனைக்கட்டுகிறதற்கு உன்னாலேயாகுதா இவன்சிவனுக்கு அன்பனுனசெல்வனச்சுதே இவனுடனே எதிர்த்தலாகுமோ உனக்கென்னபுத்தியில்லையா இவ்விடம்விட்டு அப்புறம் நடந்திடு யேமா

இராசன்-குண்டோதரனுக்குச்சொல்-விருத்தம்,

என்னை நீநடந்திடென்று யியம்பற்கு நீதானுரு
உன்னைநான்கண்டுபோக வொக்குமோரபளாபளாதான்
இந்நிமிஷத்திலிந்த யீசனையுமிமார்க்கண்டன்
றன்னையுங்கட்டாவிட்டாற் சண்டனுனல்லத்தானே

வ-ம், பளாபளா அடாகுண்டோதரா என்னைப்போகச்சொல்லநீயார் அந்த யீசன்யாரு எவனும் எனக்கென்ன உன்னைப்பார்த்தால் என் தொண்டுபயலைப்போற் கண்ணுது நீசொல்லலாவதேது நான்போகலாவதேது இதோஒருநிமிஷத்துக்குள்ளே உன்னையும் அந்தசிவனையும்இந்தப்பயலையும் எனதுபாசத்தாற்கட்டிச் சூலத்தினுற்குத்திக்கொண்டுபோகாவிட்டால் நான்சண்டனல்லடாகுண்டோதரா

குண்டோதரனுக்கும்-இராசனுக்கும்-தர்க்கம்-கண்ணிகள்

இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

குண்டோதரன்-சொல்லல்,

குத்திக்கொண்டுபோகமெத்தக் கொழுத்தவனோகாலா - நீ
கோஷ்டமிட்டுவோடிடவே குத்துவேன்பார்சூலால்

இராசன்-சொல்லல்,

பித்தனிடஞ்சேர்ந்திருந்த பேய்ப்பயலேபோடா-உனை
பிடித்துக்கட்டிகொண்டுபோவேன் பிழைத்தோடிப்போடா

குண்டோதரன் சொல்லல்,

கட்டிக்கொண்டுபோவேனென்று கதைசையச்சொல்லலாமோ-சுடு
காடுதேடிப்போய்விரகு கட்டவுன்னலாமோ

இராசன்-சொல்லல்

மட்டியுடன்பேசுவது மானங்கெட்டபேச்சே-இப்போ
மற்றொன்றுமாகாதுவுன்னால் மாளச்சடலமாச்சே

குண்டோதரன்-சொல்லல்,

சடலமின்றுளராதே சமர்த்திங்கேசொல்லாதே-நீ
சண்டனென்றிலெனக்கென்னடா தாக்கு[illegible]வழிபொல்லாது

இராசன்-சொல்லல்

பிடித்துன்னைக்கொண்டுபோய்ப் பெருங்கப்பத்திரிகட்டி-நான்
பேசுவதெல்லாமப்போது பேசுவன்பார்கட்டி

குண்டோதரன்-சொல்லல்,

பேசுமட்டுமுன்னைவிடுத்துப்பின்னிற்பதுவுமுண்டோ-நீ
பிரண்டோரடியடிக்கும் பிலத்தைப்பாரடாசண்டா

இராசன்-சொல்லல்

பாசமாகரவிசியுன்னைப் பாமனையுங்கொண்டு-அந்தப்
பாலன்மார்க்கண்டன்றனையும் பதைக்கட்டிவேனன்பாராய்

மார்க்கண்டன்[illegible]-செண்டா,

அபயமேயபயமிந்த [illegible]கள்நடுங்கிச்சிறி
[illegible]தகாலம்போல வீசி[illegible]பாசம்
சபலித்துப்போச்சுதெந்தன் சார்த்துள்ளபுத்திபெல்லாம்
பவமதுசெய்தாலத்தைப் பாலித்துக்காத்திடரே

வ-ம், அரகரா அரகரா அரகரா அரகரா அபயம் அபயம் திருக்கடவு
ரீசா அடியேன் ஏதாகிலுங்குற்றஞ் செய்திருந்தால் பாலித்துக் காத்தரு
ளும்ஈசனே அரகரா

சிவன்-எமனுக்குச்சொல்-விருத்தம்,

குடுகுடுவென்றுதூதா கொக்கரித்திவிட்டுவந்து
தட்டதட[illegible]முடுக்கினதல்லாமல்
படபடவென்றேயென்னைப் பாசத்தாற்கட்டலாச்சே
கிடுகிடுவென்றுசண்டா கீழ்விழவுதைத்தேன்கண்டாய்

வ-ம், சபாசடாயெமா நானென்கிறபயமில்லாமல் இவிடம் தூதர்வந்து
இட்டவும் பாலகனை நடுக்கிடச்செய்யவும் நீவந்து எனனைப்பாசத்தாலே
கட்டவுமாச்சுதா. சபாசடா எமா புத்திவருகிறமட்டும் இந்தப்பூமியில்தா
னேவிழுந்து கிடடாயடையா

மார்க்கண்டன்சொல்-தரு இ-ம்-புன்னாகவராளி

போற்றிசங்கரபோற்றிஅரகா
போற்றிசிவசிவபோற்றினேன்
போற்றிமாபதிபுனைந்தவேணி[illegible]ா
போற்றிஅரகாபோற்றினேன்
போற்றிக்கடவூரில்வாழுமீசனே
போற்றிஅரகாபோற்றினேன்
போற்றிபாவவினாசனுதினம்
போற்றிஅரகாபோற்றினேன்



சிவன்-மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்.

மனதிடங்கலங்கியெந்தன் மைந்தனேமார்க்கண்டாகேள்
எனதிடயரியவந்த யேமனைவிழவுதைத்தேன்
உனதிடமதிலைத்தேற்றி யுருகியாயினிமேலப்பா
இனிதுடன்பூசைநீசெய் திருயென்றும்பதினாறாக

வ-ம், அப்பா மதிகலங்கிநின்ற மார்க்கண்டா உன்னாலே வந்தயேமனை விழவுந்தந்தேன் இனி உனக்கொருபயமுமில்லை திடச்சித்தமாய் என்று ம்பதினாறாகம்மையே பூசைசெய்துக்கொண்டு சுகமாயிருமப்பா மார்க்கண்டா

பொது-விருத்தம்,

எமன்மார்க்கண்டனுக்காக ஈசனார்பாதம்பட்டு
சோமுகாசூரனைப்போல் துள்ளியேமண்ணில்வீழ
சாமிகாதனைமார்க்கண்டன் சரணெனப்பணிந்திருக்க
பூமிதேவதையாள்பாகம் பொறுக்காமற்புலம்பிவாராள்

கட்டியாக்காரன்சொல்-வசனம்.

அசோ தெப்படியென்றால் இப்படிக்குச் சிவபூசைசெய்யும் மார்க்கண்டனுக்காகயெமன் பூமியில் விழுந்திருக்க[illegible]குகாலம் இறப்பதில்லாமல்பிறப்பேமிகுதியாச்சுது அப்போதுபூமிக[illegible]பளுவு சுமந்துபூமிதேவி புலம்பிக்கொண்வருகிற விதங்காண்க

பூமிதேவிசொல்-கட்டளை[illegible]கலிப்பா,

தெய்வலோகத்தில் பாதாளலோகத்[illegible]ல்
சீர்மையாயிருந்த மண்ணுலகத்[illegible]ல்
வாதுசெய்யயெமன் கண்ணிலே[illegible]ங்காணேம்
தேவர்மற்மமோ கர்மதீவி[illegible]களோ
நீதிசொல்லியதென் றிசையா[illegible]டுக்கொண்
டற்புதசந்திர விம்பம்[illegible]ோல்[illegible]ாழ்ந்தவன
தேவர்க்கருள் செய்யுமீசனே
இந்ததீவினையாராலேவந்த[illegible]தான் றிற்றகிலேன்

வ-ம், அரகரா என்கர்த்தனே இந்தஎமன் ஆருக்கு என்னகுற்றஞ்செய்து இப்படிக்கானதோ நான்யாதொன்றும் றிகிலேன சுவாமி

பூமாதேவிசொல்-விருத்தம்-இ-ம்-தெண்டா[illegible]

இதுயென்னவதிசயம் நானெப்பவுங்க[illegible]தில்லே
இதுவிதிவசமோயிந்த [illegible]மனுமண்ணில்வீழ
இதனாலேபிறப்புமிகு[illegible] பிறப்பதில்லாமற்போச்சு
இதுயே[illegible]படிசுமப்பேனையா

வ-ம், ஆ ஆ இதென்ன அதிசயம் இதென்னகாரணம் இப்படிக்குப் பூமியில் எமன்விழவும்இறப்பில்லாமல் பிறப்பேமிஞ்சவும் அடி[illegible]க்குப் பாரமாகவுமாச்சு சங்கரா எப்படிச்சுமப்பது

பூமிதேவி-புலம்பல்-கண்ணிகள்-இ-ம்-கண்டா-ஆதிதாளம்

என்னவிநதையோமண்ணில்எமன்விழவந்தது
ஏதோவறிகிலேனே தெய்வமே

சங்காரவுன்சயலோதாசாவுந்தன்செயலோ
தருமனிப்படியானுன் சிவனே
பொக்கிபிருந்தவென்னைப்புலம்பவோவைத்தீரையா
போதுஞ்சுமைபெனக்குச் சங்கரா
சண்டன்றனைபிப்படிதரையில்விழவுதைத்து
தள்ளிவிட்டவாரோ தெய்வமே
மொண்டுக்குடையோனல்லமுத்திக்குடையோனுச்சே
முறியவடித்தாரோ சிவனே
ஆனாலுமெனக்கிப்போயடித்ததுபாரமிப்போ
அடியாள்செகுற்றமுண்டோ சங்கரா
வனேயிப்படிச்சிர்தயேமனைத்தள்ளியென்னை
யேக்கமுற்றிடச்செய்தீர் சிவனே

நார[தர்]-வருகிற.பொது-விருத்தம்,

வுலகெலாமதிசயிக்க வுமையவள்மனங்கலங்க
பலகலையுடுத்தும்பூமிப் பைங்கொடிவையமீதில்
கலகலென்றோசையிட்டுக் கதறிடுஞ்சத்தங்கேட்டு
நலமிலமறியவேண்டி நாரதர்வருகின்றாரோ

கட்டியக்காரன்சொ-வசனம்.

அகோதெப்படியென்றால் இப்படியாக பூமிதேவியானவள் வையமீதில் நின்றுபுலம்புகின்ற சத்தத்தைக்கேட்டு வீணையில் வல்லவரான நாரதமகாமுனிவர் அவ்விடம்வரு[கி]ற விதங்காணுக

நாரதர்வருகிற-தரு-[ரா]-ம்-தேசிகதோடி-ஆதிதாளம்,

பல்லவி.

நாரதமாமுனிவந்தாரோ தூய நாரதமாமுனிவந்தாரே

அநுபல்லவி

பாரிற்புகழும்பிரமன் பரிவுடனளித்திடும் நாரத

சரணங்கள்

பாதக்குரடிலங்கப் [ச]ரிவரய்ச்சடை துலங்க
சீதமதிகுலுங்கத் தேவர்கண்டுகலங்க நாரத
திருவீணையைப்பிடித்து [செம்மந்திரம்படித்து]
பொருமைக்காவியுடுத்து பூமாலையடுத்து நாரத
தண்டுகரத்திற்கொண்டு சம்புமந்திரமுண்டு
உம்பரானேருந்தொண்டு வுவந்துசெய்திடக்கண்டு நாரத

நாரதர்பூமிதேவிக்குச்சொல்-விருத்தம்,

வையகமீதில்வந்த மதியுள்ளபூமிமாதே
ஜயமிட்டலறியின்று வருமையாய்ப்புலம்புகின்ற

ந்தையலேநீயெனக்குச் சகலமுந்தெரியச்சொன்னால்
ஐயமுந்தீரவதாக ஆலோசனைசொல்வேனே

வ-ம், வாராய்பூமிமாதே ஒருக்காலத்திலுமில்லாமல் நீலைவயகமீதில் வந்து மிகவும்வருத்தமாய்ப் புலம்புவதேது நீபுலம்பிய சத்தங்கேட்டுநா னோடிவந்தேன் அப்படிப்பட்ட துயரமுனக்கு வரவேண்டியதென்ன இதையென்னுடனே சொன்னால் அந்ததுயரம் நீங்கும்படியான வுபாயஞ் சொல்லுகிறேன் பூமிமாதே

பூமிதேவி-நாரதருக்குச்சொல்-விருத்தம்,

முனிவர்கள்வணங்கும்வேத முனியேநாதரோகேளீர்
அனியாயமாகவே மனலறியேமண்ணில்விழ
இனியாருமிறப்பமில்லா திருப்பதார்பூமிபாரம்
தனியாகவெந்தனுக்குத் தவிப்பதேபளுவாச்சே

வ-ம், கேளும் நீ நாரதபகவானே எமனையாரோவுதைத்துப் பூமியிற் றள்ளிவிட்டார்கள் அவன்பூமியிலேவிழவே இறப்பில்லாமல் பிறப்பதிகமாயிற்று அதனாலேபூமிக்குப் பளுவேறி என்தோள்களிரண்டும் விட்டுப்போகலாயிற்று ஆகையால் நானென்னசெய்வேன் பாரம்பொறுக்கமாட்டாமல் வருத்தப்படுகிறேன் நாரதபகவானே

நாரதர்-பூமிதேவிக்குச்சொல்-விருத்தம்.

நல்லதுபூமிதேவி நாதனைநினைந்துயிர்த்த
எல்லையில்புலம்பிநின்று லெப்படி பயந்தானும்
சொல்லியபடிநீயந்தத் துளபத்தோன்றனைவணங்கி
மெல்லெனப்புலம்பிநின்றால்விமலர்க்குச்சொல்லிதிப்பார்

வசனம்- கேளும் பூமிமாதே இதற்கு ஈசனைநோக்கத்தினால் எப்படி எமன் ஈசனுக்குப் பொல்லாத நியாயஞ்செய் திருக்கிறான் ஆகையால் நீ சவ்வேரிற் குற்றஞ்சொல்ல வேண்டியதில்லை அவனைநினைந்துக் கொள்வதிலும் பலனில்லை இப்பவும் ஒருபாயம் அவர்மைத்துனராகிய விஷ்ணுவைவருந்தினால் அவரீசனுக்குச்சொல்லி எமனையெழுப்பி உன்னைக்காப்பார் நான்போய்வருகிறேன் செல்வுறுவீரயம்மணி.

பூமிதேவி-நாரதருக்குச்சொல்-வசனம்.

அப்படியே போய்வாரும் நாரதமகாமுனிவரே

பூமிதேவிசொல்-விருத்தம்.

புத்தியில்மிகுந்தகர்த்தன் புவிதனையாண்டிருந்த
உத்தமனனையேமறுறங்கவுமாநீதியுண்டோ
மத்தினாற்கடைந்தவெண்ணெய் மாயனையுந்தனுக்கு
குற்றமேதாகிற்செய்து கொடியபாதகனானே

வசனம். அரி கரி வைகுந்தவாசா வெண்ணெயுண்ட வாயனே மகா நீதியுடனே தென்றிசையாண்டிருந்த யேமன் உமக்கேதாகிலும் குற்றத்தைச்செய்து இப்படிக்கானுனோமாயவனே.

பூமிதேவி-புலம்பல்-கண்ணிகள்-இ-ம்-...ரோஸ்- அடதாளம்.

ஐயனேவைகுந்தவாசாயாருடன்சொல்லுவேனிதை — திருமாலே
ஆருடன்சொல்லினுமிதை ஆற்றுவாரோயென்றுயிர் — கரிமாலே
வையகமளந்தமாலேமாயவனேநின்செயலோ — திருமாலே
மாயவாஉன்செயலாகில்மர்மமாயிருந்திடாதே — கரிமாலே
பையவேநமனைக்கண்ணிற்பார்க்கவேபயமாகுதே — திருமாலே
பார்க்கவேயெனக்குமிந்தப் பாதகத்தைவிதித்திட்ட — கரிமாலே
துய்யனேதிருவைவைத்தென் துயரந்தீர்த்திரட்சியுந் — திருமாலே
துயரந்தீர்க்குமாயனே தோற்றுவாயெந்தனுக்கிப்போ — கரிமாலே

பொது- விருத்தம்.

கஞ்சனைவதைத்தவாமன் காசாம்புமேனிநாமன்
வஞ்சராவணனைமாய்த்து வாழுங்கோதண்டபாணி
அஞ்சிடாபூமிதேவி யலறிடுஞ்சத்தங்கேட்டு
பஞ்சவர்தன்னைக்காத்த பாரளந்தோரும்வாரார்

கட்டியக்காரன்சொல்- வசனம்.

அகோ தெப்படியென்றால் பூமிதேவி மகாவிஷ்ணுவைநோக்கிப் புலம்பிக்கொண்டிருக்கும்போது வைகுந்தத்தை விட்டுக்கோபால கிருஷ்ணர் வருகிறவிதங்காண்க.

விஷ்ணுவருகிற-தரு-இ-ம்-அசாவேரி- ஆதிதாளம்.

பல்லவி.

அலையிற்பணியணிகொள் — சயனித்தஜெகசுர்த்தர்
ஹரிநாராயணர்வந்தார் — கர்த்தர்

அநுபல்லவி.

கலையுற்றமதிவைத்தசடிலத்தர் சொல்லிவிட்ட
கனமிகுந்த — விலாசமொழி
மனதுகொண்டு — வினோதமாகவே — (அலையிற்)

சரணங்கள்.

சலசத்தி னொளிபெற்ற திருவதனந்தனபச்சை
திலாதம்முதலிற — றறித்து - இந்த
...வச்சிரமிட்டிழைத்த அழகுற்றபுசகீர்த்தி
...டந்தோளிலே — யணிந்து - நல்ல
தவளக்குடைகவிக்க — கருடக்கொடிபறக்க
...வில்பம்பையொடுசங்க மதிகுஞ்சல்லரிதுங்கம்
சதிர்பூமிபதைநாடி இருக்கட்டுரானைத்தேடி — (அலையிற்)

பூமிதேவி-விஷ்ணுவுக்குச்சொல்கவி.

அடியாரைக்காக்குமையனே சரணம்
படிதனையளந்தபரந்தாமா சரணம்
வடிவுநிலட்சுமிமகுணா சரணம்
மூடிமன்னர்வணங்குமூர்த்தியே சரணம்

விஷ்ணுபூமிதேவிக்குச்சொல்- விருத்தம்.

என்னகாரணத்தினாலேயின்று நீயிப்போக்கொத்த
துன்பத்திலாழ்ந்துமிக்கத்துயரமாய்க்கண்ணீர்சோர
கண்ணியிற்பட்டபட்சி கலங்கிடுவாருபோல
துன்னியவிதத்தைதுயென்முன் சொல்லுவாய்பூமிமாதே

வசனம். வாராய்பூமிமாதே நீ யேதுகாரணத்தினாலே இப்பேர்ப்பட்ட சஞ்சலமுற்று கண்ணிக்குளகப்பட்ட பட்சிபோல பரதவித்துக் கண்ணீர்சோர புலம்பியழுகிறாய் சொல்லுவாய்பூமிமாதே.

பூமிதேவி-விஷ்ணுவுக்குச்சொல்- விருத்தம்.

ஐயனேயென்னசெய்வே னழகியசங்குசக்ரக்
கையனேயெமனையாரோ கலங்கிடவுதைத்துவிட்டார்
துய்யனேபூமிமீதில் சுருண்டுமேவிழுந்தான்பாரம்
ஐயையோசுமைதாளாமலழுகிறேன்காத்திடீரோ

வசனம்.

கேளாய் சங்குசக்கரக்கையனே எமனையாரோ பூமியிலுதைத்துத் தள்ளிவிட்டார் அவன் துடிதுடித்து அங்கண்டுபுரண்டு கிடக்கிறதினால் சுமைதாளாமல் இப்படிப் பரதவிக்கிறேன் என்னைக் காக்கவேணும் வைகுந்தவாசரே.

விஷ்ணு-பூமிதேவிக்குச்சொல்- விருத்தம்.

தவமிருகண்டர்க்குச்சுதனில்லாதத்தாலே
சங்கரனைநோக்கியுவன் றவம்புரிந்தான்
அவரும்வந்துவயது பதினாறுப்பிள்ளை
யளித்திடவாயுளும்முடிந்ததெனப்பிடிக்க
விபாமுடனமனுஞ்சென்றான் பாலன்றானும்
விசனைப்பின்பற்றிடவும்பாசம்வீச
சிவனுங்கோபித்துதைக்கயெமன்வீழ்ந்த
செயலிதுகிச்சல்லவர்பன்னாளும்வாரோன்

வசனம்.

கேளாய் பூமிமாதே மிருகண்டன் பிள்ளையில்லாமல்சங்கரனை நோக்கித்தவம் புரிந்து பதினாறுவயதுள்ள ஒருபுத்திர வரத்தைப் பெற்றான் அப்புத்திரனுமிந்த வயதாயிற்றென்று சங்கரனைத் துதித்திருக்குஞ் சமயத்தில் எமன்புறப்பட்டு பிடிக்கச்சொல்லுகையில் அந்தமார்க்கண்டன் அச்சிவனின்பின்போய்க் கட்டிக்கொள்ளவே பாசம் இருவர்மீதிலும் வீசவே சிவனுக்குக்கோபம்பிறந்து எமனையுதைத்தார் அவன்பூமியிலவிழுந்

தான் ஆசையால் நீ அந்தச்சிவனிடம்போய்ச்சேரு நானும்வருகிறேனென்று பிமாதே (அப்படியேசெய்கிறேனன்னவருந்தபதியே)

பூமிதேவி-மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்,

அப்பனேமார்க்கண்டாநீ அறிவுள்ளமைந்தனுரோ
இப்படியேமன்விழுந்து மிருப்பதுசரிதானோதான்
எப்படிப்பாரந்தாங்கி யேங்குவேன்சங்கரர்க்கு
நற்படியாகச்சொல்லி நமனைமெயெழுப்புவாயே

வ-ம். அப்பாமார்க்கண்டசெல்வமே இப்படிக்குயெமன் வெகுநாளாய் பூமியில் விழுந்திருப்பது உனக்குச்சரிதானு இதனுலேபிறப்பேயொழிய இறப்பில்லாமற்போச்சுதே நானெத்தனைநாளைக்குப் பளுவைச்சுமந்துக் கொண்டு வருத்தப்பட்டிருப்பேன் எப்படியாகிலும் யீசருக்குச்சொல்லி எமனையெழுப்பி என்பாரந்திர்க்கவேணுமப்பாமார்க்கண்டசெல்வமே

மார்க்கண்டன்-பூமிதேவிக்குச்சொல்-விருத்தம்.

தாயேயுன்வாய்மொழிக்குத் தடையுண்டோவடியேன்மெய்யே
தாயேயிச்சண்டன்செய்த சதியதுதெரிந்திருப்பாய்
தாயேநானெப்படிக்குச் சங்கார்தனக்குச்சொல்வேன்
தாயேயிப்பூதநாதன் றன்னைநீவணங்குவாயே

வ-ம். கேளுந்தாயே இந்தயெமன்விழுந்து வெகுநாளாயிற்று நீயும்வெகுநாளாய்தான் வருத்தப்படுகிறாய் இந்தயெமன்செய்திருக்கப்பட்டது மகாபொல்லாதஙியாயந்தானுந்தியெப்படிசொல்லுவேன் நீயீசனை மிகவும் வருந்தி நின்றால் நானுஞ்சொல்லியெமனையெழுப்பிவிடுகிறேனம்மா

பூமிதேவிசொல்-கவி,

நேசனேசரணம்விஸ்வாசனேசரணங்கை
லாசனேசரணமென்னீசனேசரணம்

பூமிதேவிசொல்-பலம்பல்-தரு-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்

மார்க்கண்டர்க்காகவே மறலியேற்கோபித்து
மண்மீதில்விழச்செய்தீர் சிவனே

ஏர்க்காதுயென்னைநீ யிப்படிப்பார்ப்பது
யேழைக்கிதங்குமெந்தன் சிவனே

கருங்குருவிக்கன்று காட்சிக்கொடுத்ததுபோல்
கர்த்தனேயெனக்காரும் சிவனே

பெருங்கிடாபிதேறும் பேயனிப்படிசெய்தாற்
பெண்ணானாெனன்னசெய்வேன் சிவனே

மெ

பெண்ணுக்கிரங்கியபேதைமைதீராமே
　　பேசாதிருப்பதென்ன　　　　　　சிவனே
மண்ணுக்குள்விழுந்திடுமறலியையெழுப்பியென்
　　வலதுபஞனைத்தீர்ப்பீர்　　　　　　சிவனே

பூமிதேவிசொல்-விருத்தம்,

பூமியைச்சுமக்கமாட்டேன் புனிதனேசரண்மையா
காமனையெரித்தகண்ண கடவுளேதயவுடனுந்து
யேமனையெழுப்புமையா ஈசனேகையிலைவாசா
தாமதஞ்செய்தால்பாரந் தாங்கவுமாட்டேனையா

வ-ம், அரகரா காமனையெரித்தகண்ண மார்க்கண்ட சகாயர்னென்து தோள்கள் இரண்டும்விட்டுப்போகுது இன்னம் தாமதஞ்செய்தால்இந்தப் பூமியைச்சுமக்கஎன்னாலே ஆகிறதில்லை சீக்கிரத்தில் யெமனை யெழுப்பியென்பாரந்தீரும் கர்த்தனே

சிவன்-பூமிதேவிக்குச்சொல்-விருத்தம்

இரங்கிடும்பூமிமாதே யின்னமும்வலுமைதாரேன்
தாங்கமேரூழும்பாரிற் சண்டனேவேண்டாங்கண்டாய்
வரங்களுமதிகந்தாரேன் மனஞ்சலியாதிருந்து
பெருங்கருணைகளைப்பெற்று பெருக்கமாய்வாழ்ந்திடாயே

வ-ம், வாராய்பூமிமாதே யிந்தசண்டனே வுலகத்திலாகாது உனக்குவேணுமென்றால் இந்த பாரைச்சுமக்க இன்னம் வலுமையைக்கொடுத்தேன் மனஞ்சலியாதிருமம்மா பூமிமாதே

பூமிதேவி சிவனுக்குச்சொல்-விருத்தம்.

தோணதபுத்தியாலே துரிதமாயோடிவந்து
வீணகவுதையும்பட்டு வெட்கமும்கெட்டான்தேவா
காணுமென்றிருந்தை வருகாதுயினிமேற்பாரீர்
காணுதுகண்டாப்போலே காலனையெழுப்பிடீரே

வ-ம், சுவாமி தேவரீர்சொல்லவந்தது மெய்யே யிந்தயேமனுக்காக வல்லவோநான் வந்தது இல்லாவிடில்நான்வந்து உம்மை வருத்தப்படுத்தவேண்டியகாரணமில்லையே இப்பவும் எனபாரம் நான்தீர்த்துக்கொள்வது சரியாயிராது அது நீதியல்ல தர்மமுமல்ல ஒருவரைப்பற்றிஓரகத்திரென்பது சாஸ்திரம் சுவாமிக்குஇந்தசண்டன் என்னகுற்றஞ் செய்திருந்தபோதிலும் அடியாளைப்பற்றி மனம்பொறுத்து யேமனையெழுப்பி என்னை ரட்சியுஞ் சுவாமி

மஹாவிஷ்ணு-சிவனுக்குச்சொல்-விருத்தம்,

மான்மழுசூலங்கொண்ட மயேசனேபூமாதேவி
தானுமேநெடுநாளாகச் சண்டன்பாரத்தைத்தாங்கி
யேனமுகிறாள்நமக்கு யிழிவாகுமவனையிப்பொ
காணமாயெழுப்பிக்கல்ல கட்டளையிட்டனுப்பீரோ

வசனம் கேளுங்கயிலாசபதி இந்தப்பூமிதேவியானவள் எமன்பளு வைத்தாங்காமல் வருத்தப்படுகிறது நமக்குப்பழியாகும் அவனையெழுப் பி அவனுக்குநல்ல புத்திசொல்லி அனுப்பி இந்தப் பூமிதேவியினுடைய பாரத்தையுந்தீர்ப்பீர் கயிலாசபதி.

சிவன்-மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்.

அப்பனேமார்க்கண்டாகேள் அருமையாம்பூமாதேவி
செப்பினமொழிகேட்டாயா செல்[illegible]புந்தனுக்கு
ஒப்பிதயாயிருந்தா லுயிர்வதைசெய்யுகின்ற
தப்பிதநமனெழுந்து தான்வரச்செய்குவேனே

வசனம்- வாராயப்பா மார்க்கண்டா இந்த பூமிதேவிவந்து இந்நேரஞ் சொன்னசொல்லும் விஷ்ணுவானவர் சொன்னதுங்கேட்டாயா இதுவுன க்குச் சரியாயிருந்து உத்தரவு கொடுத்தால் எமனையெழுப்பிவிடுகிறேன ப்பா மார்க்கண்டா.

மார்க்கண்டன்-சிவனுக்குச்சொல்-விருத்தம்.

அத்திமாமுகனைப்பெற்ற ஐயனேதேவருக்கும்
சித்தமெப்படி போபூமா தேவியாளோடிவந்து
மெத்தவும்வருந்துகின்றாள் மெய்யனேயேமன்செய்த
குற்றத்தையெண்ணவேண்டாங் கோலதக்காயெழுப்பிடீரே

வசனம்- சுவாமி அந்த எமனைபாராவிட்டாலும் இந்த பூமாதேவியை ப்பார்க்கவேணும் மேலும் பெண்சிவனுகையால் எமனை எழுப்பி இந்த அம்மாளுடைய பாரந்தீர்க்கவேணும் கர்த்தனே அரகரா அரகரா.

சிவன்- யமனுக்குச்சொல்- கவி.

கெட்டபுத்தியினைத்தவனே க[illegible]ாவிலேறிவந்தவனே
துஷ்டபுத்தியைவிட்டுவிட்டுசுகமாயெழுந்துவருவாயே

எமனெழுந்து- சிவனைத்தோத்திரஞ்செய்கிற-தரு-

இ-ம்- புந்நாகவராளி- அடதாளம்.

பல்லவி.

ஆண்டுகொண்[illegible]ருளே உன்திருவடி
வேண்டிநின் றேனே

அநுபல்லவி.

தாண்டவபொருளாண்டவனும்நீ
தோண்டவருமதிபுண்டநாயகர் (ஆண்டு)

சரணங்கள்.

ஆத்திருடிய நேத்தியசங்கரா
போற்றினேனெனைக் காத்தருளுமினி (ஆண்டு)

பூதனுதனே யேதுசெய்கிலென்
மீதிலருள்புரி ஆதிமூலமே (ஆண்டு)

நாகபூஷண லோகயீசனே
தோகையையிடப் பாகம்வைத்தவா (ஆண்டு)

எமன்-சிவனுக்குச்சொல்-கொச்சகம்.

சத்தியைச்சுமந்திருக்குஞ் சங்கரனேநானுமிப்போ
பத்தியில்லாச்செய் குற்றம் பொறுத்தருளுமெய்ப்பொருளே
எத்தேசகாலமுமங் லிருந்தாசாள்வதற்குக்
கர்த்தனேகிருபைபு கயில சவாசகனே

வசனம்- அரகராமயேசா அமுதகண்டேசா திருக்கடவூர்நாதா செய மார்க்கண்டர்க் குபகாரா அடியேன் பத்தியில்லாமற் செய்தகுற்றம்பொறுத்து எப்போதும்போல அரசுக்குச் செலவுதரவேணுங்கர்த்தனே.

சிவன்-எமனுக்குச்சொல்- கொச்சகம்.

அண்ணலெனப்பணிந்தவனே யாங்காரங்கொண்டவனே
எண்ணுந்துதிப்போனே யீசனடியாரையினி
திண்ணமாய்த்தீண்டாதே தென்றிசைக்கேநீசென்று
நண்ணுயுன்னுக்கினையை நடத்திக்கொள்வாய்நமனே

வசனம்- அடாவாடாயமா உன்னைக்கொஞ்சத்தி லெழுப்பப்போகிறதில்லை இந்தப்பூமிதேவிக்காக யெழுப்பினேன் இனிமேல் நீ சிவனடியார்களைத் தீண்டாமல் உன் அதிகாரப்படிக்குப் புத்தியுண்டாயிருபோயவருவாய் எமா.

பூமிதேவி-சிவனுக்குச்சொல்- பரணி.

கடவூர்தனிலேயமர்ந்திருக்கும் பிலேவாசாவிஸ்வாசா
அடியாள்தனக்கென்னபுத்தி அருளுமருளும்சங்கரனே

சிவன்-பூமிதேவிக்கு சொல்-பரணி.

சங்கரனேயென்றனைநாடிச்சரணஞ்செய்தேவருமாதே
சிங்கா நீபோயுன் திருமாளிகைக்குள்வாழ்வீரே

மார்க்கண்டன்சொல் - வசனம்.

அரகரா அரகரா அரகரா அரகரா
அரகரா அரகரா அரகரா அரகரா

எமன் - கட்டியக்காரனுக்குச்சொல் - விருத்தம்.

ஓடியெடுத்துமெள்ள வொதுங்கியேகொக்கரிக்கும்
ஆரடாகட்டியரோநாம் அரசுக்குவந்தோமென்று
வீருடனேடியந்த வீரபாகுக்குச்சொல்லி
சிருடன்மேளத்தோடு சீக்கிரமழைத்துவாரீர்

வசனம்- ஆரடா அடாகாலகட்டியரோ நாம் எப்போதுபோல் அரசுக்குவந்தோமென்று இந்த அண்டாண்டமும் அறியும்படி பறையறைவிக்கவேணும் வீரபாகுவை அழைத்து வாருங்கள்.

கட்டியக்காரன்-வீரபாகுக்குச்சொல்-விருத்தம்.

சாரியாச்சென்றமன் றனேவந்தாரரசுக்கு
வீரபாகுவேநீதான் மேளத்தோடுவருவாயே

வீரபாகுவருகிற-தெம்மாங்கு-தரு.

செல்விபுளிச்சக்கண்ணி நல்ல சிங்காரமானதோர் பூனைக்கண்ணி அடி பல்லைபிளிச்சக்கண்ணி எந்தன் பட்சத்துக்கானதோர் இல்லிக்கண்ணி என் தெந்தினனே தென்னனே

சூறைமுலைச்சியடோ நல்ல சுண்டுமிகுத்ததலைச்சியடோ சிறுநுனைச்சியடோ எந்தன் சித்தத்துக்கானதலைச்சியடோ தெந்[illegible]னனே தென்னனே

நாரைக்கழுத்தியடோசொரி நாயத[illegible]போல[illegible] புழுத்தவளே ஊரைப்பழித்தவளே மாட்டு உள்ளங்கால்[illegible]னுகொழுத்தவளே தெந்தினனே தென்னனே

அஞ்சாதொடப்பக்கட்டை நல்ல அழகாகவந்த வொதியங் கட்டை பூஞ்சிபிடித்தக்கட்டை உனக்கு போங்காலமேதுக்குநாரக்கட்டை தெந்தினனே தென்னனே

கோடுவந்தடிவாயிஉந்தன்கொங்கையிரண்டும்பருசாகி
தேடுகிறாய்போடிசும்மா திகைக்காதேநீவாபெருவாயி (தெ)
சொட்டைவிழுந்தமூக்கி உந்தன் தோளுக்கிசைந்தெம்பெரிசாகி
கொட்டுமேளமாககிஎங்கும் கூச்சலிடுகுதுவறபோக்கி (தெ)

வண்ணான் வீட்டுக்கழுதைநீ வஞ்சனைசெய்துமப்பொழுதே
விண்ணனமிட்டழுதே என்னை விட்டுபோவதுண்டோயிப்பொழுதே தெந்தினனேதென்னனே

பொக்கெனக்கெல்லாண்டிஉந்தன் புருஷனெங்கேவிட்டுப்போனாண்டி
பக்குவமிதுதாண்டிஉன்னைப்[illegible]பார்த்துப்பொடியவன்போட்டாண்டி

தெந்தினனே தென்னனே.

இதுவும்- [illegible]ரபாகுசொல்-தரு.

ஆண்டைகளேயென துமிகவரிதானகுலத்தொழில்கேளாண்டே நீண்டதோர்தடியெடுப்பேன் அந்[illegible]பிடித்தடிப்பேன்- வேண்டும்விருதுதரிப்பேன்- வெகு- [illegible]வடிக்கையாகநடைநடப்பேன - மாண்டபிணத்தையெடுப்பேன் - தன[illegible]- வகையாகவேயிடங்கொடுப்பேன் - ஆண்டை.

எங்கும்பறையறை[illegible]வன் - மிக்க - யிலகும்நான்மறைமுறைதெரிவேன
சிங்காரப்பதம்புரிவேன்-கொட்டி - ய[illegible]டிகருமறைமுறைதெரிவேன்
சுங்காசநான் திரி[illegible]வன் - எந்தன் - சு[illegible]த்தாரகாசகள்நான்குறையேன
மங்களமெடுத்தரிவேன்- ஆண்டைவகைவகையாக[illegible]ங்கொடுப்பேன

ஆண்டைகளேகேளென்

வீரபாகுசொல் - விருத்தம்.

தும்புறேனடியென்னண்டே துாரதுரைக்கபா ஆண்டே
தும்புறேனடியேன்வீர தோட்டிதான்மேனத்தோடு
தும்புறேனேயழைத்த தேனையாயேமராசே
தும்புறேன்சொல்லுட்சுவாமி-சொற்படிசெய்குவேனே

வ-ம், சாமிசாமிதும்புறேன் என்னையழைத்தகாரியம் அடியேனுக்குச் சொல்லவேணுஞ்சாமி ராஜபரமேஸ்வரா

கட்டியக்காரன்-இராஜனுக்குச்சொல்-பரணி

சண்டாசரணத்தேவரிருத்தாரப்படியேமேளமாட்டிக்
கொண்டேவீரபாகுகொலுமுன்வந்தான்மன்னவனே

இராஜன்-கட்டியக்காரனுக்குச்சொல்-விருத்தம்

கொலுவினிலெச்சரித்துக் கட்டியரேகேள்
வலுமையாய்ப்பாசஞ்சூழ மசானமதனிலிருக்கும்
தலைமையாய்வீரபாகு தனக்குநுணைவந்தேனென்று
சொல்லெங்கும்பறையறைந்து துரிதமாய்வரச்சொல்வீரே

வ-ம், ஆரடா அடாகொலுமுன்னே யெச்சரிக்குங்கட்டியக்காரரே வந்தவீரபாகுவுக்குநானெப்போதும்போல அரசுகருவந்தேனென்றுசொல்லி இந்தஅண்டாண்ட நவகண்டங்களிலு முண்டாகிய எண்பத்துநான்குநூறாயிரஞ்சீவராசிகளும் அறியத்தக்கதாக பறையறைவித்து வரச்சொல்லுங்களப்பா

கட்டியக்காரன் வீரபாகுவுக்குச்சொல்-விருத்தம்

கொட்டுமேளத்தைநாட்டிக் கொண்டுவந்தவீரபாகு
கட்டளைசொல்வேனத்தைக் காதுறக்கேளடாநீ
திட்டமாய்க்காலனேதென் றிசையாளவந்தானென்று
பட்டணமெங்குமோடிப்பறையறைவித்துவாராய்

வசனம்- ஆரடா அடாவீரபாகு எப்போதும்போல முன்னாண்டயேமன் தென்றிசையாள வந்தானென்று அண்டாண்ட நவகண்டங்களிலுண்டான எறும்புமுதல் எண்பத்துநான்கு நூறாயிரம் சீவராசிகளுங்கேட்டு அதிசயப்படும்படி பறையறைவித்து அதிசீக்கிரத்தில்வாடா வீரபாகுவே.

வீரபாகு- கட்டியனுக்குச்சொல்-கவி.

அண்டமுங்கேட்க புவனியுங்கேட்க
தண்கடலொலிபோல் சாற்றுவேன்பறையை

தோட்டி-பறைகொட்டுகிற-தரு-தெம்மாங்கு

கேட்டிரோகேட்டிரோ கேளுங்கள்கேளுங்கள்
குலுகுலுகுலுசில்லுகிட்டாங் ஆங்கடிசில்லாம்
மின்னாண்டிருந்தயெமன் முத்திபெற்றுவந்தானென்று
மூட்டுப்பூச்சியறியப்பறைபோட்டு வரச்சொன்னனே
குலுகுலுகுலுசில்கிட்டாங் ஆங்கடிசில்லாம்
அந்தகனெப்போதும்போல அரசுசெயவந்தானென்று
ஆடுமாடறியப்பறைசாடி வரச்சொன்னனே
குலுகுலுகுலுசில்லுகிட்டாம் ஆங்கடிசில்லாம்

இல்லாதிருந்தயேமனேழுந்தோடிவந்தானென்று
எரும்புமறியப்பறைவிரும்பிடச்சென்றனே
குலுகுலுகுலு சில்லுகிட்டாங் ஆங்கடிசில்லாம்
ஒப்பாதபினழசெய்து உதைபட்டுவந்தானென்றி
ஊராரறியப்பன்றகூறி வரச்சொன்னனே.
குலுகுலுகுலு சில்லுகிட்டாங் ஆங்கடிசில்லாம்

தோட்டிச்சொல்-கவி,

மகாராஜாராஜெ மகிடிலலாப்பறையை
சகலருமறியச்சாத்திவந்தேனே

வ-ம், சாமிஅப்படிக்கேசகலருமறிய பறையறைவித்துவந்தேன் சுவாமி

கட்டியக்காரன்-இராஜனுக்குச்சொல்-கவி

தனாமகப்பிரியே சொன்னசொற்படியே
பறையறைவித்துப்பறையனும்வந்தான்

வ-ம், சரணஞ்சரணம் தென்றிசைக்கதிபனன எமதர்மராசனேஅப்ப டியேதோட்டி பறையறைவித்து நின்றனேயாமகாராசனே

இராசன்-கட்டியக்காரனுக்குச்சொல்கவி,

நீட்டுபோட்டான நெடியசேவகரே
தோட்டியைப்போகச் சொல்லிவிடுவீரே

கட்டியக்காரன் வீரபாகுவுக்குச்சொல்-கவி,

பணிந்திடும்வீரபாகுவேகேளாய்
தணிந்திடும்சுடலை தனக்குநீடவாய்

வ-ம், ஆரடாஅடாவீரபாகுவே மகாராஜன்உன்னைச் சுடலைக்குப்போகும்படியாய்ச் செலவுகொடுத்தார் போய்வாடாவீரபாகுவே

எமதர்மராஜன் கொலுவிலிருந்து கடவுளைத்துதிசெய்கிற

விருத்தம்,

தர்மமேதர்மமுந்த தாரணிதழைக்கவேணும்
தர்மமும்மாரிபெய்து சதாகாலம்வாழ்கவேணும்
தர்மமாயெனதுசெங்கோல் தாழ்வில்லாதிருக்கவேணும்
தாமமேபெருகவேணுஞ் சங்காபோற்றிபோற்றி

மங்களம்

விருத்தம்

கதிதருகும் அமூர்தலிங்கேசருக்கும்
கமலபதமபிருமி யம்மனுக்கும்
விதியாகதவம்புரிந்த மிருகண்டற்கும்

விளங்குஞானசத்திரமும் மார்க்கண்டற்கும்
மதிகதிருழக்கிலிவ் விலாசந்தன்னை
மகிமையுடனேடிப்பாடிக்கேட்போர்க்கும்
நிதிபெரிகிளன்றுளுந் தழைத்துவாழ்க
நிலைமையுடன்மங்களமு நிகழ்த்துவோமே

தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்,

பல்லவி

மங்களம்-ஜெய-மங்களம்-ஜெயமங்களம்-மங்களம்

அநுபல்லவி,

மங்களம்விநாயகர்க்கும் வாழும்வேலவர்க்கும்
வானோர்கதிமதிக்கும வளஞ்சேர்கலைமகட்கும் (மங்க)

சரணங்கள்

சந்திரசேகாருக்குஞ் சத்திபராபரைக்கும்
உந்திபூத்தவனுக்கும் ஞானிருமிலட்சுமிக்கும்
ஓங்குமாமறைபுற்ற வனுக்கும்
பாங்கினைச்சேரிந்திர னுக்கும் (மங்க)

ஆசைதனைவெறுத்த அள்வில்லாமுனிவர்க்கும்
பூசைமிகவெங்கும்ஓங்கு மிருகண்டர்க்கும்
ஒப்பில்லாஞானச் சதிராடற்கும்
பொற்பார்ந்திடுமார்க் கண்டர்க்கும் (மங்க)

மலைவில்லையுமிடாடித்த மானிடரேந்திபற்கும்
நலமுள்ளவானந்தபைரவி யபிருமியற்கும்
நலமாய்த்தாய் வாசித்தவர்க்கும்
செய்கையாகக் கேட்டவருக்கும் (மங்க)

வாழிவிருத்தம்,

சந்திரசூரியர்கள் சதுர்மறையும்வாழி
சகலதேவர்கள்வாழி தவத்தோர்வாழி
மந்திரஞ்சேர்மிருகண்ட முனிவர்வாழி
மங்கையெனுமஞானசதிரும்வாழி
விளங்கியுள்ள மார்க்கண்டமுனிவர்வாழி
மேலானதிருக்கடவூர்நகரம்வாழி
அந்தமுள்ளசரிதை தனையச்சியற்று
சுகவிரஞ்சனிமுத்திராக்ஷரவச்சுக்கூடம்வாழி

மார்க்கண்டேயர்விலாசம் - முற்றுப்பெற்றது.

3351